பேசுஞ்சவுசமெடுத்துரைக்கிற் பிறழ்தலில்லாவகச்சவுச
மேசவில்லாப்புறச்சவுச மென்னவிரண்டாமகச்சவுச
மாசையின்மையெனுமண்ணா லரியஞானப்புனலில்வினை
மாசின்றாகவுள்ளத்தை மண்ணலெனநான்மறைகூறும் ௭

உலகமெடுத்தபுறச்சவுச முரவுத்தெண்ணீரிடைப்படிதன்
மலவின்றாகமுதியமறைவடித்த தனிமந்திரமுணர்தல்
கலைவெண்டிங்கட்பசுங்கொழுந்து கான்றநிலவுக்கதிர்மழுங்க
நிலவுதிளைக்கும்வெண்ணீறு நிலவப்புனைதலெனப்படுமால். ௮

தவமென்றுரைத்தறிறம்பாது சரிக்குஞ்சாந்திராயணமா, நவை
தீர்நெறியின்வந்ததனை நயத்தன்மகிழ்ச்சி யாகுமாற், செவமஞ்
செழுத்துப் பிரணவஞ்சீர் திகழ்நான்மறையீங் கிவையுரைத்த,
வெவரும்புகழுஞ்சிவப்பிரணி தானமிறைவன்றனைநினைத்தல். ௯

...விலாசனங்க டெரிந்துரைக்கிற் பதுமாசனஞ்சொத் திகைமற்
...பாதபந்தமுறு தீதின்றுயர்ந்தசமசானு [ரைக்
...வெனு மிவைகண்முதலாமதியிஞ
...மறையோ ரியற்றுமெழில்சேராசனமே ௰

...சனங்கணன்கா யியற்றவெய்திடுமேன்
...வருதுன்பந்துயின் மற்றிவைகள்வாராவா
...ராணாயாமமுதலியோகம னைத்துமடையுமென
...லரோன்புகல்கின்ற மறையோர்நான்கும்வழங்குமால். ௧௧

...ல்பிராணவாயுவினைச் செறித்தல்பிராணாயாமமா
...ச்சாலதனோடபானனெனும் வாயுவதனையெழில்பெறவே
...ாய்ந்தமையவடக்குவதும் பிராணாயாமமென்றறைவார்
...விமுதறடிந்து நீதிறவத்திரெழுகுவோர்

மந்தப்பிராணாயாமம்வரில் வேர்வுதோன்றுமத்திமமா
மந்தப்பிராணாயாமம் வரிலலையுமேனியதன்பின்னே
சிந்தைதமகிழவுத்தமமாம் பிராணாயாமஞ்சேர்ந்திடிலோ
விந்துநிலத்தினின்றுமெழுந் திடுமாலியாக்கையியம்பிடினே. ௧௫

தெரித்தமறைமந்திரமோதிச் செய்யும்பிராணாயாமத்தைக்
கருப்பப்பிராணாயாமமெனக் கற்றல்செய்வார்சாசின்றி
யுரைத்ததனிமந்திரமுள்ளத் துணராதியற்றுகின்றதனை
விரித்தார்கருப்பமிலதாய பிராணாயாமமெனமிக்கோர். ௧௬

புறத்திலெழுமேலியங்குமாற் பிராணவாயுபொருந்துடலிற்
செறித்தங்குறையுமபானனெனும் வளிக்கீழாகிச்சென்றிடுமா
னிறுத்தவியானன் மெய்முழுதுநிறைந்தேயுறையுமியாக்கையினி
லொறுத்துஞ்சந்திகளொடுக்கஞ் செய்தேயொடுங்குமுதானனே.

இயல்பாயிருத்துமியாக் கைதனைச்சமானனென்னவியங்குவளி
யயலாநாகனெதிரொடுக்குங் கூர்மனிமைத்தல்செயுமடைவே
செயிர்தீர்தொழியக்கிரிகரனுங் காற்றுத்தும்மல்செய்யுமாற்
பயிலுந்தேவதத்தனெனும் வளி * யாவித்தல்பண்ணுமால். ௧௮

* ஆவித்தல் - கொட்டாவிவிடுதல்.

உடலைமிகவும்வீங்குவித்தாங் கொலித்தேயுறையுந்தனஞ்சயன்ம
றடைவேயிவ்வாறுறைவளிகள் செய்யுமிடர்வந்தடையாவா [ற்
லிடர்தீர்பிராணாயாமத்தை யறிந்தாங்கியற்றிலென்றுமான்
மடமானோக்கெங்குறையு மழுவாளிறைவன்றென்றாலே ௧௭

கடுங்கானகத்தினிடைவழங்கு களிற்கட்சீற்றக்கடாக்களிற்றை
மடங்கலேற்றைப்பன்றளில் வணங்கவடக்கும்வகைபோல

வடைந்தேயியங்குபிராணவளி யதனையடக்கல்வேண்டுமென
நொடிந்தார் தவத்தாலுளந்தெளிந்துநோன்மைசான்றமுனிவோ
[ரே.

விடயவழிபோம்புலன்முழுது மீட்டல்பிரத்தியாகார
மொடியாதுளத்தைத்தெளிவித்துநிறுத்தலுரைக்குந்தாரணையா
முடியாப்பொருளையுள்ளத்துண் முன்னிநினைத்தறியானமெனப்
படைவாளரவமுடித்தசடைப் * பரமன்றொன்னூல்பகருமால்.

* பரமன்றொன்னூல் - வேதமாகமமிரண்டும்.

மூலாதாரத்திடைக்கரிய முகில்கீண்டொளிருங்கதிர்மின்றுப்
போலாயிதழ்நான்கமைந்துதிகழ் பூந்தண்கமலமலர்மேலு
மேலாஞ்சுவாதிட்டானமிசை விளங்குமதியமெனநிலவு
காலாமலருமிதழாறு கவினுங்கமலமலர்மேலும். ௨௦

உந்திமிசைவாளிரவியென வொளிருமிதழீரைந்தியைந்த
வந்தண்கமலமலர்மேலு மணிசேர்ந்திலங்குமாகத்து
வந்துதானவொளிமழுங்க வயங்கும்வெள்ளையொளிதரும்பி
சிந்துமிதழீராறுடைத்தாய்த் திகழுங்கமலமலர்மேலும். ௨௧

உருவக்கழுத்தின் மிசையிருள்கெட் டோடவெறிக்குஞ் செஞ்சி
றொரியிற்றிகழுமிதழீரெட் டியைந்தகமலமலர்மேலும் [வைக்கே
புருவநடுவிலெறிபசும்பொன் போலப்பிறங்குகதிர்க்கற்றை
சொரியுமிதழோரிரண்டுடைத்தாய்ச் சுடருங்கமலமலர்மேலும்.

பன்னற்கரியபளிங்கொளிபோற் பவளவொளிபோற்கதிரொ
ளிபோன், மின்னினொளிபோன்மதியொளிபோல் விளியுஞ்சுடர்
செய்விளக்கொளிபோ, லுன்னற்கரிய பரஞ்சுடரை யுள்ளவியுள்
ளியுளமுருகித், தன்னைமறந்துதலையிருத்தல் சமாதியெனலாஞ்
சாற்றுங்கால். ௨௩

முடியாயோகமோரெட்டு முயன்றோர்வெள்ளைமுள்ளெயிற்று
விடவாளரவமுடித்தசடை விமலனடித்தாமரையடைவா
ரிடையூறுளவாலியோகநெறி யியற்றற்கவையுமிசைப்பனென
வொடியாவினையின் முதன்முருக்கி யுயர்ந்தகுருதமுனியுரைப்பான்

அட்டாங்கயோகமுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௫௦.

ஒன்பதாவது

யோகவிக்கினமுரைத்த வத்தியாயம்.

வெய்யநோய்சிரத்தையின்மை விளம்பியபிரமாதந்தன்னோ
டையுறல்விடயத்திச்சை யான்மனமப்பிரதிட்டை
மையல்கூர்தருபிராந்தி தெரிசனமாத்திரலாகா
தெய்துமுவகையதுன்ப மெனுமிவையிடையூறாமால். ௧

வளிமுதன்மூன்றினானும் வருதனோய்வீடுபேற்றிற்
கிளர்வுறுவிருப்பமின்மை சினந்தவச்சிரத்தையாகுந்
தெளிவுறுசமாதிக்கேற்ற காரணந்திறம்பாதாற்று
முளமுருகிகழ்ந்திருத்த லுணர்த்திடும்பிரமாதமாமால். ௨

இதுகொன்மற்றதுகொலென்ன வெண்ணுறுதலையப்பாடாம்
புதுவதுகண்டு வேட்டல் புணையுறுவிடயத்திச்சை
ஆதையுறுமகிழ்ச்சியின்மை யான்மனஞ்சூழ்தியான
மதியினிற்பற்றாதாகி மாயுறலப்பிரதிட்டை. ௩

ஒழியவுடம்புதானென் றுளத்தினினைத்தற்றனை
நிலினிற்றிகழ்பிராந்தி தெரிசனத்தெரிக்குங்காலை
யாதிதெய்விகமற்றாதி பவுதிகமவற்றினோடு
மேதகுமொடுற்றவாத்தி யான்மிகமிடர்மூன்றாமால். ௪

கூறியவிவைகளன்றிக் குறித்துணருபசருக்க
மாறுளவவற்றினும மாய்ந்தெடுத்துரைக்குங்காலைத்
தேறரும்பிரதிபைதேவ தெரிசனஞ்சிரவணம்வார்த்தை
யீறிலாவாசுவாத மிரசனையென்பவாமே. ரு

மறைந்தது நுண்ணிதாகி யிருப்பதுமருவியெங்கு
முறைந்ததுஞ்சேயதாகி யுள்ளலுமுள்ளலாகா
திறந்ததுநிகழ்வதூஉமற் றெதிர்வதுமிவைகளெல்லாந்
திறம்பலிலுள்ளந்தன்னாற் றெரிவுறல்பிரதிபையாமால். சு

சேட்டிளம்பருதியென்னத் திகழ்வுறுதேவற்காண்ட
லீட்டருஞ்சிறப்பிற்றேவ தெரிசனமென்னலாமாற்
கேட்டதோரொலியினாலே கிளரொளிப்பொருளுணர்ந்து
நாட்டுதல்சிரவணமென்ன நான்மறைபகருமாதோ. எ

உரைபெறுவார்த்தைவேத மோதுதலொலிநீர்சூழ்ந்த
விருநிலவரைப்பில்வானி லெண்டிசைமருங்கின்மேய
விரையொடுசுவைகளியாவும் விளங்குமாறறிதருனே
யரிதுணராசுவாத மென்றெடுத்தறைவரன்றே. அ

மண்புனல்கனலிகாற்று வான்மனமகங்காரத்தோ
டொண்சுடர்பிரமமென்ன வகுத்தெடுத்தோதப்பட்ட
வெண்பொருட்குணங்களெட்டு மிரசனையென்னலாகும்
பண்புடனோரொன்றெட்டாய்ப் பாற்படவிளங்குமாதோ. கூ

வேறு.

அலகையெண்குண மகனிலக்குணங்களாமரக்கர்
மலைவிலெண்குண மறிதிலாக்குணங்களாமியக்கர்
நிலவுமெண்குண நீள்கனற்குணங்கள்கந்திருவ
ருலைவிலெண்குணம் வாயுவின்குணமெனவுரைப்பார். க0

விண்புரந்தினிதளித்தருள் வெந்திறல்வேந்த
னெண்பெருங்குணம்விசும்பினன் குணமெனவிசைப்பார்
தண்கதிர்க்கலைமாமதி தழைத்த வெண்குணங்கள்
பண்பிறுய்ந்திடன்மனத்தினெண் குணமெனப்பகர்வார். ௧௧

பெரியமாதவப்பிரசாபதி குணங்களோரெட்டு
மரியதாமகங்காரநற் குணமெனலாமால்
விரைசெய்நாண்மலர்விளங்குறு பிரமனெண்குணமு
முரையிறந்தொளிர்பிரமநற் குணமெனவுரைப்பார். ௧௨

நரையிலெண்குணமடைந்தவ னைவற்றொடுதும்பி
விரிபுனற்குணமெய்திலீ ரெண்குணமேவு
மெரியியற்குணமெய்தின்மூ வெண்குணமெய்தும்
பொருவளிக்குணமெய்திறு லெண்குணம்பொருந்தும். ௧௩

உயருநீளிருவிசும்புறு குணத்திரேறொன்றி
வியலலாகுமையெண்குண மிசைத்திடுங்காலைச்
செயிரிலாதநன்மனத்துறு குணத்தொடுஞ்சேரி
லயர்விலாதவாறெண்குண மடைந்திடுமென்றே. ௧௪

மறுவிலாவகங்காரத்தின் மன்னியகுணங்கள்
செறியிலெய்துமேழெண்குணந் தெரிந்தினிதுரைக்கி
னறிவரும்பிரமத்தினன் குணத்தினையடையி
னெறியினெய்துமெண்ணெண்குண நிகழ்த்திடன்மாதோ. ௧௫

குறுகலோங்குதல் குறுகைடக்குழவிசல்லுருவம்
பெறுதல்வெண்ணளை பிறங்கியமுப்புருவெடுத்த
லறையுநால்வகைச்சாதியின் வடிவொடுமைதன்
மறுவினற்பெரும்பூதத்தின் வயங்குருவெடுத்தல். ௧௬

பொருதிரைக்கட லுடுத்தகல்புடவியோரேழு
மொருகரத்தினிற் றாங்குதலுரைத்தமாநிலத்தின்
விரியுமாற்றமெய் தாங்குதல்விளம்புமற்றவையே
யிருநிலத்தினெண் குணமெனவெடுத்தினிதிசைப்பார். ௧௭

நீரின்வாழ்வுறலதனிடைத் தோன்றுதனிறைந்த
வார்கலிப்புனலதன்மிசை நடந்திடனெஞ்சி
னேருமெங்கணுமுறுபுனல் காட்டிடலுற்ற
வார்பெரும்புனல்குடத்தினல் வடிவமாயெடுத்தல். ௧௮

அருந்துமியாவையு மமுதுறழ்தீஞ்சுவையாக்கல்
விரிந்தமூன்றுபூ தத்துடனுமுருமேவல்
பொருந்துமேனியிற் றழும்பறப்பொலிதலீங்கிவையார்
தரங்கநீரினெண் குணமெனச்சாற்றுவர்மன்றே. ௧௯

மெய்யில்வெங்கனல் விளைத்தலவ்வெங்கனற்பிழம்பால்
வையநீற்றுத னீற்றுமவ்வையகமுழுதுஞ்
செய்யவெங்கன லதனினுண்டாக்கலத்தீயைக்
கையினேந்துத னீரிடைவைத்தனுகாத்தல். ௨௰

சுடர்செய்வெவ்வழல் வெம்மையிற்றுளக்குறிருத்த
லடையுமியாவையு மனத்தினுற்றாயனவாக்கன்
மிடையும்பூதமோ ரிரண்டெனமேவரவிளங்கும்
வடிவமேவுத லழலினெண்குணமெனவகுப்பார். ௨௧

நினைவினேகுத னிழன்மதியிடறுமால்வரைக
டுனைவிற்றேளினுற் றாங்கலச்சுடர்மணிவரையிற்
கனமதாகுத னுண்மையாகுதலிருகையி
னினிதின்வாயுவை யெழில்பெறவேந்திமேலெடுத்தல். ௨௨

வேற்றுமெய்தொறும் புகுந்தினிதிருத்தலோர்விரலி
னூன்றலாற்பெரும் பூதங்களனைத்தையுமலைத்தல்
காற்றொன்றாலிய லுருவினைக்கலின்பெறவெடுத்தல்
போற்றுவாயுவி னெண்குணமெனப்புகன்றிடுவார். உ௩

பழுதிலாவுட லெடுத்தலப்பழுதறுமுடற்கு
மிழிவிலாவகை செய்திடனீளிருவிசும்பு
வழியதாய்நடந் திடுதலிந்தியங்களின்மருவ
லொழிவிலிந்தியத் தாலறியாவகையுறைதல். உ௪

அலகில்பேருல குள்ளனையாவையுமடைவி
னிலவக்கண்ணினாற் காண்டல்சேணிடையினினிசமு
மொழிகள்கேட்டிட லழிவிலாதுறைதன்மற்றிவையே
மலருமாயிரு விசும்பினின்குணமெனவகுப்பார். உ௫

கருதுமின்றவெவ் விடத்தினுங்கருத்தினினேகல்
வினாவின்மீளுதல் விழைந்தவையாவையுமடைதல்
பொருளொவற்றினுந் தோன்றுதல்புகாறவெவர்க்குந்
தெரிவதற்கரி தாம்பொருடெரியுறக்காண்டல். உ௬

மங்கலத்துட லுறைந்திடவழிசுத்தாற்று
னைமங்கலைக்கிழ வன்றனிலழகுறத்தோன்ற
லெங்குந்தன்னிரு கண்முனமெளிதினிற்காண்ட
றங்குநன்மனத் தெண்குணமென்பராற்றக்கோர். உ௭

வெட்டல்கூற்றினைக் கடந்திடன்மிகுத்துவையொழிதல்
கட்டலெற்றுதல் கருணைகூர்ந்திடுதல்பேருலகிற்
பட்டவாழுத லுலகினைப்பழுதறநடத்த
லெட்டுமாமகங் காரக்குணமெனவிசைப்பார். உ௮

உலகமியாவையும் படைத்திடலளித்திடலொழித்த
றலைமையாகுத றனித்தனிவடிவமாய்ப்படைத்த
லலகினீதியுண் டாக்குதலஃறிணையமைத்த
லிலகுமுத்திதந் திடல்பிரமத்தினென்குணமே. ௨௯

இன்னயாவையு மீறிலாதோங்கியமுத்தி
யன்னுதற்கிடை யூறிவைமனக்கொளாதகற்றி
மின்னுநக்கவார் சடையவன்விரைமலர்ப்பாத
முன்னல்வேண்டுவர் முடிவிலாமுத்தியின்விழைந்தோர். ௩௰

யோகவிக்கினமுரைத்த வத்தியாயமுற்றிற்று.
ஆகதிருவிருத்தம் - ௧௮௰.

பத்தாவது
பத்திமகிமையுரைத்த வத்தியாயம்.

நாட்டுமியோகநன் னெறியினிணணினர்க்கன்றி
யீட்டுநல்லறத் துறைவழியியைந்தவர்தமக்குஞ்
சூட்டராவணி தனிமுதரென்றுமற்றென்று
மீட்டுஞ்சூதமா முனிவரன்விளம்பலுற்றனனால். ௧

வேறு.

கவ்வைநீர்க்கங்கைசூழ்ந்த காசிவாழிறைவன்றன்னை
மைவிழிக்கரியகூந்தன் மலைமகண்மகிழ்ந்துநோக்கி
யெவ்வழியொழுகிறேருன் னின்னருள்பெறுவரொன்னா
வெவ்வழற்சூலமேந்தும் விண்ணவனுரைக்கலுற்றான். ௨

மெய்த்தவத்தாற்கொலன்றி விழுமியஞானத்தாற்கொ
லத்தநீயருள்வாயென்ன வரும்புவெண்ணிலவுகாலு
முத்தவெண்ணகையாய்பஞ்ச மூர்த்தமாமென்னைநோக்கி
யித்திறமலரோன்முனுங் கேட்டனனெடுத்துமுன்னம் ௩

துளங்கொளிமுத்தஞ்சிந்தித் துள்ளுவெள்ளருவிவீழும்
வளங்கனிபசும்பொற்கோட்டு மால்வரைமடந்தைமாறு
துளங்கனிந்துருகுமன்புக் குற்றுநாமளிப்போமென்று
விளம்பிறைக்கண்ணிசூடு மிறையவனருளினானே. ௯

பத்திமகிமையுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௧௮௪.

பதினொன்றாவது

சத்தியோசாதத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

என்னனுமுனிவசொல்லா மீறிலாமறைக்குமெட்டா
முன்னவனெடுத்தபஞ்ச மூர்த்தநான் முருகுவிம்மு
பொன்னிதழ்க்கமலவீட்டுப் புங்கவன்கண்டவண்ணம்
பன்னுதியெனனுஞ்சூத முனிவரன்பகரலுற்றான். ௧

வேறு.

பொன்பிறழ்கமலப்பொகுட்டின்வீற்றிருக்கும் பொருவிலாநான்முகனிருபத், தொன்பதாஞ்சுவேதலோகிதகற்பத் துணர்தலுஞ்சுவேதலோகிதமா, மன்பெருவண்ணக்கன்றொடுமழகு வாய்ந்துளாங்குழவியாய்மாறு, வன்புமீக்கூரச்சத்தியோசாதனவன்முனமெய்தினன்மாதோ. ௨

மாயிருஞாலமுழுவதும்பூத்த மாமலர்ப்பொகுட்டின்மாமுனிவன், பாய்கதிர்மணிச்சூட் டரவகங்கணத்துப் பண்ணவன்பழமறைகானோன், சேயபூங்கமலத் துணையடிவணங்கித் தேங்கமழ்மருமலர்தூவித், தூயநான்மறையா லாங்கவன்றன்னைத் துதித்தனனன்புமீக்கூர. ௩

துளிநறுப்பிலிற்றி முருகுவாயவிழ்க்குந் துளவணிமுகுந்தனு ங்கோடி, யளிகுடைந்துண்ண முகையவிழ்கமலத் தண்ணலும் வெருவினர்திகைப்ப, வெளிமுகமுடைய வெவ்வழற்பிழம்பாய் விளங்கிடநின்றருண்முக்கட், களிகண்மெய்யின்று மெய்த்தவத் துயர்ந்த கவின்பெறுநால்வர்வந்துதித்தார். ௬

ஆரழல்விழுது விட்டெனக்கிடந்த வவிர்சடையண்ணல்பாற் றோன்றுஞ், சீர்பெறுதவத்துமுனிவரரிறைவன்சேவடித்தாமரை சேர்ந்தா, ரோர்பெறநின்ற விறைவனிவ்வுருவை யுளத்தினிலெ ண்ணினோரியாருங், கார்தொடநிவந்த கதிர்மணிக்கோட்டுக் கயி லைசென்றடைவரென் றுரைத்தான். ௭

சத்தியோசாதத்தோற்றமுரைத்தவத்தியாயமுற்றும்.

ஆக திருவிருத்தம்-௧௮௧.

பனிரண்டாவது

வாமதேவத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

இவ்வகையுரைத்து மாதவப்பயத்தா லிருவினைகடந்தமாமுனி வீர், கவ்வைநீர்க்கங்கை புனைந்தருள்வாம தேவனெனவருமண் ணல், செவ்விதிற்கண்ட வாறெலாந்தெரிந்து செப்புவன்கே ண்மினீரென்றாக், கொவ்வையங்கனிவாய்ப் பங்கனைப் பணிந்து கூ றினன்சூதமாமுனிவன். ௧

முறைவரும்பிரத்த கற்பமென்றுரைப்ப [illegible] னி, னறைமலர்க்கிழவ னுளங்களித்தருவி [illegible] பவொளி படைத்துச், கறையணற்பாந்தள் செஞ்சடைக்கணிந்து [illegible]

மான்மழுக்கரத்திலங்க, மறைபுகழ்வாமதேவன்மற்றவன்முன் மகிழ்வுடன்றோன்றினன்மன்னோ. ௨

மட்டுவார்ந்தொழுக வாய்முறுக்கவிழு மணமலர்ப்பொகுட்டு றைமறையோன், விட்டலர்கடுக்கைத் தொடையணிமவுலி விண்ணவனுற்றிடநோக்கிக், கட்டியபைம்பொற் கனைகழல்வீழ்ந்து கடிமலர்பற்பலதூவி, யட்டமாமூர்த்தி யாயுறைமுக்க ணண்ணலைத் துதித்தனன் மகிழ்ந்தான். ௩

பையவிழ்பாம்பின் பருமணிச்சூட்டிற் பாயநீருலகெலாம்வ ருத்தும், வெய்யநோய்நரகில் வீழ்ந்துவீழ்ந்திரங்கி மெலிவுறுவ ண்ணமெய்த்தவத்தா, லையமில்ஞானந் தெளிந்திடுநால்வ ராரழ ற்சடிலையினடுத்த, நையுநுண்மருங்குனங்கையோர்பங்கி னம்ப னருளையினிலுதித்தார். ௪

மாயிருஞாலமுழுவதுமுய்வான் வள்ளறனஞ்செழுத்துணர் த்தி, யாயிரம்பருவமுறைந்தனர்பின்ன ரழிவிலாமெய்யுணர்வத னால், வாய்விரிகடுக்கைத் தொடையலங்கனாயின் மதியுமிழமு தொடும்பெருகிப், பாய்தருகங்கைச் செஞ்சடாமவுலிப் பண்ண வன்பதத்தினிலடைவார். ௫

வெண்ணிலவுமிழும் விரிசுதையன்ன மேனியையுயிர்த்தவன்வ ணங்கக், கண்ணுளமலர்ந்து நின்றருண்முக்கட் கனியினைநாடொ றுமுளத்தி, லெண்ணரிதேரியாருநீங்கலாதடரு மிருவினைமுழுவ துமுருக்கித், தண்ணறுக்கடுக்கை மிலைந்தசெஞ்சடையோன் ற ளிமலடைவனொன் றுரைத்தான். ௬

வாமதேவர்தோற்றமுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧[illegible].

பதின்மூன்றாவது
தற்புருடத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

இன்னவாறுரைத்து முனிவிர்காள்செய்ய விலவிதழ்கவற்றுமி ன்கனிவாய்க், கன்னலங்குதலை மடக்தையோர்பங்கிற் கவின்பெ றமகிழ்ந்ததற்புருடன், பொன்னிதழ்க்கமலப் பொர்குட்டுவீற்றி ருக்கும் புங்கவன்காணமுன்வந்த, வன்னவாறுரைப்ப லென்று யர்சூத னிறபத்தெரிக்கலுற்றனனால். க

அன்னதற்கப்பார்ப்பீதகற்பத்தி லரும்பவிழ்தாமரைப்பொகு ட்டின், மன்னியவிரிஞ்ச னுளத்திடைநினைப்ப மல்கிருட்பிழம்பு வாய்மடுத்துப், பொன்னெனத்திகழு நன்னிறந்தாங்கிப் புனிற் றிளமதிக்கொழுந்தணிந்து, முன்னர்வந்துற்றான் முடிவிலாவே த முடிவினில்விளங்குதற்புருடன். உ

அருமறைவிளையாட்டயர்தருநாவி னணிமலர்ப்பொகுட்டுநா ன்முகத்தோன், வருமுமைபங்கன் தோன்றலுந்தனது மலர்விழி குளிர்ப்புறநோக்கி, விரைமலர்தூவி மற்றவன்செய்ய விளங்கு பொற்கழலிணைபணிந்து, கனாய்ழியின்பக்கடலினுள்மூழ்கிக்கட வுளைப்பழிச்சினன்மறையால். ௩

மதிதவழ்சடையோன்றழகுறுமுகத்தில் வதனமுங்கண்ணும் வாலெயிறுங், கதிர்வளைக்கையுங்காலுநான்கமைந்து தோன்றுகா யத்திரியணங்கைப், பொதியவிழ்கமலப் பொகுட்டிறோற்கனித் தான் பொருவில்காயத்திரிதன்னை, விதியினிற்பயின்றார் வெய்ய நோய்நரகில் வீழ்ந்திடார்கயிலைவீற்றிருப்பார். ச

பொருப்புவிற்குழைத்துப் பொருந்தலர்புரங்கள் பொங்கழ ன்மடுத்தவன்றன்பாற், றிருத்தகுசிறப்பி னுல்வர்வந்துதித்தார்

இனைக்கடலுடுத்தவிவ்வுலகில், வருத்தும்வெந்நரகின்வருந்திடா
வண்ணம் வயங்கியவஞ்செழுத்துணர்த்தி, யருப்புவெம்முலையா
ள்பங்கில்வீற்றிருக்கு மண்ணைமன்பதத்தினிலடைந்தார். ௫

எனைத்துணர்விரிந்துகொன்றைநேதன்றுளிக்குளிர்புனற்செ
ஞ்சடைக்காட்டிட், புனிற்றிளந்திங்கண்பிலைந்ததற்புருடன்பொ
ன்னடித்தாமரைப்போது, நினைப்பவர்பிறவிநெடுங்கடல்படியார்
நிரையிதழ்கதுமுகைகுடைந்து, கனைத்துவண்டிமிருங் காந்தரா
ஞ்சாரத் தயிலெசென்றடைவொன்றிசைத்தான். ௬

தற்புருடத்தோற்றமுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௦௬.

பதினான்காவது

அகோரத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

இருவினையுருக்கியரியமாதவத்தா லிமையவனைவணங்கியசூத,
னருவினையகற்று முனிவிர்காள்கடவு ளருமறைக்கிழவன்முன்
காண, வெளிப்படுமுருவாமகோரனென்றுற்ற வாறெலாமியம்பு
வனென்று, வருமுலைபங்கி னன்னனைப்போற்றி மலைவறத்தெ
ரிக்கலுற்றனனால். ௧

ஆங்கதற்கப்பா லிலகற்பத்தி லதிர்தருதெண்டிரைப்பரவை,
வீங்குநீருலக முழுவதும்புத்த விண்ணவனினைந்துறைகாலைத்,
தேங்கொள்பூங்கடுக்கைச் செஞ்சடைபிலைச்சித் திருவிழைவாள்க
ரத்தேந்தித், தாங்கிருள்பழுத்தவடிவொடுமகோரத் தோன்றிய
தாங்கவன்முன்னம். ௨

பின்றிகழ்சடைக்காட்டினிலவிர்ந்த விசாங்குவெள்ளமதியினை
நோக்கெ, கன்றுமான்றெறிப்பக்கானமென்காத்தி வேர்நியகட

வுடன்னிடத்திற், றுன்றுநான்மறைறதேர் நால்வர்வந்துஇத்தாம் துலங்கவோராயிரம் பருவஞ், சென்றதன்பின்னர் வள்ளல்பூங் கமலச் சேவடிநீழல்சென்றடைந்தார். ௫

அன்னமாய்ப்பறந்து தேடியுங்காணு வண்ணல்வந்தெய்தி னனென்றுத், தன்னுளங்குழைந்து மதுக்கவிழ்த்தலருந் தாம ரைப்பொகுட்டுறையண்ணல், பொன்னவிர்கடுக்கைதழுமலர்தூ விப் புனைகழற்சேவடிவணங்கிப், பன்னருஞ்சிறப்பிற்புதுமறை காணுப் பரமனைப்பழிச்சினன்பணிந்தான். ௬

தாட்டுணைபணிந்தான்முகன்செய்ய தாமரைமுகமலர்நோக் கிப், பாட்டளிமுரலுங்கடுக்கையந்தொடையல் படர்சடைமிலை ந்தருளண்ணல், வாட்டமில்குணத்தா னின்னுளங்குழைந்து வழுத்தினகேட்டுளமகிழ்ந்தேம், வேட்டனகேட்டிமாமறைக்கி ழவ விரைவினில்வழங்குவனென்றான். ௭

மழலையாழ்மிழற்றும் வரியளிகோடி மன்றலம்புதுமுகை கு டையப், பொழிமதுக்கவிழ்க்கும்பொன்னிதழ்க்கமலப் பூம்பொ குட் டுறைதருமண்ணல், குழவிவெண்டிங்க டவழ்தருசடிலக் குழகனின்குரைகழலடியிற், பழுதறுமன்பேவேட்டனனதுவே பணித்தியென் றிரத்தலும்பணித்தான். ௮

அகோரத்தோற்றமுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௨0எ.

பதினைந்தாவது

அகோரமந்திரமுரைத்த வத்தியாயம்.

பொருப்புவிற்குழைத்தபுங்கவன்மலர்வாழ் புனிதனைநோக்கி னன்புகல்வான், முருக்கிதழ்ச்செவ்வாய்மகளிர் தமானி முழுத்த

வராவினைச்செகுத்தோ, ருரைத்திடற்கரிய மறையவர்ச்செகுத்
தோ ரொளிமுடியரசனாமாய்த்தோ, ரருந்தியான்மெய்ம்மையுண
ர்விளிலுயர்ந்த குரவருக்கிடரினையளித்தோர். ௧

வெந்நரகளிக்குங்கள்ளினையயின்றோர் வேறொருவற்குரித்தா
ய, கன்னலங்குதலை மடவரல்வெய்ய கதிர்முலைக்கனிவுறக்கலந்
தோர், மின்றெளிவிரிக்கு மாழையைக்கவர்ந்தோர் விடத்தினை
யொருவருக்களித்தோ, ரின்னருள்புரியென் றடைந்தவர்தம்பா
லேதிலாத்தீவினையிழைத்தோர். ௨

தாறுபாய்களிறு கவிழும்வெங்களத்துத் தாமவேலரசைவிட்
டிருந்தோர், வீறுசேரொன்றனன்பருக்கிடரை விளைத்தவர்வெவ்
வினையகற்று, மாறிமறையோராற்றியவேள்வி யாற்றிடாவகை
யிடர்புரிந்தோர், சீறடிமமுலைமகளிருள்ளாவி தீவினைசெய்திடச்
செகுத்தோர். ௩

ஆகளாறுமெனதுமந்திரமொருநா ளாயிரமுறை தானிந்தோதில்,
லகவிருவிசும்பிற்பருதிகண்டழியு மாரிருட்படலமேபோலப், புக
லும்வெம்பாவமனைத்தும்விட்டகலப் போகுமாண்டவற் கொருவி,
ககுமணிக்கோட்டிக் கயிலைமால்வரையி லண்ணலின்னருளினாடித்தி
ருப்பார். ௪

அரியவிம்மறையை யன்புடனெவர்க்கு மன்புகையிற்குறைக்
குள்ள, முருகியவன்பர் தம்மிச்சிறந்தி யாதலாலுமிழ்நாளுரைக்கமு
டிம், விரைமலர்க்கமலப்பொருட்டிலேமேவு மறையுங்கிண்ணனைகளுணா
த்தனமென்று, கருதிநம்பமுத்துமணிமிடற் றண்ணலஸ் கந்தனி
னெனுரைத்தனளினதே. ௫

அகோரமந்திரமுரைத்த வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் - ௨௧௨.

பதினாறாவது
ஈசானத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

ஐம்புலனடக்கியருமறைகாணு வண்ணலைவணங்குமாதவத்
தீர், கம்பமாகளிற்றி னீருரிபோர்த்த கண்ணுதற்கடவுளீசான
ன், வம்புலாங்கமலத் தண்ணன்முன்காண வந்தவாறுரைப்பனி
யானென்று, வம்பருங்காணு வண்ணலைப்போற்றிச் சூதமாமு
னிவரனுரைப்பான். ௧

மற்றதன்பின்னர் விச்சுவரூப கற்பத்தின்மலரயனினைப்பச்,
கற்றைவெண்ணிலவுத் திங்கள்வாண்முகமுங் கண்களுங்கருங்
செய்வாளெயிறும், பொற்றொடித்தோளுஞ்செய்யசீறடியும்பொ
ம்மல்வெம்முலையுமோர்நான்கா, யுற்றசொற்கிழத்தியொருகோ
ளிப்பளிங்கி னுருவொடுமுதித்தனண்மன்னோ. ௨

தூளங்கொளிப்படிகவடிவினைத்தாங்கிச் சுடர்மதிலேக்கவீ
சானன், விளங்கிடவர்தோன்றினன்றென்ற விரிஞ்சன்வீழ்ந்
திறைஞ்சினன்பரவ, வுளங்களிந்தீசன்வேண்டியவேட்டி யுதவு
வனென்றனுமின்ற, விளங்கதிர்மணிப்பூ ணின்னகைத்துவர்வா
யீங்கிவள்யாவளென்றுரைத்தான். ௩

உரைத்தலுமமுதமுற்றிருந்தொழுது மொழிமதிக்கேட்டிடு
ன்மேற்கொன்றை, யரிந்துவெண்டரங்கக் கங்கையின்பொருது ம
ழல்விழுதனையவார்சடையோன், றிருத்தகுமிப்பான் மாயனோ
முதல தேவர்கள்யாரையுமீன்ற, வொருத்திமற்றிவளாங்கெனி
ரிவெண்கமலந் தூன்றதருவாணியென்றுரைத்தான். ௪

புடவியோர்காலாற்பொத்திறேன்முதல தேவர்கள்யாவரையு
ம்புரப்பா, னுடைகடல்விடத்தையுண்டவன்முன்ன மொழிகிப

னுநால்வர்வந்துதித்தா, ரிடர்படாதெறிநீ ருலகெலா முய்ய வேத்
தருமஞ்செழுத்துணர்த்தி, மடவரல்பங்கனறைகழன்மிளிரு ம
லைமலர்ச்சேவடியடைந்தார். ௫

மொழிதருபஞ்சப் பிரமநத்கதையை முடிவுறக்கேட்பவர்நா
ளும், பழுதறப்பகர்வோர் யாவரோயெனினும், பசுங்கதிர்திசைதி
சைபரப்பும், குழவிவெண்டிங்கள்குளிர்சடையிலைந்த கொழுங்
கதிர்மணிமிடற்றிறைவன், மழலையஞ்சுரும்பர் வீழ்ந்தறிகல்லா
மலரடியடைவனென்றிசைத்தான். ௬

ஈசானத்தோற்றமுரைத்த வத்தியாயமுற்றும்.
ஆகத்திருவிருத்தம் - ௨௪௪.

பதினமூவது
மகாலிங்கந்தோன்றிய வத்தியாயம்.

ஈறிலாதநல்லிலிங்கமத் தெவ்வகைதோன்று
மாறிலாதுறையிலிங்கயா ரிலிங்கத்தில்வழுத்த
வாறுதாழ்சடையண்ணலெவ் வகையமர்ந்தருளுங்
கூறல்வேண்டுமென் றுரைத்தனர் கோதிலாமுனிவர். ௧

இன்னவாசகந்தேவர் தென்புலத்தவயாரு
மன்னமீதுயர்த்தவனுடன் கேட்டதுமவர்க்கு
முன்னங்கூறினனுங்கவை மொழியலென்றினைந்தா
னுன்னிமெய்த்தவச் சுதமாமுனிவரனுரைப்பான். ௨

பிறையின்றெருவிப்பிரதானமே மெய்ந்நியலிலிங்கந்
தெறிபசங்கதிர்த்தெண்ணிலா முடித்தசெஞ்சடைக்
கறைமிடற்றாங்கன்னுறுதற் கடவுளையிலிங்கி
யதெனலிங்கத்தினன்னல்வாழ் தன்மைமத்தனைவகம். ௩

முன்னந்தண்டுளிமுகில்வறந் தொழிதரவெய்யோன்
றுன்னும்வெங்கதிர்க்கொடுந்தழல் சுடுதலாற்றுலைந்து
மன்னிநிற்பனதிரிவன யாவையுமாயப்
பின்னல்வெண்டிரைத்தடங் கடல்கோத்ததுபெருகி.

இலகுபொன்முடியாயிர மிருவிசும்புருவு
மலைமுகந்ததோளாயிரமாயிரமலர்த்தா
ணிலவவாயிரங்கண்மலர் வளர்ந்தனநெடுநீ
ரலைபுரட்டுதெண்கடலிடைப் பசுந்துழாயண்ணல்.

அயிலெயிற்றசெஞ்சூட்டரா வணையின்மேலந்தண்
புயலெனத்துயில்புனத்துழாய் மாயனைப்பொருந்தி
மயன்முகிழ்த்தெழுமனத்தனாய் மாமறைக்கிழவன்
றுயிலெழுப்பினன்றொடிபொலி தடக்கையாற்புடைத்தே.

கதிர்மருட்டியதிகிரிமால் கண்மலர்விழித்து
மதலையெவ்வுழியிருந்திவண் வந்தனையெனலு
முதல்வனாகியவென்னைநீ முதுக்குறைவின்றிப்
புதல்வனாமெனப்புகன்றவா றென்னெனப்புகன்றான்.

பரவைவெண்டிரையுலகெலாம் படைத்தளித்தழிக்கு
மொருவன்யானென தொண்டிறற்குழவிநீயெனலு
மெரியெனக்கனன்றீர்ந்துழாய் முகிலுடனிகலி
வெருவுவெஞ்சமம்விளைத்தனன் விரைமலர்க்கடவுள்.

ஆயகாலையிலாதியோ டந்தமற்றின்றிக்
காயழற்பிழம்பாகிமுன் கண்ணுதறோன்ற
மேயவவ்வுருவறிகலர் விரைமலரயனுந்
சேயதாமரைக்கண்ணனும் வெருவினர்திகைத்தார்.

விரிகதிர்ச்சிறையன்னமாய் விசும்பிடைப்பறந்து
தெரிவதற்கரிதாமுடி தேடுதியானு
முருவக்கேழலாயுடை திரைப்பார்முகங்கீண்டு
மருவத்தேடுவனடியெனத் துழாய்முடியுரைத்தான். கo

உறைந்தமாயவனேனமா யகனிலங்கீண்டு
செறிந்தபூங்கழற்சேவடித் தாமரைதேட
நிறைந்தவொண்கதிர்க்கற்றைநகா னெடுமுடிவிசும்பிற்
பறந்துதேடினனன்னமாய்ப் பழமறைக்கிழவன். கக

நீடுசாலுமவ்விருவரும் பெய்மலரடியு
மாடகக்கதிர்முடியுமோ ராயிரம்பருவந்
தேடிக்காண்கிலர்திகழ்தரு செந்தழற்பிழம்பா
நீடிலிங்கத்தின்முன்னம்வந் தெய்தினர்நின்றார். கஉ

கன்றுநெஞ்சினராகியாங் கிருவருங்கலங்கி
நின்றகாலையினீடருட் பிழம்புசேர்த்தெறிக்குந்
துன்றும்வெவ்வழலாகிமுன் றோன்றிலிங்கத்தி
னின்றுபேரொலியோமென வொலித்ததையன்றே. கங

வேறு.

ஒலிதோன்றியபின்னீசான மோங்குமுடியாய்த்தற்புருட
மலர்வான்முகமாய்முருகொழுகு மந்தாரகலமகோரமாய்
மலைவின்றுகமனைநவழுத்தும் வாமதேவங்குய்யமா
யிலகுபொன்னங்கழற்கமல மிணைதிர்சத்தியோசாதமாய். கச

மாலைக்குழவிமதிநிலவின் மந்தாகினிச்செஞ்சடைத்தவழ
மால்வெண்ணீற்றின்னிலவுமொளி பழுத்ததுதற்கண் முகிழ்த்திலை
காலக்கனலிற்கனல்கின்ற கண்ணிச்சியொமொன்காதிலைக [ங்கக்
கோலப்பழுக்குதிலமிடற் றண்ணனேறின்றத்துதித்தனரால். கரு

மகாலிங்கந்தோன்றிய வத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - [illegible].

பதினெட்டாவது

மாயனுமயனுந்துதித்த வத்தியாயம்.

என்றுபுகலமர்தவத்தோ ரெரிபொற்கோட்டுமேருநெடுங்
குன்றந்தழைத்ததிணிதடந்தோட் குழகன்றிருமுன்மற்றவர்க
ணின்றுதுதித்தவாறெமக்குநிகழ்த்துகென்னவுளமுருகிக்
கொன்றைமுடித்தோனடிபரவிச் சூதமுனிவன்கூறுவான். ௧

கண்டுமுடிமேற்கைகூப்பிக் கண்ணீர்வாரமயிர்பொடிப்ப
விண்டமலர்தூயானந்த வெள்ளத்தழுந்தியுள்ளுருகிப்
பண்டைமறையுங்காணாத பதுமமலர்மெல்லடிவீழ்ந்து
வண்டுபடுபூந்துளவோனு மலர்நான்முகனும்வழுத்தினரால். ௨

கிடைத்தற்கரிய வரும்பொருளே கேடின்றுயர்ந்த பரஞ்சுட
ரே, யுடைக்கும்பரவைக் கடல்விடமுண் டுலவாதெம்மைப்புரந்
தோனே, படைத்துமளித்துமெவ்வுலகும் பாழ்பட்டொளியக்க
டைநாளிற், றுடைத்தும்விளையாட் டயர்கின்ற தோன்றாலுன்
னைப்போற்றுவமே. ௩

கீற்றுமதியந்தவழ்குடுமிக் கிளர்செம்பவளமால்வரையே
யாற்றுந்தவத்தின்றுறைபோய வன்பர்படியுமருட்கடலே
யூற்றும்பசுந்தேன்கமழ்கொன்றை யுருவப்பசுந்தார்நறுந்தாது
தூற்றுந்தரங்கக்கங்கைபுனை தோன்றாலுன்னைப்போற்றுவமே.

அரியபழநான்மறைக்கொழுந்தா யமலமாகியழிவின்றி
யெரியுங்கனலாய்வெண்மதியா யெறிக்குங்கதிர்செய்பருதியா
யுருவாயருவாய்ச்சின்மயமா யுள்ளும்புறம்புமுணர்வரிய
துரியாதீதமாய்நின்ற தோன்றாலுன்னைப்போற்றுவமே.

என்னப்பரவவருள்பெருகி யீறைக்குழவிப்பிறையலங்கன், மின்
னிற்றிகழுஞ்செஞ்சடையின் மிலேந்தனியானவனுவந்து, பொ
ன்னிற்றிகழுந்தடமார்பிற் பொறிவண்டறைய முகைநெகிழுங்,
கன்னித்துளவமாலேபுனை கண்ணன்முகநோக்கினனுரைப்பான்.

மாயனுமயனுந்துதித்த வத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-௨௩௧.

பத்தொன்பதாவது
மாயனுமயனும் வரம்பெற்ற வத்தியாயம்.

உற்றெனவலப்பாற்றேமலரோ னுதித்தானிடப்பாலிற்றிகழுங்
கொற்றத்திகிரிப்படை தாங்குங்குமரனீவந்துதித்தனையால்
மற்றென்புதல்வரிருவீரு மனக்குவிழைந்தகேண்மினெனப்
பொற்றபசும்பொனுடைபுனை பூவைவண்ணனுரைசெய்யும். ௧

கொன்றைகமழுங்குளிர்சடிலக் குழகாவுள்ளங்குழைந்துருகி
யென்றுமுனதுதாமரைத்தா ளிறைஞ்சுமன்பேவேட்டனமா
லன்றியிழைவதேதொரைக்கென் றறைதலோடுமருள்கூர்ந்து
நன்றுதந்தேமெனாமீட்டு மயன்கூறலுற்றனனால். ௨

முதியதனிநான்மறைவடித்த முதல்வன்பாதமகப்பத்துன்
புதல்வனெனியுர்தவனார்ந்தா மனாயிற்றேன்றுவனுந்
கதிர்ற்றிகழுமென்னுருவங் காண்பேர்காளிறுமென்று
மதுவார்க்கொழுகுபூங்கடுக்கை வனேபுமுதல்வனைநக்தனரால்.

அன்றுமுதலாயிலிங்கத்தி னைகண்டபரிபூரணமாகி, யொன்
றெய்ப்பமுய மறைநான்கு முணர்த்தற்கெட்டா துயிர்க்குயிராய்,
நின்றமுதல்வனினிதமர்ந்து நினைபுமன்பா றறிவொழுகி, மன்றல்
கமழுங்கொட்டி மலர்ஆயிர்ந்துக்குவ மாந்தருக்கும். ௩

இன்னதனை நயையெய்ர்காருந மீனவெண்டிங்கட்டமைக்ககன்னி
பொன்னஞ்சடிலமிசைப்புனைந்த புனிதன்முன்னாரலில்லின்றோ
ருன்னா,ந்தரியமுக்கண்ணை னுருவுதாங்கியுறதவொனப்
பன்னுமறைதேர்முனிவரர்க்குப் பகர்ந்தான்குதமாமுனிவன். இ
மாயனுமயனும்வரம்பெற்ற வத்தியாயமுற்றிற்று.
ஆகதிருவிருத்தம் - உ௪௪.

இருபதாவது
மாயனுமயனுந்திக்காலத்தில்
நான்முகன்றோன்றிய வத்தியாயம்.

நகைசேர்பாந்தகர்பத்தி நன்னலங்கமலமுகம்பொருட்டி
லகனீர்ப்புவனம்பூத்தமறை யன்னை னுதித்தவாறுமவ
னைகவெண்ணிலவுநவழ்சடில னட்பண்வடிவங்கண்டதுவும்
புகலவேண்டுமெனமுனிவர் புகன்றார்குதமாமுனிவன். க

வேறு.

பாம்பிணைகருட்டுபடுபுனற்பெருக்கிற் பருமணிசெழுமுசெஞ்
சூட்ட, வாயிரம்பகுவாய்ப்பார்நன்மேற்றுயிலு மன்னனாகு
குறச்சென்று, சேயகான்மலரோன்யானோநீயென்று செப்புமுக்
திரியஞ்செல்வன், மாயிருஞாலமுழுவதும்பூத்த மாயன்யாவெ
ன்றுலாத்தனருல். உ

இனையவாறுரைப்பக்கேட்டகான்மறையோ னெனதுவரம்ப
றியதாய்ப்புகுந்து, முனைவவெவ்வுலகுங்காண்பதியென்று மொ
ழிந்தழும்வாயிறுமொய்த்த, வனையவன்வயிற்றேதுமாயிரம்பருவமுல
வாத்தியாவையுங்கண்டு, கனைகடலண்டம் பகர்ந்துதாயக்கரு
கண்ணனன்றீன்றெழுந்தனன்மாலே. ௩

மாயவன்மலரோன் மலர்முகநோக்கி மலர்தலையுலகமற்றெ
வையுஞ், சேயவென்வாயுட்புகுந்துநீகாண்டி யென்றலுந்திசை
முகனெய்திப், பாய்திரைப்புவனமாயிரம்பருவம்பரிவுடன்கண்டு
மீள்காலை, யாயவன்வாரா வகைவழியெல்லா மமைவுறச்சுருக்கி
னன்மன்றோ. ௪

மன்னியமறையோன்வருவழியொன்றுங் காண்கலனுறியுள்
மயங்கிக், கன்னிவண்டிமிரும்பசுந்துழாயலங்கற் கண்ணனைனல்வ
லஞ்சுழியுந்திப், பொன்னிதழ்க்கமலத்தாட்புழைவழியாய்ப்புறந்
தினிற்பொருக்கெனவெய்தி, மின்னுறக்கொளிரும் விரைமலர்ப்
பொகுட்டில்விழைவுடனுறைந்திடுகாலை. ௫

கலைமதிகொழித்தநெடுநிலாவொடு பெருகியகங்கைநீர்வெள்
ளத், தலைதவழ்ந்தென்ன வனிநுதல்வெண்ணீற் றவிரொளிதி
சைதிசைபரக்கப், புலவுநாறழல்வாய்முவிலைச்சூலம் பொங்கழ
* லும்பிடத்திரித்து, மலைமகள்கொழுநனங்கவர்முன்னமகிழ்வு
டனெய்தினன்மாதோ. ௬

* தும்மல்-விடுதல்.

பற்றலர்புரங்கள்பட்டெரிதவழப் பவளவாய்க்குறுநகைமுகி
ழ்த்த, கற்றைவார்சடையோனுயிர்ப்பிறுத்தாய கடிகமழ்கமலமி
ன்றனைய, வெற்றுநீர்த்தரங்கக்கருங்கடற்றுயிலு மிறைவனைநே
ரின்முகநோக்கி, யற்றமின்மறைகள்வளர்தருநன்று வண்ணனன்
மற்றிவையிவைபுகலும். ௭

என்வயிற்றிடையுட்புகுந்துநீயுலகம்யாவையுங் கண்டுமீண்
டனையா, லுன்வயிற்றிடையுளாயிரம்பருவ முலகெலாங்கண்டு
மீள்காலைத், துன்னிடாவண்ணம் வழியெலாஞ்சுருக்கித் துயரி
ழைத்ததுமற்றன்றிப், பொன்னிதழ்க்கமலத்திருந்தனைய
பழிக்குநேரியம்புதியென்றான். ௮

அற்றமின்னதுபெருமைகாண்பதற்கா வழியெலாமடைத்த
தையல்லாற், செற்றமீக்கூரப் புரிந்தனனல்லே னென்னுழைச்
சிறந்துதோன்றுதலான், மற்றுனையென்றன்புதல்வனுமென்றும்
வள்ளிதழ்க்கமலமேவுதலாற், பொற்றசெங்கமல யோனியாமெ
ன்றும் புகல்வரொன்றுரைத்தனன்மாயோன். ௯

செய்யதாமரைப்பூங்கண்ண னிவ்வாறு செப்பலுஞ்செழும
றைக்கிழவ, னையிருகையுமழல்விழிநுதலுமவிர் மதிபுனைந்தசெ
ஞ்சிகையும், பையவிழ்துத்திப்பருமணிச்சூட்டுப் பஃறலையரவக
ங்கணமு, மையெழில்கவற்றுமிடறுமின்றிலங்க வந்தவன்யாவ
னென்றுரைத்தான். ௧௦

தன்னிகர்தானேயன்றிவேறில்லாத்தலைவன்மற்றீங்கிவனுரு,
மன்னவனுயிர்ப்பா லாகுமென்கமல மசைந்ததென் றியம்பலும
ம்ம, வென்னையுமழியாநின்னையுமன்றியிறையவன்யாவனேயென்
னுப், பொன்னிதழ்க்கமலப்பொகுட்டு நான்முகத்தோன்புகறலு
மாயவன்புகலும். ௧௧

அழிந்திடாப்பொருளாயகண்டமா யொன்றுயாதியாயமலமா
யின்னும்,பழந்தனிமறையுங்காண்பதற்கரியபரஞ்சுடராகிவெண்
கீற்றுக், குழந்தைவெண்மதியம்புனைந்துறைகின்ற குழகனைக்
கூசறிவெல்லா, மிழிந்திவணிவ்வாறிசைத்தனை யறிந்தோரியாவ
ர்மற்றிவ்வகையிசைப்பார். ௧௨

மலைமகள்கொழுநன்பீசிநீபீச மற்றியானியோனிதன்பீச, மு
லகெலாமுன்னந்தோற்றுவிப்பதற்கெனியோனியில்வைத்தனன்
வைப்ப, வலர்கதிர்ப்பசும்பொ னண்டம்வந்துதித்தோராயிரமா
ண்டலைபுரட்டுங், கலிசெழுபரவைக்கடற்கிடந்தெறியுங்காற்றி
னுற்கரந்ததையன்றே. ௧௩

உடைந்தபேரண்டந்தனக்குமண்கீழோ டோங்குயர்விசும்பு மேலோடாய்க், கிடந்ததாலதன்பினின்னுடையறிவாற் கேடிலாச்சனகனேமுதலா, யடைந்தனரவராங்கவர்படரு மைம்பொறியவித்தனர்யாவுங், கடந்துமேலாகிநின்றருண்முக்கட் கனியினுக்கன்புபூண்டனரால். கச

இன்னணங்கற்பந்தொறுமினக்கிறைவன் மாயையான்மோகம்வந்தெய்து, மன்னநின்மோகந்தவிர்ந்திடும் வண்ணமாரழற்சுடலையினடித்த, முன்னவற்றொழுதிதொழாயெனி லவன்றன்மூச்சிறுன்முடிகுவையென்னக், கன்னியந்துளவ மாலொடுவிரிஞ்சன் கண்ணுதலடிமலர்பணிந்தான். கரு

மாயவனுந்தியில் நான்முகன்றோன்றிய வத்தியாயமுற்றும்.

ஆகதிருவிருத்தம்-உருசு.

இருபத்தொன்றாவது
நான்முகனுமாயனுந்துதித்த வத்தியாயம்.

வணங்கினனெனலுமாதவர்முனிவர் மாயனுமலர்மிசையயனுமணங்கரவசைத்தவண்ணலையெவ்வா றகங்குலைழந்தேத்தினொன்ன, மணங்கமழ்கடுக்கைத் தொடையருழ்மவுலி வரதனைவழுத்திமாசகன்ற, குணங்களான்மிக்க சூதமாமுனிவன் கோதறக்கூறலுற்றனனால். க

வேறு.

நினைப்புமாய்மறப்புமாகி நினைவினுக்கெட்டாதொன்று
யனைத்துமாய்நின்றாய்போற்றி யருமறைக்கொழுந்தேபோற்றி
கனைத்துவண்டிமிரவின்றாங் கடுக்கையங்கண்ணியோடு
புனிற்றுவெண்டிங்கட்கண்ணி புனைந்தசெஞ்சடையாய்போற்றி.

நள்ளிருட்பிழம்புமேயு நாகிளந்திங்கடுணைக்கிப்
புள்ளிமான்பிள்ளை துள்ளும் புனைமலர்க்கரத்தாய்போற்றி
யுள்ளொடுபுறமாயெங்கு முறைந்தருளிறைவாபோற்றி
வெள்ளியம்பொருப்பில்வாழும் விமலனேபோற்றிபோற்றி. ௩

பொருப்புவிற்குழையவாங்கிப் புரமெரிமடுத்தாய்போற்றி
மருக்கமழ்குமுதச்செவ்வாய் மலைமகள்கொழுநபோற்றி
நெருப்புருவெடுத்துமுன்ன நெடுவிசும்புருவிநின்ற
வருட்பெருங்கடலேபோற்றி யமலனேபோற்றிபோற்றி. ௪

கண்டயுகமதனிற்றோன்று மண்டங்கள்கழியவுண்டு
சுடலையினடித்தாய்போற்றி சுடரொளிப்பிழம்பேபோற்றி
விடவரவணிந்தாய்போற்றி மெய்யுணர்வெய்திநின்ற
வடியவர்க்கருள்வாய்போற்றி யண்ணலேபோற்றிபோற்றி. ௫

கூற்றுயிர்குடித்தபைம்பொற் குரைகழற்றாளோய்போற்றி
யேற்றுயர்கொடியாய்போற்றி யீறிலாமுதலேபோற்றி
யாற்றருந்தவத்தின்மிக்கோ ரறிந்துணர்பொருளேபோற்றி
யூற்றுதேங்கொன்றைவேணி யொருவனேபோற்றிபோற்றி. ௬

என்றவர்வழுத்தக்கேட்ட விறைவனுங்கவரைநோக்கி
நன்றுநீர்துதித்தீருள்ளம் வேட்டனநவில்கவென்னக்
கொன்றைதாழ்சடையோயுன்றன் குரைகழற்கமலத்தாளன்
பொன்றுமேயுள்ளநீங்கா துறைந்திடவேண்டுமென்றார். ௭

மற்றவர்க்கருளியீசன் மலரவன்முகத்தைநோக்கிப்
பொற்றசெங்கமலத்தோயெம் புதல்வனீயெனக்குநாளுங்
குற்றமின்றுயர்ந்தஞான மருளினமென்றுகூறி
யெற்றுநீர்க்கங்கைவேணி யிறையவன்மறைந்தானன்றே. ௮

நான்முகனுமாயனுந்துதித்த வத்தியாயமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௬௭.

இருபத்திரண்டாவது
ப்ஞ்சப்பிரமத்தின்சிறப்புரைத்த வத்தியாயம்.

படுதிரைப்புவனம்யாவும் படைத்திடவேண்டுமென்னாத்
தடமலர்க்கமலப்புத்தே டவம்பலபுரிந்தான்மற்றவ்
வொடிவினற்றவத்தினாலெவ் வுலகுமுற்றிடாமையைநோக்கிக்
கடிமலர்க்கண்ணீர்வாரக் கரையழிவெகுளியுற்றான். க

கண்வழியொழுகுநீராற் கதழ்சினக்கொடியபாந்த
ளெண்ணறத்தோன்றநோக்கி யிரங்கிமெய்சோர்ந்துவாடிப்
புண்ணியத்தவத்திற்கீதோ பொருந்துவதென்றுகூறித்
தண்ணறுங்கமலத்தண்ண றன்னுயிர்நீங்கினானே. உ

வழிமதுக்கலுழிமாந்தி வண்டுவீழ்கமலவீட்டுப்
பழமறைக்கிழவனாவி பதினொருதேவராகி
யழுதுகொண்டுதித்தலாலே யாங்கவர்தம்மைஞால
மொழிவறுசிறப்புவாய்ந்த வுருத்திரரென்னுமன்றே. ௩

ஆங்கவருதித்தபின்ன ரவ்வுழிவிரைவினெய்தி
மாங்குயிற்குதலைபங்கன் மலரவற்காவிநல்கத்
தீங்கிலாமறையோனாவி யடைந்துசெஞ்சடிலத்தண்ணல்
பூங்கழல்வணங்கிநின்று பொருவில்சீர்வழுத்தினானே. ௪

மாற்றருஞ்சிறப்புவாய்ந்த மாமறைக்கிழவனாழ்ந்து
போற்றலுமுவகைபூத்துப் புரிமுறுக்கவிழ்ந்தீங்கே
னாற்றுபூங்கடுக்கைமாலை யொருவனுள்ளருகிமுன்னந்
தோற்றியவண்ணமெல்லாஞ் சொல்லுவான்றொடங்கினானே. ௫

பனிமலர்ப்பொகுட்டில்வாழும் பழமறைக்கிழவநீமு
னினைவுறுங்காலைவந்து நின்முனந்தோன்றலாலே
தனையெரின்றிநின்ற சத்தியோசாதமென்ன
வெனைமுழுமறைகளெல்லா மென்னமுமிசைக்குமாதோ. ௬

அள்ளலஞ்சேற்றினாறு மரக்கிதழ்முளரிவாட
வெள்ளிவெண்ணிலவுகான்று விசும்பெழுதிங்களென்னத்
தெள்ளொளிவாய்ந்துகாயத் திரியெனுநாமஞ்சேர்ந்த
வொள்ளிழைமடந்தையாங்கெனுமையினிலுதித்தாண்மன்னோ.

எண்கண்வானவநீமுன்ன மெண்ணியகாலந்தன்னில்
விண்கிழித்தெழுந்தசெய்ய வெயிலிளம்பருதிபோலக்
கண்கவரழகுவாய்ந்து கண்ணுறுந்திறத்தாலென்னைத்
தெண்கடலுலகம்வாம தேவனென்றுரைக்குமாதோ. ௮

மாயிருஞாலம்போர்த்த மல்கிருட்பிழம்புசீத்துப்
பாயலைமுகட்டிற்றோன்றும் பருதியஞ்செல்வனென்னச்
சேயொளிவாய்ந்துகாயத் திரியெனச்செப்புநாமத்
தாய்வளைமடந்தையென்பா லாயிடைத்தோன்றினாளே. ௯

தாதவிழ்கமலவீட்டுத் தலைவநீபுருடனாக
மாதவங்கோடிசெய்து மனத்தினீநினைக்குங்காலை
யேதமினினதுமுன்ன மெய்தலாலெனக்குநாமங்
கோதிறற்புருடனென்னக் கூறுநான்மறையுமன்னோ. ௧௦

தழன்முகம்பழுத்தசெய்ய தமனியமழுங்கமாறு
வொழுகொளிவாய்ந்துகாயத் திரியெனவோதுநாமத்
தழகுவீற்றிருந்தபொம்ம லணிமுலைப்பவளச்செவ்வா
யிழைபுனைமருங்குன்மாது மென்னுழைத்தோன்றினாளே. ௧௧

நிரையிதழ்க்கமலத்தோய்நீ நினையுமக்காலந்தன்னிற்
கருநிறம்பழுத்துமற்றுன் கண்முனந்தோன்றினேனவ்
வுருவமேகோரமல்லா லுலைவறவியற்றுகின்ற
வரியநற்றழலகோர மாதலாலகோரமென்பார் ௧௨

அலர்கதிர்முத்தஞ்சிந்தி யலைதவழ்கடலிற்றோன்றுங்
கலைமதிமழுங்கப்போர்த்த காரிருட்பிழம்பின்குப்பை
மலையுமேனியளாய்க்காயத் திரியெனும்வாட்கணங்கை
யுலகமீரேழும்போற்ற வென்றுமையுதித்தாண்மன்றே. ௨௩

ஆறறிமறையோர்செல்வ மனைத்துமாய்நின்றவென்னைத்
தேறிநின்றுளத்தினோடு திகழ்தரநினைத்தகாலை
பீறிலீசானனென்ன வெடுத்துநான்மறையுமேத்த
வீறுசேர்விச்சுவரூப மாகமுன்விளங்கினேனால். ௨௪

விரிதலையுலகம்போற்றும் விச்சுவரூபமாக
வருள்கனிந்தொழுகுகாயத் திரியுமாங்குதித்தாண்மற்றவ்
வருவினையகன்பிறேடு முணர்ந்துளமுருகவல்லா
திருவினைகடிந்துமாயா வின்பமுற்றிருப்பர்மன்றே. ௨௫

பஞ்சப்பிரமத்தின்சிறப்புரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௨௮௨.

இருபத்துமூன்றாவது
வியாதர் வரலாறுரைத்த வத்தியாயம்.

எனவுநான்முகத்தோன்முக்க ணிறைமலரடியிற்றாழ்ந்து
துணிவினில்வியாதன்வந்து துலங்கிடத்தோன்றுமாறு
முனைவநீயெய்துமாறு மொழியெனவுரைத்தலோடுஞ்
சினவிடையுயர்த்தவண்ணல் செவ்விதிற்செப்பினானே. ௧

முறையின்வந்தெய்துமூன்று முகந்தொறுமுடிவிலாத
மறுவறுதவத்துவேத வியாதன்வந்துதிப்பனன்றே
நெறிவருமறைகள்யாரு மறிந்திடவேண்டியன்பா
னெறியினிற்பகுத்துமன்று முலகினினிகழ்த்துவானே.

உலகமுய்ந்திடுவான்ஞான மொழிவறவுணர்த்தவேண்டி
மலைவறுதவத்தோனாகி வருகுவன்யானுமென்பா
லலைவறுமன்பினோடு மடைகுவர்நால்வரன்னோர்
தலைமைசேர்ஞானமெய்திக் கயிலையங்கிரியிற்சார்வார். ரு

விண்ணவரிறையுநீயும் விரிதலையரவிற்றுஞ்சுங்
கண்ணனுமிலிங்கபூசை காதலாலியற்றியன்றே
வண்ணலம்பதங்களெய்தி யமர்ந்தினிதிருத்திரென்னாத்
தண்ணிலாமுடித்தவேணித் தனிமுதன்மறைந்தானன்றே. சு

வியாதர்வரலாறுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-உஅசு.

இருபத்துநான்காவது
நீராடல்விதியுரைத்த வத்தியாயம்.

என்னனுமிலிங்கபூசை யெங்ஙனம்புரியுமாறு
பன்னுதியென்றுபோற்றிப் பழமறைமுனிவர்கேட்பக்
கன்னலிற்கனிந்ததீஞ்சொற் கனங்குழைபங்கில்வாழு
முன்னவற்றொழுதுசூத முனிவரன்மொழியலுற்றான். க

வேறு.

அந்திமதிக்கொழுந்தணியு மலர்சடையோன்மலைமகளுக்குரை ந்தவாறு, நந்திதனிகேட்டுயர்ந்த சனற்குமாரமுனிவனுக்குநவில வன்னோன், முந்தைமறைவியாதனுக்கு மொழிந்தபடியானுமக் குமொழிவனென்னாச், சிந்தைமகிழ்ந்தருந்தவர்க்குச் செயிரிலா தசூதமுனிதெரித்தானன்றே. உ

உந்துதடந்திரைபுரட்டி யொழுகுநதிப்புனலாடலுழலின்மு ழ்கன், மந்திரமோர்ந்துணர்தலென மூவகைத்தாம்யாக்கைதூயினை

வயங்கமண்ணை, லெந்தவகைமண்ணினுமற் றெறிதிரைமந்தாகி
னிசெஞ்சடையினேற்ற, வந்தமிலாத்தனிமுதலி னடிபரவார்ம
ருவியமாசகன்றிடாரே. ௩

மண்ணினாற்கோமயத்தான் மாமறைமந்திரங்கொடுதன் யா
க்கைமண்ணிப், புண்ணியநன்னீரிருகாற் பூந்துகில்வெவ் வேற
ணிந்து மூழ்கிப்பின்னர், கண்ணுதல்பூங்கழல்பரவி முச்சுடர்ம
ண்டிலமிசைந்துகமழும்பைந்தா, ரணைனல்வருணனைப்பரவித்தல
த்தொழுகுதண்புனலி னாடல்வேண்டும். ௪

நீராடல்விதியுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨௪0.

இருபத்தைந்தாவது

சந்திவந்தனைவிதியுரைத்த வத்தியாயம்.

தருப்பையினாற்பலாசிலையாற் றனையவிமூகறுமலரா ற்றண்ணீ
ர்தோய்த்துச், சிரத்தினின்முக்காற்றெளித்துத் தெள்ளுமறை
மந்திரத்தாற்செங்கையள்ளி, யருந்தியமுக்காலுதவியாயிரத்தெ
ட்டுருக்காயத்திரிமவின்று, குரைத்தகடன்முன்னோத்தகதிர்க் குழ
விமினையங்கைமலர்கூப்பியேத்தி. ௧

எறிகதிர்நால்வலமாக்கிமின்மலர்சேர்நறியபுனல் விறைப்பிலோ
ர்க்குச், செறியும்விரதுதியிறைவுதவிமுந்நால்வடமாக்கித் தருப்
பைசேர்ந்த, வறன்மலர்க்கைசனியுவிரலான் முனிவருக்கருளி
றாவிடமராக்கி, மறுவில்பெருவிரலதனுற் றிலோதகங்கொண்புல
த்துயர்க்குமரபினல்கி. ௨

நகரின்வடபாற்குணபா னளிபுனற்றண்கலைகண்ணிப்புனல்
னைக்கொண்டு, துகளறுமுக்காலருந்தி யிருமுறைவாயினைத்து

டைத்துத்துலங்குகண்க,டிகழ்தருமூக்கிருசெவிமார்புச்சியிவை செங்கரத்தின் விரலாற்ரொட்டுப், புகழ்தருசுத்தாசமனம் பண்ணிவிரிதருப்பையின்மேற் பொருந்தமேவி. ௩

இலகுபசும்பொன்னிஞற்றருப்பையிஞற்பவித்திரமாங்கிலங் கத்தாங்கி, வலமுழந்தாண்மேல்வைத்தவிடக்கரமேல்வலக்கரத் தைவயங்கச்சேர்த்தி, யலகறுசீர்வாய்ந்தபழமறைநவிலும் * பிரமவெச்சமமையவாற்றி, நிலவுமனையிடையெய்தி யிருதாளின்மணிக்கலசநறுநீர்பெய்து. ௪

* பிரமவெச்சம் - பிரமயஜ்ஞம் என்னும் வடமொழி திரிந்துநின்றது.

அருமறைவேள்விக்கனலினொடுத்துப்பிரணவத்தை யமையவோதி, யுரைபெறுபஞ்சப்பிரமத் தாலுச்சிநெற்றியுரங் குய்யந் தாள்கள், வரன்முறையேயினிதணிந்து பிரணவத்தாலுடன்முழுதும்வயங்கமண்ணி, விரிதுகில்வேரொன்றணிந்துவிளங்குமறைமந்திரங்கள்விளம்பவேண்டும். ௫

சந்திவந்தனைவிதியுரைத்த வத்தியாயமுற்றிற்று.
ஆகதிருவிருத்தம் - உ௫.

இருபத்தாருவது
சிவபூசைவிதியுரைத்த வத்தியாயம்.

மையறுநன்னிலத்திருந்து மன்னுபிராணயாமமரபிற்செய்து, மெய்யினைச் * சோடணத்தாற் * பிலாவனத்தாற்சிவதேகமாக்கிவீறு, மையிரண்டுசெங்கரமுமைந்துதிருமுகமுமாயவிர்வெண்டிங்க, ணையமுழுநிலவெறிக்கும் பளிக்குருவத்திறையவனையுளத்திருடி. ௧

* சோடணம்-சுடுதல். * பிலாவனம்-நனைத்தல்.

மழைக்கருங்கார் தவழ்குடுமி மலையாரப்பூஞ்சேற்றான்மாட்சித்தாக, மெழுக்கெறிந்தநன்னிலத்து மேம்பட்ட பசுந்தருப்பை மேலதாக, விழைத்தகதிர்மணிவள்ளங்கவிழ்த்துநறுநீர்தெளியா வெடுத்துச்சாந்தம், தழைத்த * விலாமிச்சமிறைதண்புனல்பாத்தியவெள்ளந்ததும்பத்தேக்கி. ௨

* விலாமிச்சம் - விழற்புல்லின்வேர்.

திருச்சேராசமனியபாத்திரத்திற்றக்கோலஞ்செறிந்ததிம்பூக், கருப்பூரஞ்சாதிக்கா யிவற்றினறும்பொடியோடு கழுநீர்பெய்து, விரைச்சாந்துதிலங்கடுகு வெண்ணீறுபசுந்தருப்பை நறுநெய்செந்நெல், மருச்சேர்ந்தமலரினுட னருக்கியபாத்திரந்தெண்ணீர் மலியவாக்கி. ௩

களிச்சுரும்புவீழ்போதுசெஞ்சாலிவளர்தருப்பை கமழ்தாமலர், தெளிக்குநறுநீர்பெய்யும்பாத்திரத்திற்பெய்தந்தத்தெண்ணீர்தன்னை, லளித்தருளுமீசான மந்திரங்கொண் டேவற்றினையுந் தெளியாவண்பு, தளிர்த்திறைவன்பாணர்த்தித்தாமனாத்தாண்மலர் தூவித்தாழ்ந்துபோற்றி. ௪

உடைஇனவெவ்விடமயின்றோ னொளிர்மதிசேர் முடியினை யின்மலர்தூவிக், கடிகமழுந்தூபமொடுதீபமிவைநல்கியருட் கடலின்றாய, வடபுறத்தின்மலைமகளை வணங்கிவகிர்பிறைக்கோட் டுவயங்குநால்வாய், விடல்கெழுமுகடவுளையுங் கந்தனையும்விரைமலர்தூய்விரும்பியேத்தி. ௫

செங்கமலமலர்ப்பொகுட்டிற் செய்யதழுன் * மண்டிலமு மிருள்கால்சீக்கும், வெங்கதிரோன்மண்டிலமும் வெண்டிங்கண்மண்டிலமும்விளங்கநாட்டி, யங்குயர்முக்குணமிறுவியவற்றின்மிசையுயிர்மூன்றுமமையச்சேர்த்திக், கங்கைபுனைகடவுளையாவாகனஞ்செய் துள்ளுருகிக்கனிந்துபோற்றி. ௬

* மண்டிலம் - மண்டலமெனற்பாலது.

அண்ணன்மறைமந்திரத்தா லருக்கியமேமுதலாய வளித்து
* வாச, வெண்ணெயுடனானைந்தைவகையமுதநெய்தயிர்பாலினி
யதேறற், கண்ணுடைத்தகழைக்கரும்பின் றீஞ்சாறுசெவ்விள
நீர்கமழ்தண்சாரற், புண்ணியமால்வரைச்சாந்தின் பூந்தேய்வை
யிங்கிவற்றாற்பொலியவாட்டி. ௭

* வாச எண்ணெய் என்பதற்கு-கந்ததைலமென்றுபொ
ருள். இதனை "பிரதமங்கந்ததைலஞ்ச,, என்னு மாகம சு
லோகத்தாற்காண்க. முறைவைப்பு மிதனானேயறிக.

தக்கோலஞ்சாதிக்காய்கருப்பூரந்தாமரைமற்றிவைகள்பெய்து,
மிக்கமறையெடுத்தோதுஞ் சத்தியோசாதத்தால்விளங்குசோதி,
கக்கியவாடகப்பசும்பொற் கலசத்துட்டருப்பையொடுநிறைத்த
நீராற், செக்கரொளிச்சடையோனைத் தெய்வமறைமந்திரத்தாற்
றிகழவாட்டி. ௮

ஒளிவிரிக்குமணியாடையொண் கதிர்கால்பசும்பொனுவரி
யுண்ட, தளிமுகில்கண் படிவந்த தமிழ்மலயச் சந்தனம்போ
திவைகள்சாத்தி, நளியகிற்றூபந்தீப நல்லடிசில்கருப்புரவெள்ள
டையினோடு, மளிதழையவுதவியுயர் மணிமவுலிவிரிகதிர்செய்யா
ரஞ்சூட்டி. ௯

வண்டுபடுமலர்தூவிவழுத்தியபின்மலரடியிற் றாழ்ந்துகொன்
றை, விண்டமலர்ச்சடையோனை யுளத்தினிலாவாகிக்கவேண்டு
மென்றுப், பண்டைமறையெடுத்திசைக்கு மின்னணமாங்கவற்
குவழிபாடுசெய்வோர், தெண்டிரைவெவ்விடமயின்றோன் சேவ
டித்தாமரைமலரிற் சேர்வார்மன்றே. ௧௦

சிவபூசைவிதியுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-௩௦௫.

இருபத்தேழாவது
மானதபூசா விதியுரைத்த வத்தியாயம்.

முற்றிழைபங்கனையுளத்தில் வழிபாடுசெய்யும்வகைமொழி வதுள்ளப், பொற்றநறுங்கமலமேற் பொங்கழலின்மண்டிலமு மிரவிசெய்ய, துற்றகதிர்மண்டிலமுஞ் சுடர்மதிவெண்மண்டில முந்தொடர்ந்துநீங்கா, துற்றகுணமொருமூன்று முயிர்மூன்று மிவ்வடைவேயுறைவுன்னி. க

அனைத்துலகுந்தனியீன்றவமலை யொருபாகனுயவற்றின்மீது, கனைத்துவரிவண்டிமிருங் கடுக்கையந்தார்வானவனைக்கருதல்வே ண்டும், புனிற்றுமதிப்பசுங்கொழுந்து புரிசடையிற்புனைந்த தனி ப்பொருளேயன்றி, நினைப்பவனுநினைவுமென வேறுமொருபொ ருளுளதோநினையுங்காலே. உ

ஆயினுமிவ்வகைகூறு படுத்தியழியாமுதலைமுன்னல்வேண்டுந் தாயவிருபத்தாறுந் தத்துவமாஞ்சோதியேநினைக்குந்தோன்ற லேயவவன்றனைநினையு முயிரிருபத்தைந்தாந்தத்துவமேயாகுஞ் சேயதனியவ்வியத்த மிருபத்துநான்காந்தத்துவமேசெப்பில். ௩

அறையுமகதத்துவத்தோ டகங்காரம்பஞ்சதன்மாத்திரைகள ன்றி, மறையுஞானேந்தியங்கன்மேந்தியமீரைந்துடனேநீங்காதெ ன்று, முறையுமனந்தன்னுடனைம் பூதமெனவிவையாகுமொழி ந்துநின்ற, குறைவிலிருபான்மூன்றுந் தத்துவங்கள்வரன்முறை யேகூறின்மாதோ. ௪

சாற்றுமிருபத்தாறுந்தத்துவமாய் நின்றதனிமுதலேகர்த்தா, தோற்றுவர்மூவருமவன்பாற் றங்கைநதாயில்லாமற்றுவார்த்தசெ ய்வாய், மாற்றரியமென்மழலை மகவில்லாவாறுபோல்வயங்குகூர் ங்கோட், டேற்றைமயிருகொடியுயர்த்த விறையின்றிநிலைக மில் லைமாதோ. ௫

வேறு.

என்னலுஞ்சனற்குமார னந்தியையினிதுநோக்கி
முன்னைநீயமலனென்று மொழிபவன்கருத்தாவாயின்
மன்னுமிந்தியங்கடம்மாற் சிமிழ்ப்புணப்படுமற்றெங்ங
னன்னவன்கருத்தாவாத லறையெனவறையலுற்றான். ௬

உரைபெறுகாலந்தன்னி லுற்றிடும்பொருள்களந்த
வரியகாலத்தைக்கர்த்தா வாக்குமத்தன்மைபோல
விரவியகுணத்தோடொன்றி விமலனுற்றுறையுங்காலை
மருவுமக்குணங்களேயவ் வரதனைக்கருத்தாவாக்கும். ௭

உலகமாங்கவன்றனட்ட மூர்த்தியாயொளிருஞ்செய்ய
மலைவில்பேர்வடிவமாகு மனமொழிகடந்துதூய
வலகில்பேரொளியாய்நின்ற வமலனையுணர்ந்துவாயா
னிலவுநான்மறைகட்கேனு நிகழ்த்திடலரியவாமால். ௮

ஒளியதாயுறையுந்தோன்ற லுலககர்த்தாமற்றல்லன்
றெளியுமாங்கவன்மேலன்பாற் றிரைக்கடலுலகமந்தக்
களைகணின்வடிவென்பாரக் களைகணாயுறையுந்தேவே
விளைதரவுளத்தினாலும் விடாதுநாமுணர்வதம்மா. ௯

வீறுசேரிறையுந்தானுந் தியானமும்வேறென்றோது
தேறுதலழிவிலாத பிரமநற்றியானமாகு
மாறிலிவ்வுலகமீசன் வடிவெனவுணர்கமுன்னங்
கூறியவிறையையாவி யெனக்குறித்துணர்கபின்னர். ௧௦

செங்கயற்கண்ணிபாகன் சேவடிக்கன்புபூண்டோ
ரங்கத்திற்குறைந்தோரேனு மருங்குலமில்லாரேனு
மிங்கிவர்தம்மைநெஞ்சால் வாயினாலிகழ்ந்தோர்யாரும்
வெங்கனரகந்தன்னில் வீழ்ந்துயிர்பதைப்பர்மாதோ. ௧௧

கருங்கயன்மருட்டிநீண்டு கதிர்மணிக்குழைமேற்பாய்ந்து
பொருந்தடங்கண்ணிபங்கிற் புனிதன்றனடியிற்றாழ்ந்து
மருங்குவந்தணையாத்தாரு காவனமறையோர்யாரு
மருந்துயருழந்தாரென்ன வறைந்தனனந்திமன்னோ. கஉ

மானதபூசாவிதியுரைத்த வத்தியாயமுற்றிற்று.
ஆகதிருவிருத்தம்-ருகஎ.

இருபத்தெட்டாவது
தாருகாவனத்திற்சிவன்பலியேற்கச்சென்றவத்தியாயம்.

ஆதியங்கடவுடாரு காவனத்தடைந்தவாறு
மாதவத்தோர்கள்யாரும் வள்ளலையிகழ்ந்தவாற்றாற்
றீதுழந்தழிந்தவாறுஞ் செப்பெனச்சனத்குமாரன்
காதன்மீக்கூரநந்தி கழறுவான்றொடங்கினனே. க

நீற்றொளிபழுத்தநெற்றி நெடுநிலாவேணியண்ணல்
சாற்றருமுனிவரெல்லாந் தாருகாவனத்தினின்று
மாற்றியதவத்தின்றன்மை யறிந்தருள்புரிவான்வேண்டி
மாற்றருமழகுவாய்ந்த வடிவொடுமெய்தினனே. உ

முகிழ்ந்தவாண்முறுவல்பூத்த முகத்தொடுமுக்கட்டேவன்
றிகழ்ந்தகாருருவங்கொண்டு திகம்பரனாகித்தோன்ற
வகங்கனிந்துருகியோடி வருந்தவமகளிரெல்லா
மகிழ்ந்துகார்வரவுகண்ட மடமயிற்குழாத்தின்மொய்த்தார். ௩

வேறு.

மல்லிகைமணந்துசெறி வாசமலர்க்காவின்
மெல்லிதழவிழ்க்குமலர் கொய்தல்விழையாமே
முல்லைநகைமாதர்சிலர் முத்தணிபிறங்கச்
சில்லரியகிண்கிணி சிலம்பவெதிர்சென்றார். ௪

வீங்குமுலைவெய்யபொறை மெல்லடிபெயர்ப்பின்
வாங்குமிடைவாழ்கில தெனக்கனா தண்மானப்
பூங்குழலிரங்கவளி பொங்குசுனையாடார்
மாங்குயின்மருட்டுமொழி மாதர்சிலர்வந்தார். ௫

சோலையுறைகிள்ளைவளை சூழ்தளிரினேந்திப்
பாலனையமென்மொழி பயிற்றலுமறந்து
சாலமணிமேகலை தளர்ந்ததுமருங்கென்
றேலமிடமாதர்சில ரோகையினடந்தார். ௬

மெல்லடியபஞ்சுசில மேவசிலமீள
வொல்லையினலத்தக மணிந்தவகையொப்பச்
செல்லுமலர்சீறடி சிவப்பவெழின்மேவும்
வல்லியெனவன்னநடை மாதர்சிலர்வந்தார். ௭

வார்குழையின்மீதுபுனை வாசமுழுநீல
மாரும்விடமின்னமுத மாக்கும்விழிபாய
பாரின்மிசைவீழுமவை போற்பரியவோடிக்
கார்மயிலையன்னசில கன்னியரடைந்தார். ௮

கோடுபடுவெம்முலை குளித்துதிரமூழ்கு
மாடன்மதன்வாளிபுறம் வீழ்வதெனலாகிப்
பாடகமென்சீறடிய பஞ்சுபடவைம்பாற்
சூடுமலர்சிந்தமட மாதர்சிலர்சூழ்ந்தார். ௯

மாகமுறநீள்குடுமி மல்லல்வரைகாணூத்
தோகையெழுந்தார்வமொடு சூழ்வதெனலாகிப்
போகிதழலங்கல்புனை பொற்றபுயநோக்கிப்
பாகின்மொழிமாதர்சிலர் பயப்பயவெதிர்ந்தார். ௰

ஆயிதழ்முறுக்கவிழு மங்கமலநோக்கித்
தூயசிறையன்னமிளை தொக்கனகடுப்பச்
சேயவடிமாமலர்கள் கண்டுசிலைபங்கேழ்
வேயனையதோளியர்கள் மெல்லெனவெதிர்ந்தார். ௧௧

இன்னமுதுசிந்துவிறை பாடலிசன்மாரன்
கன்னல்வரிவெய்யசிலை தோள்கழியவாங்கித்
துன்னுமலர்வாளிபல தூவல்வளையாழப்
பொன்னெழுதுசாயலவர் பூண்முலைமடுத்தான். ௧௨

ஆங்கவர்கடம்மிலோ ரணங்கனையமாது
தாங்கிருள்விடுத்தகுழல் சோரவிழிசோர
வீங்குமுலைமென்பகலை போர்ப்பவிடையோன்மேற்
றூங்கரியவுளமொடுஞ் செல்லநனிசார்ந்தாள். ௧௩

உள்ளநிரம்பியொழி யாதவளொர்காதல்
வெள்ளவலைமேலெழுந்து வீழ்வதெனலாகிக்
கள்ளவிழுநீர்குவளை காலமொருநாள்
பிள்ளைமடவன்னமிவள் பெண்மொழிபகர்ந்தாள். ௧௪

மற்றவளொருத்திமனமீ னார்குறையுமெறிப்பச்
செற்றுகதிர்மேகலை சிலம்பொலிசிலம்ப
வற்றரின்மறைநக்குமரி தாயமொருடன்போய்
பற்றுவலெனத்தளர்ந்து பேசியலடர்ந்தாள். ௧௫

பண்ணனிசையிரங்குமயிர் பதித்துலவுசெவ்வா
யன்னவிருதாளுமுயர் தோளுமகன்மார்பும்
கண்களிணைகளிப்பவெழு காதன்மிகநோக்கிப்
பெண்ணமுதநாமமொரு பேதைகுழைவுற்றாள். ௧௬

தங்கியுளத்துள்ளுறைந்த தாங்கரியகாம
வெங்கனலின்வெம்பொறிகள் மேற்பொடித்ததென்னச்
செங்கதிரெறிக்குமணி சிந்தவுளமாழ்கி
யங்கலுழுமேனியொ ரணங்குமெலிவுற்றாள். ௧௭

தாங்குழலையாரழ றணித்திலமெனத்தம்
பூங்கதிர்முகங்கரிதல் போலவெழுகாம
வீங்கழலினூற்கருக வெள்ளைமணிமுத்தம்
வாங்குமிடைவாணகையொர் மாதுதளர்வுற்றாள். ௧௮

மின்னுவயிரத்திரள் விளங்கியகலாப
மன்னமென நூபுர மரற்றுமடிசூழப்
பொன்னுலைகடுக்குமொளி பொங்கவவணின்றாண்
மன்னுதிரைநீரர மடந்தையெனலானாள். ௧௯

விண்ணுருவுபொற்குடுமி மேருவரைபோலும்
வண்ணமலர்மார்பினின் மணத்தியெனவண்ணல்
வெண்ணிலவின்மென்னகை விளைப்பநகையாய
தண்ணெனமுதுண்டொர்மட மாதுயிர்தளிர்த்தாள். ௨௦

நீலமணிமேகலையு நித்திலமுயிர்க்குஞ்
சோலையிளவேயனைய தோள்வளையுநீங்க
வாலவிடமூறும்விழி யாயிழையொருத்தி
கோலமலரூழ்த்தநறுங் கொம்பரெனநின்றாள். ௨௧

பாயலைதவழ்ந்துகளை பாய்கடலின்முத்த
மேயவடமெய்யழலின் வெந்தொழுகுசுண்ணஞ்
சேயதளிர்மேனிமுழு தாகவொளிசிந்து
மாய்வளையொருத்திமட வன்னமெனலானாள். ௨௨

கத்திகைநறுங்குழலொர் காமரிளவல்லி
முத்தகமுரிஞ்சுமுலை முக்கணிறைநோக்க
வத்தலைவெகுண்டுகதி ராய்வலையொருத்தி
தத்தரிபரந்தகுழை தாவுவிழிசேர்ந்தாள். உ௩

வேறு.

கருங்கொடிப்புருவங்கோலிக் கதிர்மணியெருத்தங்கோட்டி
மருங்குலந்தானைசோர மாரன்வெம்பகழிக்காவி
விருந்தளித்தேதந்துகோட்டு வெம்முலைசுமக்கலாற்றாச்
சுருங்குநுண்மருங்குல்சாயத் தோகையிற்சிலர்கணிற்பார். உ௪

மருமலர்க்கூந்தற்றாழ மணிதெளித்தெழுதியன்ன
புருவவிற்கோலிச்செம்பொற் பொருப்புவிற்குழைத்தவண்ணல்
கருதிறம்பழுத்ததின்னோட்டக் கனவளையிலக்கமாக
வரிமதர்மழைக்கணம்பு தொடுத்தனரயர்ந்துநிற்பார். உ௫

அலைதவழ்கடலிற்பட்ட வலர்கதிராரந்தாழு
முலையளவன்றுபைந்தார் முருகுலாமார்பமென்பார்
மலையளவல்லவீங்கு வயங்கெழிற்றோள்களென்பார்
சிலையளவல்லவின்று திகழ்தருபுருவமென்பார். உ௬

கள்ளவிழ்கொன்றைமாதர் கடவுள்பூங்கழற்கானோக்கி
மெள்ளவேவீதிசெல்லில் விரிசிறைவண்டுபாட
வள்ளலந்தேற்றுநாறு மரக்கிதழ்முளரிவாட்டத்
தெள்ளருதல்வருங்கொலோவென் றிரங்கினரிசைத்துநிற்பார். உ௭

மழைமுகிலென்னநின்ற வள்ளறன்புயத்தைச்சேரா
விழைவளர்பசும்பொன்மேரு வெனவெழுமுலையழுத்தக்
கழைவளர்தோளுமாளா கவின்பெறப்படைத்துவைத்த
வழியாதுக்கலைப்புத்தேள் வாழியபெரிதுமென்பார். உ௮

பிள்ளைவண்டாரற்றவிண்ட பெய்மலர்த்தொங்கரூழ்ந்த
வெள்ளுவதொன்றுமில்லா விருபுயத்தணைத்தியென்பார்
புள்ளவாமதன்கைவாளி பொழிந்திடப்பார்த்தியென்பார்
வள்ளலேயுனதுநெஞ்ச மறந்ததோவளிமற்றென்பார். உக

முயலடைகிடக்கவில்லா முழுமதிமுகம்வேராட
வெயின்மணிக்கலையுந்தாரும் விரிகதிர்த்தொடியுநீண்ட
சயலொடுபொருதுசேர்ந்த கண்ணினீரோடுஞ்சோர
மயன்முகிழ்த்தெழுந்துவிம்மு மனத்தினராகியிற்பார். ௩0

குழந்தைவெண்டிங்கள்வெய்ய கூற்றெனவந்துதோன்றிப்
பிழிந்துயிருண்ணுமுன்னம் பெருவனாயனையதோளி
லெழுந்துவெம்பசலைபோர்த்த விணைமுலைகுளிப்பவாங்கி
யழுந்திடப்புல்லியெங்க ளாருயிர்காத்தியென்பார். ௩க

ஐயரியொழுகுகண்ணு லவனுளங்குழைக்கமாட்டார்
பையரவனையவல்குற் பனிமொழிப்பவளச்செவ்வாய்
நையுநுண்மருங்குலம்பொ ளுகிளவல்லியொப்பார்
வெய்யவார்முலைகளோடு வெதும்பினருடிகிற்பார். ௩உ

கத்திகைநறுமென்கூந்தற் கனங்குழைமடநல்லார்கள்
வித்தகமதன்கைவாளி வெம்முலைக்கோட்டின்மூழ்க
மத்தெறிதயிரின்மாழ்கி யவன்மலரடியின்வீழ்ந்து
தொத்தலர்மாலைதாழ்ந்த துணைப்புயத்தணைத்தியென்பார். ௩௩

உலைமுகம்பழுத்தவொள்வே லோடரித்தடங்கணல்லீர்
மலைவறுபாடலென்னும் வலையினுலுள்ளம்வெளவிக்
கொலைசெயவந்துநின்ற கூற்றுவனல்லான்மற்றுப்
பலிகொள்வானெண்ணிநம்பாற் படர்ந்தவனல்லனென்பார். ௩௪

பரும்மணிக்கலாபஞ்சூழ்ந்த பாம்படுமல்குல்வெய்ய
வருமுலைத்துவர்த்தசெவ்வாய் வார்குழையலைத்தவாட்க
ணரிவையருள்ளமாழ்கி யிவ்வகையறையவொன்
முறையலறுகின்று ரெண்ணறு தன்மடந்தைபாகா. ௩௫

தாதுலாமலங்கல்சூழ்ந்த தாழ்குழன்மகளிரெல்லாங்
காதன்மீக்கூரமேனி கவினழிந்திரங்கநோக்கிச்
சோதியாயெங்குமாய தோன்றலையறியாராகி
மாதவத்தோர்கள்யாரு மயங்கினர்சபித்திட்டாரால். ௩௬

அற்றமில்தவங்கள்செய்யு மருமறைமுனிவர்யாரு
முற்றுரைத்திட்டசாப மொளிமணிமுத்தஞ்சிந்து
மெற்றுநீர்க்கடலிற்றோன்று மிரவிமுன்மழுங்குமீன்போற்
பற்றலர்புரங்கள்செற்றோன் பாலுறுகாதுமாய்ந்த. ௩௭

மறையவர்சாபந்தன்னால் மாய்ந்ததுதக்கன்வேள்வி
யறைகடற்றுயிலுமாயோ னடைந்தனன்பிறவிவானோற்
கிறைகுறியிழந்தான்முன்ன மெய்தினர்வசுக்கண்மாயப்
பிறவியைநகுடன்மேனாட் பெருமலைப்பாம்பாய்வீழ்ந்தான். ௩௮

துன்னிருண்மருட்டுமேனித் துண்டவெண்பிறைப்பற்காலன்
பின்னவர்குலத்துவந்து பிறந்தனன்பிரசாறு
கன்னியந்துளவமாலைக் கதிருமிழ்கிரிமாயன்
மன்றுவெண்டரங்கவாரி மாய்ந்ததுபாலின்றன்மை. ௩௯

ஈங்கிவரன்றிப்பின்னு மெண்ணிறந்தோர்கள்வெய்ய
தீங்குறுசாபந்தன்னாற் றீர்வருந்துயரின்வீழ்ந்தா
ராங்கதுபரமன்றன்பா லடைந்திலதென்றாலியாரோ
மாங்குயிற்குதலைபங்கன் பெருமையைவகுத்தற்பாலார். ௪௰

சிறந்தமாதவர்கண்முன்னர் திகழ்தரசின்றவீசன்
மறைந்தனன்மறைதலோடு மற்றவர்கலங்கிமாழ்கி
நறுந்துழாய்மாயனுந்தி நாண்மலர்ப்பொகுட்டிற்றோன்று
மறங்களாநாவினனை யடைந்தனர்வணங்கிகின்றார். சுக

செற்றமிறவத்தோருற்ற வகையெலாஞ்செப்பலோடும்
பொற்றசெங்கமலமேய புங்கவனவரைநோக்கி
யற்றமின்மறையுங்காணு வண்ணலேயாகுநும்பா
லுற்றவனவனையென்கொ லுணர்ந்திலீரறிவிலார்போல். சுஉ

வடிவிலானேனுமுன்னூல் மாண்பிலனேனுந்தன்பா
லடைதருமதிதிதன்னை யிகழ்ந்திடலாகாதூய
வொடிவினன்மறைகளோதி யொண்டழலோம்பிநாளு
மடவரலோடுமில்லின் வாழ்ந்திடுமறைவல்லோர்க்கே. சுரு

வேறு.

அருமறைதேர்சுதரிசனனெனுமறையோன்முன்னைநாளழியாக்கற்பின், வருமுலைமென்குமுதவிதழ்மனைவியெழின் முகநோக்கியதிதிசேரிற், றெரிவரியபூசனைகளினிதாற்றிவேண்டுவன சிறப்பினல்கி,மருவுதியென்றாங்கவனுண்ணசையினு லுளாசெயினுமருவுகென்றான். சுச

கொழுனனிவை யுளைத்திடலுமிருதடங்கண் புனல்வாரக்குழைந்துமாழ்கு, மிழைதவழுமுலையாளைநோக்கிமட மாதிரங்கலெய்துகின்றே, ரழிவிறனிமுதலாவராங்கவர்கள் வேண்டுவனவளித்தியென்னத், தொழுதகையகற்புடையளாதலினு லாங்கதற்குத்துணிந்தாண்மன்னே. சுரு

ஆயிழையாங்கியைந்திடலு மருமறையோன் மனையகன்றகாலைநோக்கி, மாய்விலறக்கடவுளொருமறையவனய்மனையகத்தும

ருவலோடுங், காய்கதிர்ப்பூண்மடநல்லாளடிசின்முதல் வேண்டு வனகளிப்பினல்கத், தூய்மறையோனகமகிழ்ந்து துணைமுலைக் கோடழுந்தவெனைத்தோய்தியென்றான். ௬௬

என்றலுந்தன்கணவனுரைமுன்றள்ளநாணம்பின்றள்ளவே ந்து, குன்றனையகுவிமுலையாள் விழிபுதைத்துமெய்நடுங்கிக் கு ழைந்துமாழ்கி, நின்றிடுமக்காலைதனிற் கொழுநனுங்கெய்திட லுமதியானின், மன்றல்கமழ்கருங்கூந்தன்மனைவிமுலைத்தடந் தோய்தன்மகிழ்ந்தேனென்றான். ௬௭

இனையமொழிகேட்டிடலுமினிதெனத்தன்னுள்ளமியைந்தி ளர்ந்தேன்மாந்திக், கனைவரிவண்டிமிர்கூந்தற்காரிலிதோண்மணை த்தியெனக்கடையினேகத், துணைவிலுயர்தருமமுளை மிகமகிழ்ந் து தனதுருவந்துலங்கத்தாங்கி, யனையவன்பாலெய்திடலு மாங் கவனுமடிபரவியன்புறுத்தான். ௬௮

கணங்கொள்சுரும்பிமிர்கூந்தலின்மனைவிகழைத்தோள்கள் கருத்திறைவு, மணந்திலனியானுமதுள்ளத் தாய்மைதெரிவான் வந்தேன்மாற்றலாதா, வணங்கிசையுங்கொடுங்கூற்றமனுகாது றும்முழையென்றருளியென்பாற், றணந்துமற்றெவ்வுலகுந் தாழாமலுயர்ந்துவளர்தருமந்தானே. ௬௯

ஆதலாலதிதிதனைவழிபடுதல்வேண்டுமாலன்னறன்னைப், பே தையர்போனிகழ்வதானீர்நும்பாவத்தாற்பெருநீர்க்கங்கை, தா துலாஞ்சடைக்கரந்ததனிமுதலேசாருகவடைதிரொன்றுப், போ திறொன்முகமுனிவர் முகநோக்கியருளினொடும் புகன்றானன்றே.

அறந்தவர்க்கேயல்லதவன் றூயமலர்த்தாளிணைகள்தொழுத ல்கூடா, மறங்கொள்சினவுழுவையதள் வனைந்தபிரானடிக்கம

லம்வணங்கியேத்தித், திறம்பலிலாத்துறவினதுதன்மையறிவா
னெமக்குத்தெரித்தியென்னக், கறங்குதடந்திரைபுரட்டு கடலு
லகம்பூத்தமுனிகழறலுற்றான். ௫௧

அருள்சுரந்தகுரவன்பா லருமறைநூலகத்துணருமளவாறு
லும், பருவமொருபன்னிரண்டா யிலும்பிரமசரியத்தைப் பண்
ணிப்பின்னர், குரவனதுதண்ணளியா லில்லறம்பூண்டழல்வே
ள்விகோதினாற்றித், தெரிவரியமழலைமொழிச்செங்கனிவாய்மக
வுயிர்த்துச்செழுங்கானண்ணி. ௫௨

அறுமதியாயினுமதியீராறெனினும்பன்னிரண்டுபருவமேனு
ம், மறுவறவான்பாலருந்திமறைநவிலுமுத்தழலுமரபினாற்றிச்,
குறைவறுதென்புலத்தவரைத்தேவர்களைமுனிவர்களைக் குழைமூழ்
துபோற்றி, யுறுபொருளாங்கெவற்றினையுமுற்றமறையவர்தம்
பாலுவந்துநல்கி. ௫௩

குரவனடிபோற்றிமுற்றத் துறந்ததற்பின்கோதில்சருசருக்
திச்சின்னாண், மருவிடுகவதனிடையிலாவிதணந்திலதென்றால்வ
டபாலேகி, யரவவிரிபுனலுடுத்தவகனிலத்தைவலம்வருமக்கா
லையாவி, யொருவுவரோன்மலைமடந்தை யோர்பாகனடியிணைக்கீ
ழுற்றுவாழ்வார். ௫௪

துறந்தவரேயன்றித்தம்மனைவியினாலலர்துய்த்துவாழ்வோரோ
னுங், கறங்குதிரைவிடமயின்றகண்ணுதல்பொன்னடிபரவிற்க
தியிற்சேர்வா, ரறந்திறம்பாவேள்விபலவாற்றியெவன்றனையிவை
யளித்தோனெங்கு, நிறைந்துறையுங்கடவுளடியிணைக்கின்றோர்
நீங்காதமுத்திசேர்வார். ௫௫

முன்னங்காலனைக்கடந்தான் சுவேதனெனு மாமறையோன்
முகிழ்வெண்டிங்கண், மின்னகுசெஞ்சடைவனைந்தவெள்விடை
யோனருளினு லன்றேவென்ன, வன்னமுயர்த்தோயவன்பால்
வெங்கூற்றமணுகாமலகன்றவாறு, பன்னுதியென்றுயர்தவத்து
ப்பழமறையோர்பகரவவன்பகர்ந்தானன்றே. ருசு

தாருகாவனத்திற் சிவன்பலியேற்கச்சென்ற
வத்தியாயமுற்றிற்று.
ஆக திருவிருத்தம் - கஎக.

இருபத்தொன்பதாவது
சுவேதன் காலனைவென்றவத்தியாயம்.



சிறியதூரம்வாணாளொன்றெண்ணிமறைச்சுவேதனுளிர்திங்
கள்வேணிக், கறைமிடற்றோனடிபரவுங் காலையினிற்கண்களழ
ல்கதுவக்கீற்றுப், பிறையெயிற்றுவாய்மடித்துப் பெருஞ்சினந்த
ன்றலைக்கொளீஇப பிறங்குபொற்கோட், டிறுவளைகால்கொடுந
டந்துவருவதெனவெங்காலனெய்தினனே. க

புரையுந்தண்குடைப்பொழிமதுக்கமழ்பசுந்தெரியற்
பிருதுசக்கரவர்த்தியாம்பெரியவேந்தனையும் உ0

வாசுதேவனேடறிவினல்வயங்கனுருத்தன்
தேசுடைப்பிரத்தும்மினன்றிகழ்சங்கரிடண
னேசிலீங்கிவர்நால்வர்க்குமெழின்மணிமிடற்ற
மாசிலாவிடபத்துசனென்னும்வள்ளலையும். உக

முதிர்கலாதவெண்முகிழ்நிலாமுடித்தவனருளால்
விதியினலபிடேகஞ்செய்தெழில்பெறவிளங்கி
யதிருமாகடலண்டங்களெவற்றிற்குமுதலாய்த்
தகைதமலர்ப்பொதுட்டண்ணலுமோவிதாங்கினனால் உஉ

இன்னவாறிவர்க்கருளிமாலயன்றொழுயாவும்
மன்னிமன்னிடாதுறைதருமயேசுரன்விளங்கு
மின்னவாவியபொன்முடிவிரியுமிவ்வுலகிற்
றுன்னிவாழுயிருய்ந்திடச்சூட்டினனன்றே. உங

சூரியனுக்கு முடிசூட்டியவத்தியாய முற்றிற்று.
ஆக திருவிருத்தம்—அசுங.

ஐம்பத்தேழாவது

சூரியன்றோற்றமுரைத்த

வ த் தி யா ய ம்.

——0)(*)(0——

என்றுகூறலுமிடைவிடாமுக்குறும்பெறிந்து
துன்றும்வல்வினைத்துரிசறுத்துயர்ந்தமாமுனிவர்
மன்றவெங்கதிர்வெய்யவன்றோற்றத்தைவயங்க
வொன்றுமாறுரைசெய்யெனச்சூதனுமுரைத்தான். க

புரியவிழ்ந்ததாமரைமலர்ப்பொகுட்டுறைமறையோ
னிரவுபோயபினான்குபூதங்களுமிருப்ப
வுருவவெங்கனலிறந்திடவுலகமற்றெவையுந்
தெரிகலாமையிற்சிந்தனைமயங்குபுதிகைத்தான் உ

திகைத்தபின்னொளிர்தேயுருபத்தினைத்தாங்கி
யுலகக்குநீள்புனன்மீதிருந்தழலையுண்டாக்கிப்
பகுத்ததிவ்வியம்பவுதிகம்பாத்திபமென்ன
வகுத்துமூன்றுபேரவற்றினுக்கிட்டனன்வயங்க. ௩

உரைத்தமூன்றினுட்டிவ்வியவழலொளிர்பருதி
பரிக்குமெய்தொறுமுறைகனற்பவுதிகமாமால்
விரிக்குமெவ்வுலகத்தினுமனைதொறும்விளங்கி
யிருக்குஞ்செந்தழலியம்பிடும்பாத்திபமென்றே. ௪

உறையுமெய்யினிலுற்றிடுபவுதிகமதனை
யறைவர்சாடராக்கினியென்றுமலம்புதெண்ணீராற்
குறைவிறிவ்வியம்பவுதிகங்கெடாவியல்குலவி
நிறையுமில்லுறைபாத்திபங்கெட்டிடுநிகழ்த்தில். ௫

அலரும்வெங்கதிர்தன்னுடையொளியையாரழலி
னிலவவைத்திடுமாலையம்போதுநீடிருள்செய்த்
திலகவேற்செய்வான்றோன்றிடுகாலையோரழலின்
மலைவில்சோதியைமீட்டுந்தன்னுழையினில்வாங்கும். ௬

அரவவெண்டிரையார்த்தெழுமலைகடன்முகட்டி
லிரவிதோன்றியகாலமற்றிரவுபோயுறையும்
விரியுநீரிலவ்வெய்யவன்குடகடல்வீழின்
மருவுமாலையம்பகலும்போய்மறிபுனலுறுமால். ௭

பகலின்வெங்கதிரவற்றினுட்பனியினைப்பெய்யுந்
திகழுஞ்சந்திரனெனவுறைசிறந்துமுன்னூறும்
புகலுமின்னமிர்தெனவெழிற்பொருந்துநானூறு
மகிலமெங்கணுந்தழைத்திடமழையினையளிக்கும். ௮

பாங்கிற்சுக்கிரனெனப்பகுத்துரைக்குமுன்னூறுந்
தேங்குதண்ணொளிதிகழ்மணித்திரளொடுத்தெறியும்
வீங்குதெண்டிரையுடுத்தபேருலகெலாம்விழுங்கித்
தூங்கும்வல்லிருடுணிபடச்சுடர்வெயில்விரிக்கும். ௯

வருணன்வெய்யவையாயிரங்கதிரொடுவயங்கும்
பொருவிலந்தவாறாயிரங்கதிர்செயும்பூடா
விருளையோட்டியேழாயிரங்கதிர்திசையெறிப்ப
விரியும்வானிடையங்குசன்விளங்கிடச்செலுமால். ௧0

இலங்குகின்றவெண்ணாயிரங்கதிரினையெறித்துத்
துலங்குபொற்றடந்தேர்மிசைத்தோன்றிடுந்தாதர்க்
கலங்குதெண்டிரையுலகினையிந்திரன்கவின
விலங்குமொன்பதினாயிரங்கதிரினால்விளக்கும். ௧௧

பாயசெங்கதிரொருபதினாயிரம்பரப்பி
மேயபொன்வரைவலம்வரும்விளங்குபாச்சனியன்
வாய்விரிந்திடத்தாமரைமலர்கதிர்பதினோ
ராயிரம்விரித்துலவிடுஞ்செபத்திமானறையில். ௧௨

எவ்வெலாத்திசைமருங்குமேழாயிரங்கதிர்கள்
செவ்வனேவிரித்தொளிருமித்திரன்செலவயருங்
கவ்வைநீக்கடேறன்றியெண்ணாயிரங்கதிரால்
வெளவுமாணிலத்திருணினைவயங்கெழிறோடா. ௧௩

ஆரியமாப்பதினாயிரங்கதிரினையலாது
முனைசெயொன்பதினாயிரங்கதிரினையுமிழ்ந்து
விரியும்வானிடைவிலச்சுவான்செல்லும்விட்டுணுவு
மிருள்கிழிக்குமேழாயிரங்கதிரினாலிலங்கும். ௧௪

இயம்புசீரினவேனிலினிருளெறிகதிரோர்
வயங்குமெய்யொளிகபிலமாம்வேனிலின்வாசு
முயங்குதாமரைமுகைமுறுக்கவிழ்ந்திடத்தோன்றித்
துயங்குவெய்யவானிறம்பசும்பொன்னதாஞ்சாற்றில் ௧௫

ஆரமேகலைமடந்தையரிருக்கையாடவர்சேர்
காரின்வந்தெழுபகலவர்கதிரொளிசுவேத
மேர்செய்கூதிரினெழுகதிர்வளரொளியியம்பி
லோருமேலவரொளிபெறுபாண்டுவென்றுரைப்பார் ௧௬

எதிருமுன்பனிக்காலத்தினிருட்குறும்பெறிந்து
கதிர்செய்வோரொளிதாம்பிரவண்ணமாங்கழறில்
முதிரும்பின்பனிக்காலத்தின்முத்தெறிகடல்வா
யுதையஞ்செய்பவரொள்ளொளியுலோகிதமாமால். ௧௭

இரவிதோற்றமும்வண்ணமுமிசைத்தனமந்தப்
பருதியுந்திகழ்பானிலாப்பசுங்கதிர்விரிக்கு
முருவவெள்ளைவெண்மதியமுமுரவுநீர்க்கடல்வாய்க்
கரியவெவ்விடமுண்டவன்கண்ணிணையென்பார். கஅ

சூரியன்றோற்றமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—அஅக.

ஐம்பத்தெட்டாவது

சூரியன்முதலான கோளுநாளு முரைத்த வத்தியாயம்.

—o)(*)(o—

விரியும்வானினுறைகோளின் றன்மையினுநனிவிளங்கப்
பரிவாலுள்ளங்கொள்ளும்வகைபகர்வாமெடுத்துப்பழைமறைக
ளுரைசெய்வேள்வித்துறைமுற்றியுயர்ந்தமுனிவிர்காளென்று
கரியமிடற்றோனடிவணங்கிச்சூதமுனிவன்கழறினான். க

அழலின்றன்மையாகுமாலலைவாய்முகட்டினெழுபருதி
வழியும்புனலின்றன்மையாம்வயங்குமொளிகால்வட்டமதி
நிழல்கால்வேலோன்கூறுகுலவுபுகழ்ச்சேய்மலர்மடந்தை, கொ
ழுனன்கூறும்புதனென்னக்கோதின்றுணர்ந்தோர்கூறுவார். உ

வயங்குமழுவாளுருத்திரன்றன்கூறுமறலிகூறுமா
மியங்குமணித்தேருறைவெய்யோனினிதினீன்றபுகட்காரி
தயங்குந்தேவகுருவாகிச்சாருந்தகைசேர்வியாழமற்றப்
புயங்கொள்வலியாலுறையசுரர்குருவாய்வெள்ளிபொருந்துமால்
சுடர்செய்பருதிவிசாகத்தினதிதிவயிற்றிற்றோன்றியதா [ன்
னொடியாத்தருமன்றனக்குமதி யுதித்ததொளிருங்கார்த்திகையி

மிடல்சேர்பிருகுமுனிவற்குவெள்ளிபூசத்துதித்தா
லடைவேபூராடத்திலங்கிராவுக்குதித்தானந்தணனே. ச

சேயமலர்வாழந்தணர்க்குப்பூராடத்திற்றிகழ்ந்துதித்த
தாயுங்கதிர்சேய்சுடர்ப்பருதிதனக்காங்கறையுமிரேவதியிற்
பாயும்புரவித்தேர்க்கரியோனுதித்தான்பகருமவிட்டத்திற்
றூயகதிர்செய்மதியினுக்குத்துலங்குமறிவன்றேன்றினனல். ரு

வயங்குகோளிற்செங்கதிரும்வான்வாயிருபத்தேழாகித்
தயங்குமுடுவிலவிட்டமுந்தண்ணெளிசேர்மற்றைத்தாரகையில்
வியங்கோட்டந்தேர்ச்சுக்கிரனுமேவியுறையுங்கேதுவினி
லியங்குதூமகேதுவுமேமேலாமென்னவியம்புவரால். சு

மருவுமயனமோரிரண்டின்மாசின்றுயருத்தராயனமு
முரைசெய்வருடமைவகையிலுயர்ந்தோர்புகழ்சம்வச்சரமும்
பருவந்தம்மிற்பின்பனியும்பகுக்குந்திங்கட்பன்னிரண்டிற்
புரைதீர்மாசியெனவுலகம்புகலுந்தகமைசால்மதியும். எ

பகரும்பக்கங்களிற்பூர்வபக்கந்தானும்பழுதின்றுய்த்
திகழுந்திதியிற்பிரதமையுஞ்சேருமிருபோதினிற்பகலுங்கலா
முகுர்த்தங்களிலீசன்மகிழும்பிரதோடமுமறிவார்
புகல்வாரதிகமெனமெய்ந்நூல்புரையின்றுணர்ந்தபுலமையோர்.

உரைத்தவிவைகளௌவற்றினையு மொளித்தண்கதிர்கான்முத்தெ
றிந்து, திரைக்கும்பரவைக்கடன்முகட்டினெழுசெங்கதிரோனு
குமாற், பரிக்குமுதல்வனிவன்முதலாங்கோட்களைவைக்குமே
லாகி, யிருப்பன்றுருவனுலகெல்லாமேத்தமகிழ்வினென்னுளும்.

சூரியன்முதலான கோளுநாளுமுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—அகூ௦.

ஐம்பத்தொன்பதாவது

துருவன் துருவபதமடைந்த வத்தியாயம்.

——(*)——

என்றுதவச்சூதமுனிவியம்பிடலுமிருந்தபெருந்தவத்தோர்யாரு, நன்றுமொழிந்தனை துருவனுயர்பதத்தினண்ணிய துநவைகடா, வின்றெமக்குமனமகிழவுரைத்திடுதியெனலோடுமிளந்தேனூற்று, கொன்றையணிசெஞ்சடையோன்குமாகழற்றுளிணைவணங்கிக்கூறினனே. க

திருகுசினமதக்களிற்றுத்தெவ்வோரைதப்புறங்கண்டுசெழூந்தேனூறி, முருகுகமழ்தாமரைத்தாள்வணங்கினோர்க்காசுரிமைமுழுதுமீந்தோன், அருமறையினெறிதவறுதாருயிர்கடழைப்பவருள்பொழிந்துவீங்கு, முரவுநீர்ப்புவிபுரந்தவுத்தானபாதனெனுமொளிறுவேலான். உ

ஆங்கவர்க்குப்பூம்பெண்ணேக்காயினெழில்கவற்றியலர்சுணங்குபூத்து, வீங்குமுலைச்சுநீதியும்வானகற்றிமணிக்குழையிசைபோய்மிளிரும்வேற்கட், டேங்கிசையவளிதவழுங்கருங்கூந்தற்சுரிசியெனூர்துவர்த்தச்செவ்வாய்ப், பூங்கொடியுமனைவியர்வான்வடமீனினென்னுளும்பொலிவின்மிக்கார் ஙு

பஞ்சிசூழ்பரசிறையவகலல்குற்பசுங்கொடிமென்னுசுப்புவாட்டுங், கஞ்சமுகைகவற்றுமுலைக்கருங்கூந்தற்சுரிசியுளங்களிப்பவீன்ற, மஞ்சனையோர்குறங்கேற்றிமணிதிகழுமடங்கலாசனத்தின்வெய்ய, நஞ்சமிழும்வெள்ளிலையநாமவடிவேல்வேந்தனிருக்குமேல்லை. சு

அணைமருட்டுகழைமென்றோட்சனிதியருள் துருவன்மிகவ
கன்றகீர்த்திக், கிணையிலாத்தாதைபாலெய்தியவன்குறங்கின்மி
சையிருக்கமேல்வைப், பணிபுரையுமகலல்குற்சுருசியென்றன்வய
றுதவாப்பாலாவீங்கு, மணிமலைத்தோளரசனெழிற்குறங்கின்மி
சையிரோவென்னமறுத்தாளன்றே. ௫

மற்றவடன்வெய்யமொழிசெம்புருக்கிவிட்டென்ன வந்து
காதூ, டுற்றுநுழைந்திடலோடுமுளக்கமலத்தொடுமுகமென்க
மலம்வாடிப், பொற்றவொளியறமாய்ந்துபோர்வேற்கைத்தாதை
முகநோக்கத்தாதை, சற்றுமிரங்கலனாகி யிருப்பதுகண்டன்னை
பாற்சார்ந்தானன்றே. ௬

உருகியுளமிகத்தளரமெய்ம்முழுதுமறவாடியொளிருஞ்செ
ய்ய, வெறிபசும்பொற்சதங்கைசிறிதலம்பவிழிபுனல்பாயவேங்கி
யேங்கி, வருமகவின்முகநோக்கியிடைதுவளவெதிரோடிமாழ்கி
க்கையா, விருவிழிவார்புனலுடையாவாருயிரோயுற்றதெவனியம்
புகென்றாள். ௭

என்னலும்பட்டவையெல்லாமழலைமொழியாலியம்பலொ
டுமின்றன், மன்னுமெழிற்றாதையன்பா மனைவியரில்மேம்பட்ட
வாற்றால்வெய்ய, வின்னமொழிபகர்ந்தனனென்றிளங்கொடியா
ளொன்றுவினையினந்தேறாறு, மன்னன்மொழித் தாயுரைத்துப்
பின்னருமோருறுதிமொழிகழறினளே. ௮

அரசனெழிற்குறங்கின்மிசை யிருக்கையன்றேயவ்வணங்
குதவிர்த்தாளியாரும், பரவுமின்றதேவருறைபதங்களுக்கெல்லா
முயர்ந்தபதத்தைமேவ, வரியதவம்பலவாற்றியுற்றிடுதியெனவிய
ம்பியோங்கல்வென்ற, வருமுலைகள்பால்சோரமழைநெடுங்கண்
புனல்வாரவருந்தினின்றாள். ௯

இன்னவகையன்னையுரைத் திடலோடுமவளிருதா ளிறைஞ்சி யெழுந், துன்னுமழற்கானிடையிற்றுணைமலர்ச்சீறடிநோவத்து ணைவிசெய்தி, மின்னுநறும்புரிசடையோன் விரைமலர்த்தாளி ணைக்கமலம்விரும்பித்தாழ்ந்து, மன்னுதவக்கவுசிகன்ற னாசிரம மடைந்தவன்றாள்வணங்கினனே. ௧௦

வணங்கியருகுறநின்றசிறுவன்முகமருளோடுமகிழ்ந்துநோ க்கி, யணங்குவடிவேற்றடக்கை யுத்தானபாதனுயிரனையமைந் தா, வணங்கினைவாண்முகக்கமல முளத்தினிலென்னுற்றதுங் யுரைத்தியென்னப், பிணங்குமறைநாமுனிவன் சிறுவனுமாங்கு ற்றதெலாம்பேசலுற்றான். ௧௧

எற்றுதிரைமண்புரக்கு மென்றுலைதகுறங்கின்மிசை யிருக் குமெல்லை, யுற்றனையேலென்புதல்வ னேடுநீயெனத்தவிர்த் தானுடன்றசீறிச், சிற்றவையாங்குற்றதெல்லா மென்னன்னை மருங்கணைந்து செப்பலோடு, மற்றவணீதவமியற்றி யெவர்க்கு முயர்பதமடைந்துவாழ்தியென்றாள். ௧௨

ஆதலினலருள்புரிவோரகன்ஞாலவட்டத்தி னில்லையோங் கு, மாதவர்சரணென்ன வந்தடைந்தேன்சிறியன்மன மகிழுயா ர்க்கு, மீதுறையும்பதமதனின்மேவியுறைந்திடும்வண்ணம்விரு ப்பினோடு, மோதுகெனமீட்டுமவன் பணிந்திடலுமுளமகிழ்வா னுவாக்கலுற்றான். ௧௩

மேயருப்பதம்பெறுவான்வேண்டுதியேல்விளைநறவக்கலுழி பாய, வாய்விரியுநறுங்கொன்றை மலர்சடையோன்வலப்புறத்தி லொருதுதோன்றுங், காயமழல்வாய்த்திகிரிக்கண்ணனடிப்போது ளத்திருத்துள்வைத்துத், தூயவருந்தவம்புரிதிபுரிந்தனையேலு யர்ந்தபதந்துன்னலாமே. ௧௪

என்றுமுனிவரனியம்பவாங்கவன்றுளிறைஞ்சியிருந்தருக் கள்கோடி, துன்றுகொடுங்கானேகிச் சுடர்செய்மணிவண்ணனை மலர்த்துணைத்தாள்முன்னி, யொன்றுமருந்தலருகித்தவம்புரி யுங்காலையினிலுடன்றுபேயுங், குன்றுபுரைபூதமும்வெம் புலிக் கணமுங்குறுகினவாற்குழுமிமன்றே. கரு

அடர்ந்துவருத்திடவுமுளங்கலங்கலுறுயரியதவ மாற்றலுறு க்கி, வடங்கொள்முலைக்கனிதியெழிற் படிவமோர்வேதாளந்தா ங்கிவந்திங், கிடைந்திடேலரியதவ மியற்றியென்றன்கண்மணி யேயெய்துகென்ன, வுடைந்துமனமுருகாதுமாயையெனவுணர் ந்துதவமுஞற்றிருனே. கசு

இவ்வகையவிட்கோடி கடந்துதவமியற்றுதல்கண் டிராங் கியார்க்கும், கொவ்வைநீர்க்கடற்றுயிலுங் கார்மேகவண்ணனெ ழிற்கருழன்மேலாய்த், தெவ்வைகற்றுங்குலிசன்முதற் றேவரெல் லாமிருபுடையுஞ்சிறைஞ்செல்ல, வெவ்வழல்காலடற்றிகிரிவல னேந்தியாங்கவன்முன்விரைந்துற்றுனே. கஎ

உற்றுமுழுமதிகோடியுதித்ததெனவொளிரும்வலம் புரியெ ன்சங்கான், மற்றவன்றன்கன்னமிசை யுடைத்திட வுமகிழ்ச்சி யொடுமாசில்ஞானம், பெற்றுமலர்விழியிணைக டிறந்திசைநெ டுமாருகோடிபின்னேமன்றே, சுற்றுசுர்ருனபொலிகைக்கண்டுதொ [illegible]ருகிற்றுதிக்கலுற்றுன். கஅ

[illegible]ந்தலைப்பாற்கடல்றுகை [illegible] க்கி [illegible]லாடு, வருத்தமுலைப்புவிமடக்கை [illegible] [illegible]னிச்செருக்குட்ட, மேருக்குமழனை [illegible] [illegible]ரிக்க, வருக்கிரணங்கள்பருகுமகிவாத்துவிழித்து [illegible]ம்பொற்றிபோற்றி. கக

கன்னிமதில்சூழ்கிடந்துகருங்கடலேயகழாகக்கவினித்தோ
ன்றுந், தென்னிலங்கைதனிபுரந்துதிசைதிசைவெங்கோனடத்து
நிட்டவஞ்சன், மின்னமருமணிமவுலிபுனைசிரமோர்பத்தும்வெறுநி
லத்தின்வீழப், பொன்னவிருஞ்சிலைகுழைத்தபோரேறேநின்று
ணைத்தாள்போற்றிபோற்றி. உ0

கரியசெழுங்குவளைமலர்த்தடத்திடையிற்கராவொன்றுபற்
றவாடி, வெருவியிருபிறைக்கோட்டுப்பரவடியகளிறுகரமீதுபோ
க்கி, மருவிருக்குமலருந்திமணிவண்ணாகாத்தியென வந்துவேழ
ப், பரிவகற்றியருள்புரிந்தபாப்பணையாய்நின்பாதம்போற்றிபோ
ற்றி. உக

என்றுதுதித்திணையடியில்வீழ்ந்திடலுமிளந்திங்கட்கண்ணி
சூடிக், குன்றுநெடுஞ்சிலத்தடக்கைக் குழகனதுகுற்றேவல்செ
ய்துபெற்ற, தொன்றுளதுதுருவபதமப்பதத்தினென்றுமுறை
றியென்ன, மன்றல்கமழ்பசுந்துளபவனமார்பன்சிறுவனுக்குவ
ழங்கினனே. உஉ

அருகுறையுந்தேவரொலா மாங்கவனையுலங்கன்முடி சூட்
டயோங்குந், துருவபதந்தனிற்றுருவனெனுநாமம்புனைந்தெவரு
ந்துதித்துவாழ்த்த, வரைபிரமுசதிரவைத்தனர்மற்றவனுமுள
மகிழ்வின்றன், பரிவகற்றியவளோடினிதிருந்தான்பெறலரிய
பதத்தின்மன்னே. உங

துருவன் துருவபதமடைந்த வத்தியாய

முற்றிற்று.

ஆக திருவிருத்தம், ககங.

அறுபதாவது
தேவராசுரர்தோற்றமுரைத்த
வத்தியாயம்.

---*---

என்னலோடுந்துருவனதுகதையையாங்களறிவுருவான்
சொன்னாயதனாலுளமகிழ்ந்தேஞ்சுடர்செய்மவுலிப்புத்தேளிர்
பன்னுசீர்த்திக்கந்திருவரியக்கர்பாம்புதானவர்கண்
மன்னுதோற்றமுரைத்தியெனச்சூதமுனிவன்வகுத்துரைத்தான்

பரிவாயவிழுநறுங்கமலப்புத்தேட்னதுமனத்தினா
லுரைசால்பிரமாபதின்மர்தமைப்படைத்தானவ்வாறுயர்தக்கன்
பரிவாற்படைப்பப்படைத்தவெலாம்பாழ்பட்டொழிந்ததிறனோ
மருவாற்கூந்தற்சூதிவயிரிணியாமிவளைமணந்தனனால், [க்கி

ஆயசூதிமகிழ்ந்தளித்தவையாயிரவர்தமைநோக்கி
யேயும்படியேபடைத்திரெனவியம்பலோடும்யாழ்தெரிந்த
மாய்விறவநாரதன்படைப்பால் வருவதென்கொலெனவுரைத்
தூயதவநீர்புரிமினெனவவருந்துறந்துசென்றனரால். [துத்

அதுகேட்டுள்ளமிகமாழ்கித்தக்கனகல்வானிடைத்தோன்று
மதிபோனுதலாள்வயிரிணியாமற்றைமனைவிபாலறிவின்
முதியபுதல்வராயிரவர்தம்மையளித்தான்முன்னவர்போல்
விதிநேரந்தமுனியுரைப்பவவருந்தவத்தின்மேயினரால். ௪

இவ்வாறிவருமேகுதலுமெழில்சேர்வளைக்கைவயிரிணிபால்
வெவ்வேனெடுங்கண்மகளிரறுபதின்மர்தம்மைமேனகையு [ன்
மொவ்வாளென்னவளித்தனனாங் கவருளொழுகுகொடிநுசுப்பி
மைவார்குழலார்பதின்மர்தம்மைத்தருமன்றனக்குவழங்கினான்

பரிவிலாதகாசிபனுக்கெழில்சேர்பதின்மூவரையளித்தா
னுருவமதிக்காங்குவந்திருபத்தெழுவர்தம்மையுதவினு
னரிவாணெடுங்கணல்வர்தமையருட்டநேமிதனக்களித்தான்
பிருகுபுதல்வன்றனக்கிருவர்தம்மைப்பெட்பினுடனீந்தான். ௬

கற்றைக்கரியமலர்க்கூந்தற்கனிவாய்மகளிரிருவர்தமைச்
செற்றமகற்றும்பிசாசவனுக்களித்தான்றிங்கண்மருட்டுநுதன்
மற்றைமகளிரோரிருவர்தமையுமண்ணோடுயர்விண்ணுறு
முற்றுபுகழத்தவம்புரியுமங்கிராவுக்குவந்தளித்தான். ௭

இவரிலுலகம்புகழ்ந்தேற்றுமெழில்சேர்தருமன்மனைவியரி
னவையில்விசுவைவிச்சுவதேவரைநற்றவத்தானல்கிரு
ருவமையில்லாச்சாத்தியைசாத்தியரைவிழைவினுடனுயிர்த்தா
ளெவரும்போற்றுஞ்சங்கற்பைசங்கற்பங்கடமையீன்றாள். ௮

மருத்துவதிநல்மருத்துவரையீன்றாள்வயங்குபானுவென்பாள்
அருத்திகூரப்பானுவரையளித்தாள்முகுர்த்தங்களைமுகுர்த்தை
விருப்பினீன்றாள்கொடாதமையலம்பைவிழைவினோடளித்தா
ளுரைக்குமெழில்சேர்வசுவென்பாள்வசுக்களெண்மர்தமையுயிர்
[த்தாள்.

எழில்சேரிவர்களோரெண்மரிலங்குந்திசைக்கோரொருவராய்
விழைவால்மகிழ்ந்துவீற்றிருப்பார் வீறுற்றுயர்ந்தமெஞ்ஞானம்
வழுவாதுறையுங்காசிபன்றன்மகப்பேறியாவும்வகுத்துமக்கு
மொழிவாங்கேண்மினெல்லீருமென்றுவிரித்துமொழிகுற்றான்.

உரைத்ததவத்துக்காசிபன்றன்மனைவிமாரிலொளிரதிதி
விரிக்குங்கதிரோர்பன்னிருவர்தம்மைவிழைவினுடனீன்றாள்
வரிப்பூணுதலாள்திதியிரணியாக்கனோடுமறங்கனிந்து
தருக்காலுயர்ந்தவிரணியனைத்தந்தாளுவகைதழைவுறவே. ௧௧

கனியும்முதுப்சுந்தேனுங்கனிந்தமழலைச்செய்துவர்வாய்த்
தனுவென்றுரைப்பானூறுமகளீன்றாள்வியற்றாம்பிரையென்பா
ளிணைவினோடுசுகிசேனியனுசிதுகடீர்சுக்கிரீவி
வினதைவிளங்குசுசியென்பார்தம்மைமவிழைவினளித்தனளால்.

உரைக்கும்வினதையருணனையுங்கலுழன்றனையுமொளிர்வ
ளைக்கை, வரிப்பூணுதலாண்மின்னென்னுமடந்தைதனையுமகிழ்
ந்தளித்தாள், செருக்கியகன்றுகுழைகிழிக்குஞ்சேல்நேர்தடங்க
ட்சுரியென்பாள், விரிக்குஞ்சிறையபிலவமெனும்பறவைதன்னை
விழைந்தீன்றாள். ௧௩

சுரசைகரியவிடங்கனன்றுசொரிதூம்பெயிற்றகொடுஞ்சர்ப்பம்
விரைவினோராயிரம்வயறுவாய்த்தாள்விளங்குகத்துருவு
மெரியுமணிசேர்தலைகளாயிரங்களுடையவெறுழ்வலிய
வரிசேர்மிடற்றபடனாகமளித்தாளோராயிரமகிழ்வால். ௧௪

கொங்கார்கூந்தற்குரோதவசைகொடியவரக்கர்தமையீன்றாள்
வெங்கார்விடநேர்விழிச்சுதியுமியக்கர்தம்மைவியந்தளித்தாண்
மங்காவெழில்சேர்சுரபியென்பாளீன்றாள்பசுக்கண்மடிமேதி
யங்கோமுனியென்பாளமரர்மாதர்முனிவர்தமையளித்தாள்.

சுடர்செய்பசும்பொற்குவடேய்ப்பத்துணைத்துவீங்கிப்பணை
த்தமுலை, யிடுகுநுசுப்பினருட்டையென்பாளியாழ்தேர்ந்துயர்கி
ன்னரொடு, மடைவேயியற்கந்திருவர்தமைப்பயந்தாளமருபிரை
யென்பாள், கொடிகடருக்களிவற்றையுளங்குளிர்க்கும்வண்ணமு
யிர்த்தனளால். ௧௬

பின்னுமகப்பேற்றினைவிரும்பிப்பெருமாதவங்கள்பலவாற்றி
மன்னுஞ்சங்வச்சானசிதனென்னுமிவனைமகிழ்ந்தளித்தா
ளன்னோர்தம்மிற்சங்கவச்சானென்பானுக்காயரிப்பியனும்
பன்னுமறைதேர்நயித்துருவன்றானும்பழுதின்றுயுதித்தார். ௧௭

கோதிலாதயித்துருவன்றனக்குக்குண்டபாயியென்
றோதுந்திறலோருதித்தனரா லுளாயிற்சிறந்தரயிப்பியனுக்
கேதமில்லாரிப்பியரென்பார்களெழுந்துவெண்டிரைகள்
மோதுங்கடல்சூழுலகெல்லாமுன்னிப்புகழவுதித்தனரால். கஅ

மற்றையசிதன்றனக்குயர்ந்து வயங்குமறையின்பொருளெல்லா
முற்றுங்குணருந்தேவலனென்றுரைக்கும்புதல்வனுதித்தனனற்
சொற்றேஞ்சிறந்தகாசிபன்றன்மரபிவ்வாறுதொகுத்தெடுத்துப்
பற்றில்லாதபுலத்தியன்றன்மரபுமறியப்பகருவாம். ககூ

திரணவிந்துமகிழ்ந்தளித்ததேனார்கூந்தலிளிபிலையென்
றுரைசெய்மடவாள்புலத்தியனை மணந்தாங்குயிர்த்தாளுலகெல்
பரவுகீர்த்திவிச்சிரவாவென்பான்றன்னைப்பகரவனுக் [லாம்
கரியமனைவிமார்களொருநால்வருளராங்கறையுங்கால். உ௦

அவருட்டேவவன்னினியென் றறைவாள்குபேரன் றனையளித்
துவமையில்லாக்கைகசிசிரோங்குசினராவணனையுயிர் [தா
ளவருங்கும்பகருணனைச்சூர்ப்பணகிதன்னைக்கலையுணர்ந்த
வெவரும்புகழும்விபீடணனையீன்றுலகமுளநடுங்க. உக

மற்றைப்புட்போற்சடையென்பான் மகாபாரிசனைமகோதரனை
வெற்றிவடிவாட்பிரகத்தன்றன்னைத்திதியின்விழுதன்ன
கற்றைக்குழலுழ்வெய்யமுலைக்கும்பினசியாங்கன்னியைவா
னுற்றதேவர்நாளுளுமுள்ளநடுங்கவுயிர்த்தனளால். உஉ

பகையென்றுரைப்பாடிரிசிராவென்பான்றனையும்பருதிவாட் [ச்
டிகழுந்தடக்கைத்தூடணனென் றுரைப்பான்றனையுந்திறல்வீதி
சிகுவன்றனையும்வரைவெருவத்திரண்டமுலைரம்மியைதனையும்
புகையும்விடத்தைதவாளரவுபொழிந்தாலென்னவுயிர்த்தனளால்.

அறிவாலுயர்ந்தவத்திரிபாலுதித்ததற்பினருந்ததியை, மறைதேர்
வசிட்டன்விதிமுறையின்மணந்துமற்றையவடன்பாற்,பொறை
சால்மைந்தர் நூற்றுவரையளித்தானவருட்புகல்சத்தி, முறையே
யளித்தான்திரசந்திதன்பால்மொழியும்பராசரனை. உச

கோதிறவத்துப்பராசரன்பூங்குவலைநெடுங்கட்காளியிடத்
தாதிவேதவியாதமுனிதன்னையளித்தானங்கவனு
மோதுந்திரைவாருதிவிரிநீர்முகந்தமுகிலையமுகமிழ்க்கும்
போதார்கூந்தலிரணியைப்பாற்பொருவில்சுகனையுதவினனல்உரு

அன்றேநெடுங்கண்வீரிணையைப் பாலைந்துபுதல்வரொடுநடங்கு
மின்னேர்மருங்குற்கீர்த்திமதிதனையுமளித்தானவள்விருப்பாற்
றன்னேரில்லாவணுகனெனன்பான் றடந்தோண்மணந்து தகவி
னோர், பன்னூட்புகழப்பமெம்பிரமதத்தன்றன்னைப்பயந்தனளால்.

சொன்னேம்வசிட்டன்மரபெல்லா மறிவான்றெருகுத்துத்துலங்
குதவத், தன்னேன்புதல்வர்சத்திமுதலொருநூற்றுவர்தம்மாவி
யெலாம்,முன்னேயெதிர்ந்தவுதிரனெனுமரக்கன்கவர்ந்தானென
முனிவர்,தன்னேரில்லாச்சுதனைநீயதுசாற்றென்னச்சாற்றினன்.

தேவாசுரர்தோற்றமுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௬௩௦.

அறுபத்தோராவது

அரக்கன் சத்திமுதலோரைக்கொன்ற வத்தியாயம்.

ஒடிவிறவத்துக்கவுசிகமாமுனிவனுதிரனெனவுரைக்குங்
கொடியவரக்கன்றனைநோக்கிக்கோதில்வசிட்டமுனியீன்ற
மடவனிர்கேழ்விசத்தியென்பான்முதலாநூறுமைந்தரையு
மவோயென்னப்பணித்திடலுமன்னோராவிபருகினன்.

அதுகேட்டேங்கியருந்ததியோட்லம்வந்தழிவில்தவவசிட்டன்
மதிதோய்குடுமிவரையேறிமண்ணில்வீழ்ந்துமறிகடலி
னெதிரேயோடிவீழ்ந்துமுயிரிறவாமையினுனெடிதுயிர்த்து
விதியேவலியதெனவாடிவிம்மிவிம்மிமிகச்சோர்ந்தான். உ

சோர்ந்தவசிட்டன்முனஞ்சத்தி மனையாளெய்தி நின்றாய்மை,
யார்ந்தபுதல்வன் புதல்வனென்றன் வயிற்றினுள்ளானவன்று
னே, சார்ந்தபழிதீர்த்திடுவனெனச்சாற்றித்தானுந்தடங்கட்னீர்,
வார்ந்துவழியவயறலைத்துமயங்கிநிலத்தினுறவீழ்ந்தாள். ந

நிலத்தின்வீழ்ந்தாளருகணைந்துநின்றன்வயிற்றினுறைபுதல்வன்
குலத்தையுயர்த்துமெனவாவி கொண்டங்கிருந்தேங்கோடியிடர்
யலக்கண்டவிர்தியரும்புதல்வர்க்கவலஞ்செய்யேலென்றட்ரும்
புலத்தின்வழியேமனம்போக்கா வசிட்டனுரைப்ப வவள்புகல்
[வாள்

அன்னையாலென்மகவாலென்னருளுந்தந்தைதன்றலென்
மன்னுங்கொழுநன்றனையில்லாமகளீர்தமக்கென்றழுதரற்றித்
துன்னுதழலின்வீழ்ந்தாவிதொலைப்பேனென்னத்தூயமுனிக்
கன்னற்குதலையருந்ததியோடிரங்கியவலக்கடல்வீழ்ந்தான். ரு

அவ்வாறிவர்கடியருமுப்பவாழிநெடுமால்விசும்பெய்தி, யொவ்வா
ன்பிறனையென்னையல்லா வொளிர்னீர்ச்சடையா னடியவருண்,
மைவார்குழலிவயிற்றுறைவோன் மரபுமவனுலுண்டாமா, லிவ்
வாறிரங்கல்வசிட்டமுனியென்றுதெருட்டியேகினனால்.

மாயனிவ்வாறுரைத்தப்டிகேளாவுள்ளமிகமகிழ்ந்து
தூயகற்பின்றிரசந்திதன்னைத்துயரோலெனவுரைத்தாங்
காயவவனையருந்ததிதன்றேடுமுட்ன்கொண்டரியதவ
மேயவசிட்டமாமுனிவன்றனதாச்சிரமமேவினான். எ

மேவிமதியோர்ப்பத்துநிறைந்ததற்பின்விசும்பினிடைவாழுந்
தேவர்மகிழமுகுந்தனையாங்கதிதியீன்றசெவ்விபோ
லோவமறைகளொருநான்குமோங்கவயிறுவாய்த்தனளாற்
றுவில்கற்பின்திரசந்திதகைசேர்தவத்துப்பராசரனை. அ

பிறந்தகுழவிமுகநோக்கிவசிட்டன்பெட்பினொடுமுறைந்தா
னிறந்தசத்திமகப்பேற்றுற்றனைவரோடுமின்புற்றே
யுறைந்தான்பிதிர்க்களுலகத்தினுறையவுதித்தவம்மதலை
சிறந்தவன்னைமுகநோக்கிச்சிந்தைகுழைந்தீங்கிவைசொன்னான்

என்கொலறியேனமங்கலநாணிழந்தீங்குறைதியெனையார்ந்த
வன்பினளித்தநற்றாதையெவ்வாறிறந்தானறைதியெனத்
துன்புற்றனைப்பவாங்கவளுந்துயரக்கடலினிடைமூழ்கி [ள்.
வன்புற்றுதிரனெனுமரக்கன்மாய்க்கமாய்ந்தானெனச்சொன்னா

அரக்கன்றன்னாற்கொலைப்பட்டா னெனக்கேட்டலர்வார் சடையண்ணல், விரைப்பூங்கமலவடிபோற்றி மும்மையுலகும் விரிதழலி, னெரிப்பேனென்னவசிட்டனஃ தடாதாலெழினி ன்றாதையைமுன், செருக்கான்மாய்த்தவரக்கனுயிர் செகுப்பா யென்னத்தெரித்தனனால். கக

என்னலோடுமகிழ்தூங்கி மண்ணிலிலிங்கம்வகுத்திளந்தே ன், றன்னுமலர்தூய்த்தொழுதேத்தித் துணைத்தாட்கமலமுளத் திருத்தித், தன்னைமறந்தாங் கவனிருப்ப வவன்முன்றடமால்வ ரையீன்ற, மின்னேர்மருங்குலுமையோடும் விமலன்வெளிவந் தான்மன்றே. கஉ

வந்தவிறைவன்மலர்த்தாளைவணங்கிவணங்கியானந்தச்
சிந்துவிலோவாருதிமூழ்கித்தேமென்குதலையொருபாகா
வெந்தத்தவங்கண்டடியேன்முன் னெளிதின்வந்தா யென்றுவி
பந்தமறுக்குமிருகமலபாதமீட்டிந்தொழுதனனால். [னை

தொழுதசிறுவன்முகநோக்கி விழைந்ததென்னைசொல்லுகென
வழுவலன்பிற்றுதையனைக்காணவேண்டுமெவருயினை
யழியபுரிந்தவரக்கனைவன்கிளையோடடித்தல்வேண்டுமெனப்
பழுதில்சத்திமுதலினனைப்பாங்கிற்காணவிடுத்தனனால். ௧௪

விடுத்துச்சிறுவன்முகநோக்கிவிளங்குமற்றுந்தாதையனை
யடுத்துப்பணிதியெனவிறைவனருளிற்கூறவுவகையுளம் [ன்
பொடிப்பவன்றேன்பணிந்திடலும் பொருவில்சத்திதன்புதல்வ
மட்டப்பூங்கமலமுகநோக்கிமகிழ்விறேடுமிவையுரைத்தான். ௧௫

அரியமகப்பேற்றூர்பெறுதற்கரியதுண்டோயுனையான்முன்
புரியுந்தவத்தாற்பெற்றதனுற் பெற்றேன்புரிவார்சடையண்ணல்
மருவுமுலகமென்றுதவவசிட்டன்பாதமலர்வணங்கி
யுரியதுணைவரொடுமீசனுறையுமுலகமடைந்தனனால். ௧௬

இவ்வாறவனேகியபின்னரிறைவன்றுளின்மகிழ்தூங்கிச்
செவ்வேவணங்குசிறுவன்முகநோக்கிச்செந்தீவிடங்கொதிக்கும்
வெவ்வாளரக்கர்தமைக்கொல்லும்வகையுமருளிவிளாதுளும்பு
மைவார்கூந்தலுமையோடுமணிநேர்மிடற்றன்மறைந்தனனால்.

செய்யதழலினைவிசொரிந்துதிதிருதையுயிர்மாய்த்த
மையோர்மேனிவாளரக்கன்குலத்தோடிடியேறுண்டமணிப்
பைவாய்நாகமெனவாவிபதைத்தாங்கழியக்கொலக்கண்ட
பொய்தீர்வசிட்டன்பராசரனை நோக்கியிவைகள்புகன்றனனால்.

நின்றுதையனைக்கொன்றவனையல்லாலரக்கர்யாரையுநீ,பொன்று
ப்புரிதல்மாதவத்திற்பொருந்திறேர்க்குப்பொருந்தாதா, லென்று
ங்குறைப்பவரக்கர்தமைக்கோறலொழிந்தானிதுவறிந்தாங், கன்
றைப்பகலேபுலத்தியமாமுனியுமாங்கணடைந்தனனால். (௧௯)

உற்றமுனிவன்பராசரனைநோக்கியுன்றன்குருமொழியாற்
செற்றமொழிந்தென்மரபாயவரக்கர்கொலைநீதீர்ந்ததனாற்
பெற்றிடாதமெய்ஞ்ஞானம்பெற்றிபிறங்குமணிவண்ண
னற்றமில்லாப்புராணமுநீயறையவறிவுண்டாகென்றான். ௨௰

அரக்கன் சத்திமுதலோரைக்கொன்றவத்தியாய
முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௬௬௰

அறுபத்திரண்டாவது
சூரியன் வங்கிசமுரைத்த
வத்தியாயம்.

என்றுமுனிவனோதுதலுமாயோன்புராணமெவற்றினையு
நன்றுமொழிந்தானனையோர்தெளிணக்காடுமுகமலைத்
துன்றுகதிர்கான்றிலகுசெழுஞ்சுடரோன்மரபில்வேந்தர்தமை
மன்றமொழிவாயெனமுனிவர்சூதனறிவால்வகுத்துரைத்தான்.

வேறு.

மாசறுதவத்தாலுயர்ந்தழியாதமறையொருநான்கையுமுணை
ர்ந்து, காசிபன்புதல்வன்கலிகெழுபரவைக்கருங் கடன்முகட்டிடை
னிற்றோன்றி, யேசலிலுலகுமாசறமுடுபிருள்படக்கதிர்க்குலம்ப
ரப்பித், தேசுகண்படுக்கும்பசும்பொன்மால்வரையை வலம்வருந்
தினகரனுமால். ௨

தடவரையனையமுலைகளைத்தேங்கித் தளர்நடைச்சங்கைமெ
ல்லியாள், சுடரொளிவிரிக்கும்பருதியைமணந்து ஆயவைவச்சுத
னென்னு, மிடல்கெழுதிணிதோண்மனுவையுமிரேவந்தனையுநல்
லமனையுமினிரும், வடிவைசிர்நெடுங்கணமுனையாமடந்தைதன்
னையுமவிறுவாய்த்தனளால். ௩

பூங்குழற்பிரபையன்னவற்புணர்ந்துபுலரியாங்காலத்தையுயிர்த்தாள், வாங்குநுண்மருங்குற்சாயையென்பவளு மற்றவன்வரைப்புயந்தழுவி, யோங்குசாவன்னியென்பவன்றனையுஞ்சனியையுமொளிநகைச்செவ்வாய், மாங்குயிற்குதலைத்தபதியென்றுரைக்குமடந்தைதன்னையுமளித்தனளால். ௧௪

எரியுமிழ்வடிவேல்மனுவருள்புதல்வனெழில்பெறுமிக்குவாகவன்றன், பொருவறுபுதல்வன்விகுக்கியாங்கவன்றன்பொற்புறுபுதல்வன்றகுத்தன், திருமலிகுத்தன்மகன்சுயோதனன்மற்றவன்மகன்பிருதவன்மகன்சீ, ருனாசெய்விச்சுவகனவன்மகனிவனுச்சுவனென்னுமொளிறுவாளுரவோன். ௧௫

மற்றவன்புதல்வன்பிரகதச்சுவனுங்கவன்மகன்வடவனையனைய, பொற்றடந்திணிதோட்குவலயாச்சுவனுங்கவனருள்புதல்வன்மேவலனாப், பற்றியுள்ளாவியருந்தவாட்டிருடாச்சுவனவன்பயந்திடுபுதல்வ, னெற்றுகொண்டினாசிர்மன்னனகம்புயக்குமெழிற்பிரமோதியென்றுரைப்பார். ௧௬

ஆங்கவன்புதல்வன் மடலார்க்கரங்க ளுமரியச்சுவனலர்ந்த, தேங்கமழ்தண்டாரன்னவன்புதல்வன்றிறலிகும்பனுங்கவன்சேய், வாங்குவிற்றடக்கைச்சங்கதாச்சுவனு மற்றவனளித்திடுமைந்த, ரோங்குசிர்க்கிருதாச்சுவனெழிலிரணச்சுவனெனுமொளிறுவாள்வேந்தர். ௧௭

இடுகுநுண்மருங்குன்மடனவார்விரும்புமியலிரணச்சுவன்புதல்வன், வடவனைகறுவிமல்லடுதிணிதோள்வளருவனாச்சுவனவன்சேய், கடல்புடையுடுத்தமண்ணகம்புரக்குங் காதுவெண்மணிமுடிவேந்தர், தொடிபுனைகுடங்கைத்தலைவனையாகத்துயினமணிமுன்றின்மாந்தாதா. ௧௮

அன்னவன்புதல்வனடையலர்ச்செருக்குமாடல்வேல்வேந்தனம்பரிடன், மின்னலங்கவற்றுநுணுகிடைநோவவெற்பினைப்பழித்திறுமாந்த, பொன்னவிர்திதலைமுலையுமிழ்ப்பசுந்தேன் பொழிமதுத்தார்ப்புருகுச்சன், கன்னவிறிரடோளடையலர்வணங்குகனைகழற்றுண்முசுகுந்தன். ௯

மற்றவர்தம்மிலம்பரீடன்றன்மகனெழில்வரைநிகர்தடந்தோட், பற்றலராவிபற்றியுண்பருமவாளினுச்சுவனவன்சேய், கற்றையங்குழலார் காமனேயென்னக் காமுறுமரிதனுங்கவன்சே, யொற்றையந்திகிரியுருட்டிமண்முழுது மொருகுடைநீழற்றுமாரீதன். ௰

வாளையம்பகடுதாக்கலினுயர்ந்த மலர்தலைப்பச்சிளங்கமுகின், பாளைவிண்டொழுகுவழைச்சிறுதேறல்பாய்பெருங்கழனிநாடாளுங், காளைவண்டுழக்குதாரப்புருகுச்சன்கண்மணியனையநற் புதல்வன், வேளெழில்சாயும்வனப்புடைப்பிரக தச்சுவனும்விறல்வேந்தன். ௧௧

அவனருள்புதல்வனகெளத்தெதிர்ந்தவாடல்வாளரசர்பொன்முடிமேற், கவனவாம்பரியின்கவிகுளம்பழுத்துங்காதுவேலேந்துசம்பூதி, யுவனருள்புதல்வன்விட்டுணுப்பிறவனவன்மகனொள்ளிழைமடவார், குவளையந்தடங்கணிறைதருதடந்தோட்கொற்றவாள்வயிட்டுவைப்பிறவன் ௧௨

மல்லெனத்திணிதோள்வரைசிறிதாக வளர்கிரிதாச்சுவன் றனக்குச், சொல்லிடும்பிரீடதச்சுவனென்னுந்தோமறுபுதல்வனுண்டவன்சேய், செல்லுறநிவர்ந்தமுடமுதிரதெங்கின்றிம்பொழில்விருப்புடையுடுத்த, வல்லியங்கமலப்பழனநாடாளுமடலரியச்சுவனென்பரன். ௧௩

மட்டவிழலங்கலணிதருமரியச்சுவனருள்புதல்வன்மாதிர்த்த, வெட்டுமால்வரையும்பிடுங்கிகீள்கரத்தால்விசும்புறவெறிந்து நின்றூர்க்கும், விட்டொளிபசும்பொனேனைமால்யானைவிசமனு மவன்விழைந்தருள்சேய், கட்டெழிற்றிரிதன்னுயாவெனவுரைக்குங்கவுளழிகடாக்களிற்றுழவன். ௧௪

ஆங்கவன்கொன்றையலர்சடையண்ணறக்கழலைப்பூண்டகத்தி லம்புரந்து, திங்கறுபுரவிமேதனன்காகச்செய்குவானினைத்தபு ணினையா, வோங்குறுநிதியமிலாமையில்வருந்தியுறைதருகாலைபி ற்பசும்பொற், பூங்கமலத்தோன்புதல்வனுத்தன்னடியவ்வயினை டைந்திவைபுகன்றான். ௧௫

பரிவுறேல்வேந்தேயிவுளிமேதத்தின் பதின்மடங்குறுபலன் கொடுக்கு முருவவாணுதலாள்பங்கனன்றுமை மாயிரத்தெட்டு மோதென்று, விரைவுடனுரைப்பவாங்கவன்றானும்விழைந்ததை புகன்றழியாத, புரவிமேதத்தின் பதின்மடங்காய பலத்தினைப் பொருந்தினனன்றே. ௧௬

பொருந்தினனென்னப்புகறலுமிருந்தபொய்யறுதவத்துமா முனிவர், திருந்திடத்தண்டிபுகன்றநாமத்தைச்செப்புதியெனவுய் யாறென்னக், குருந்தொசித்தாயர்மனையிடைவளர்ந்தோன் சா ண்கலாக்குழகனதுணைத்தாள், வருந்திடாதுள்ளத்திருத்தியசூ தன்வகுத்தறிவுறமொழிந்தனனால். ௧௭

சூரியன்வங்கிசமுரைத்த அத்தியாய

முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௭௭.

அறுபத்துமூன்றாவது
சகத்திரநாமமுரைத்தவத்தியாயம்.

அலைநீரணியுந்திரன்முறுப்பிறவாதனருள்சர்வன்
சிலைவார்நுதலாள்பங்கிலுறைதுருவன்சிகண்டிமகாகரும
னிலவும்பகவான்காரக்கன்றபசுசிகரில்மகாகாயன்
புலவுகமழுந்திரிசூலனனகன்பூததாரணனே. ௧

கறைசேர்மிடற்றினுன்மத்தன்விருபனியதன்மகாகாட்டன்
பிறைசேர்சடிலன்பரன்கருத்தாவாதிபிறங்குங்கோரதபன்
குறைவிலாதபிராணமன்மந்திரனியதன்கோதில்தபன்
விறல்சேர்மழுவாட்டசவாகுநீலகண்டன்விளம்பரனே. ௨

வினாதன்வசுவக்கிரானதிதீர்க்கன்விளம்புமரிகேசன்
நினைவோர்நெஞ்சிலுறைகபத்திதயித்தியகாலித்தியகிருத்தன்
கனகவரைவினைமைமேகச்சவாமனமுதன்கந்தாரிமனு
நினைவார்கொன்றைநவிவசாயன்விசயநவிழுமெய்க்கியகான். ௩

உரைசெய்நிருத்தன்வெருளுபனைபரிகாரியோனிர்பகவான்
பரவுமுநிதன்மகாதேசனுங்கிரதேசன்பரன்சம்பூப்
புரிவார்சடிலன்றிசழ்சருவவியாபிபுகலுங்குகாவாசி
விளைவார்கூத்தலுமைபாகனிவாரிருகண்விச்சுவரூபன். ௪

கரையேறுயர்த்தவாசாகனுரகனவையில்மனேருவேகன்
நிரைவாய்நஞ்சமருந்துமுனியுலோகன்றிங்களணியமன்
முருகூரிதழியதத்தாளவாசுதேவன்மொழிசித்தன்
கரியினுரிபோர்த்திடுதான்றமதனகாலன்கவாம்பதியே. ௫

அந்திவண்ணனத்திசானனுலோகசாரியனைநமித்த
னந்திசிகந்தன்மகாலிங்கனசையில்லாவிதிகாசன்

பந்தமடியார்க்கறுத்தருளும்விபாகன்பகவர்த்தனன்கற்பன்
செந்தார்கொன்றைபுனையிடம்பனடம்பன்றிகழும்பசுபதியே. ௬

சங்கக்குழைதாழ்சுகனசுதனவிகன்மானன்சாற்றகதன்
மங்கையிடஞ்சேர்சோபனன்றத் தருணன்வணங்குமகாவருட்
டிங்கட்சடிலமகாகர்ப்பன்மதங்கன்றிகழுமகாகன்னன் [டன்
வெங்கணரவமணிசுவத்திவருட்டன்சுபாபன்விருடகனே. ௭

செங்காலன்னமுயர்த்தவபன்வணங்குவிமுத்தன்றேவேசன்
கொங்கார்கூந்தலுமைபங்கிற்சேகிதானன்குழைந்தடியார்க்
கங்கேயருளுமகோபனன்மாமேகனழிவில்மாயாவி
சங்குராவான்றேவர்தொழுதாட்டாமனாச்சிவாத்தனனே. ௮

இவைகள்முதலவாயிரத்தெட்டீசனுமமியம்பிடுவோர்
நவைகூர்பஞ்சபாதகமுநீங்கிரவிற்றுபுரவிமக
மெவருமோராயிரமியற்றுபலத்தையடைவாரொன்றுபின்னுந்
தவமேயியற்றுஞ்சூதமுனிவேந்தன்மாபுசாற்றினன். ௯

சகத்திரநாமமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௱அசு.

அறுபத்துநான்காவது

திரிதன்வாவங்கிசமுரைத்த

வத்தியாயம்.

முருகுடைக்குவளைமேய்ந்திளமேதிமுப்புடைக்காய்க்குலைத்
தெங்கின், விரிநிழற்றுஞ்சும்பழனநாடாளும்விறற்றிரிதன்னுவா
மைந்த, னுரைகிழித்தனையநுணங்குநூற்கலிங்க நேரவாவலைச
த்தருண்மருங்குல்; விளைவழிந்துயர்ந்தவெம்முலைமடவார் விரு
ம்புறுமருணனும்வேந்தன். ௧

அறைபவன்புதல்வ னடையலார்புரங்க ளகழ்ந்துநீர்வாவி செய்தாடுங், கறையடியானைச்சந்தியவிரத னவன்மகன்கற்பக நாடு, மறிதிரைமுத்தமணியெடுத்தெறிபு மாக்கடலுடுத்தபாரே ழு, நெறிதிரிந்தாலுந் திரிந்திடாவாய்மை நிகழ்த்தரிச்சந்திரனெ ன்பான். ௨

வைத்தலைநெடுவேன்மற்றவன்புதல்வன்வளர்கலைமுற்றத் திருவுடையன், செய்த்தலைவாளைதாவுகன்றூட்டுலோகிதனவனா ருயர்சிறுவன், பைத்தபாம்பல்குன்மடனலார்முகிழ்த்தபடாமுலை பொருததாரிதன், மைத்ததண்டுளிக்கார் முகிலடைகிடக்கு ம ணிவரைத்தூந்துவென்றுரைப்பான். ௩

தூந்துவென்றுரைப்போன்றனக்கடல்விசயன்சுவேதனெ ன்றுரையினிற்சிறந்த, மைந்தரோரிருவருளரவர் தம்மில்வாகை வேல்விசயனற்புதல்வ, னந்திவோர்வண்ணன் முனிவுறப்பட்டபு ரமெனவடையலார்புரங்கள், செந்தழலுண்ணவிழிக்கடைசிவ க்குஞ்சிங்குவேற்குருதனும்வேந்தன். ௪

தும்பைவேய்ந்தடுபோரொற்றிடுதெவ்வர்தோட்டொடியேந் துகோட்டினைக்குங், கிம்புரியாகக்கொள்ளுமாகளிற்றுக்கிளர் புகழ்க் குருதனற்புதல்வன், பைம்பொனின்மவுலி மன்னவர்ப ணியும்விரதன்மற்றவன்மகன்பகைவர், வெம்பமர்கடந்துசெந்த ழறும்பூண்வெற்றிவேல்வாகுவென்றுரைப்பார். ௫

வாகுவின்புதல்வனுகவத்தெதிர்ந்தமன்னர்பொன்மணிமு டியிடறும், வேகமால்யானைச்சகரனங்கவன்சேய் வென்றிவேல் விறலசமஞ்சே, ஞேகையோடன்னேனனித்திடுமைந்தனஞ்சுமா னவனுயிர்ப்புதல்வ, னுகிலவண்டுதவழ்ந்துதேனருந்துநகிமலர்த் தாரணிதிலீபன். ௬

ஆங்கவன்புதல்வனலர்சடையண்ண லாய்மலர்த்துணையடி போற்றி, வீங்குநீர்க்கங்கைத்திருநதிகொணர்ந்தபகிரதனவன்வி ருப்புறுசேய், வாங்குதெண்டிரைநீரளறெழமுகந்தமைத்தகார் முகில்விளையாடுந், தேங்கமழ்பொழில்சூழ்திருநகருறையுஞ்சின ங்கொள்வெள்ளிலையவேற்சுருதன். ௭

வைக்கெழிலளித்துமாவிலஞ்சிறுகப்பார்ந்தகாழல்குன்மாம கனிர், மைக்கெழில்கொடுத்தமதர்விழிநீங்கா மணிப்புயச்சுருத னற்புதல்வன், திக்கயமெட்டுமரும்பொறையாற்றத்திலாக்கட லுடுத்தபாரேழு, மொக்கமால்வரைநேர்புயத்தினிற்றுங்குமோரங் குசிர்புனைந்தநாபாகன். ௮

நாந்தகத்தடக்கைவெற்றிநாபாகன் மகனொருநாற்பெருந்தி சையு, மேந்தியபுகழும் பரீடனுமவன்சே யிரிருகாவதங்கமழுந், சாந்தளறெடுக்குந் தடம்புயச்சிந்துத் தீபன்மற்றவன்றருபுதல் வன், பாந்தண்மேற்கிடக்கும்புவியெலாந்தானே பரித்திடுந்திற லயுதாயு. ௯

மற்றவன்புதல்வன்வல்லியும்பொருந்தார் மனைவியாமங்கல னுனு, மற்றிடப்பரூஉத்தாள்பெயர்க்குமால்யானை ரிதுபன்னவ னருள்புதல்வன், பொற்றசெங்கமலப்பழனநாடாளுஞ் சாருவ பூமனுங்கவன்முன், பெற்றநற்றவத்தாற் பெற்றிடுபுதல்வன்பி ன்னைவண்டாற்றுதார்ச்சுதாசன். ௧௦

தடனறியாதுகழிப்பினுந்தெவ்வர் தலையினைத்தள்ளியல்லா து, விடுகதிர்மணிசெய்தடத்தினுட்புகுதாவிறல்கெழுவெய்யவா ட்சுதாச, னெழுவறுவனப்பார்மகன்சவுதாசனேங்கவன்மகனசு மாதன், மடல்விழ்பசுந்தாரன்னவன்புதல்வன் வாளகைவேல்மூல கனென்பான். ௧௧

உவனருள்புதல்வனுயர்கழைதொடுத்தெத்திருவுடைதா வெய்யோன், கவனவாம்பரியின்கவிகுளம்பிடறுங் கவின்மலைச்சு தரதனவன்சேய், தவழ்மதிக்கவிகையிருநிலமுழுதுந் தனதெனக்கவியிளிபிளனுங், கவனருள்புதல்வன் விருத்தசர்ம்மாமற்றவனருள்மைந்தன்விச்சுவகன். ௧௨

பொருவறுமவன்றன்புதல்வன்மாற்றரசர்பொழிகதிர்மணி முடியிடறுந், திருகுவெஞ்சினத்தகரையடிக்களிற்றுத் திலீப னன்னவன்றருபுதல்வன், கரிமுகமெழுகியனையருண்மந்தி காய்க்குலைவிரிதலைக்கமுகு, தருபிழற்றுஞ்சுங்குருமணிப்பொருப்பன் றுமவேலேந்துகட்டுவாங்கன். ௧௩

அன்னவன்புதல்வனசினவன்ன மாயிரட்டாமரையுறைய ச், செந்நலங்கவரீஇசிடம்பமுனாட்டுறைதீர்க்கவாகவன்றன், பன்னரும்புகழ்சேர் புதல்வன்வல்லேன முழுவெழுபாத்தரும் பொன்னு, மின்னவிர்மணியுமருவிகொண்டிறங்கும் வியன்மலை ரகுவெனும்வேந்தன். ௧௪

மற்றவன்புதல்வன்வாங்குவெண்டிரைநீர்வட்டவையுண்டிடு வதுபோலப், பற்றலர்தாமரைதந்திறந்துதிரம்பருகுவைவேலசண வன்சேய், பொற்றபொன்மவுலியமரர்வந்திரப்பப் போர்ப்புலிய னையசம்பரனை, வெற்றிகொள்வாளான்முடித்தலையுருள வீழ்த் தியதசரதனுமால். ௧௫

ஆங்கவன்புதல்வனலைகடலகழா வணிமதிலிலங்கைமூதூ ரி, லோங்கரசிருக்குந்தசக்கிரீவன்றன் னுள்ளுயிரொன்றறப்ப ருகித், தேங்கமழ்தாமரைதந்திறந்தகன்று செல்கெனச்சிலைமுகந் தொடுத்து, வாங்குவிலிராமனன்னவன்புதல்வன்மணிமுடிக்கு சலவனென்பான். ௧௬

குசனருள்புதல்வன்கோக்கணங்கோடிவிழுங்கியும்வீழுங்கிடுக்கொண்ட, நசையறுதழலுநாமவேல்சத்தியாங்கவன்மைந்தனுற்றிசையும், வசையறுசீர்த்தி வழுத்துமாறடன்ற மணிமுடிவேந்தருள்ளாவி, பசையறவருந்திச்செந்தழறும்மும்பருதிவாணிடதனும்வேந்தன். கஎ

நிடதனற்புதல்வனெய்மதிகவளந்தெவிட்டிமெய்நிழலினைச்சனியுங், கடமழிந்தொழுகுங்கடுங்கண்மாலியானைநளனவன்காதல்கூர்மைந்த, னுடைதிரைப்பரவையுடுத்தபாரேழுமொருதனிநிழன்றகோல்செலுத்து, படிமதஞ்சாய்த்துக்குருதிவாய்சமழும்பருதிவேல்நபனெனும்வேந்தன். கஅ

கோடிவண்டிமிர்தார்நபனருள்புதல்வன்குளைகழன்மன்னர்பொன்மவுலி, காடிவேறிட்டும்புண்டரிகாக்கனவனருணல்லெழிற்புதல்வ, னுபோம்பென்னப்புடையகலல்குலாயிழைமடநலாரகன்ற, வோடரித்தடங்கணிளைதருவனப்பார் சேமதன்னுவாவெனுமுறவோன். கசு

அங்கவன்புதல்வனறுமலர்நெகிழ்த்தநாற்றம்விண்ணகமெலாங்கமழ, வோங்கியபொழில்சூழ்திருநகர்த்தேவரனீகனுங்கவனுதவிடுசேய், வீங்குதெண்டிரைநீர்வாய்மடுத்துண்டு விளைந்தமைமுகிலிடைகிடக்குந், தீங்கறுபசும்பொற் குடுமியம்பொருப்பன்னிகுவெனுந்திறல்வேந்தன். உ0

காடகமொன்னார் புகுதரச்செய்யுங் கீனகுகாமுறுபுதல்வன், பாடல்வாய்ச்சுரும்பர்படிந்துதேனுண்ணும்பசுந்தொடைச்சகாசவனவனுக், சோடரித்தடங்கண்மடனலார்விரும்புஞ் சுகனுளைசந்திராவலோக, னுடலவாட்டார்பீடென்றனைக்கு பாசதபுதல்வனுண்டாமால். உக

சுகனருள்புதல்வன் சுரிமுகச்சங்கஞ் சூலுலோந்தலறிநொந் தீன்ற, நகைமணிமுத்தந்தினையெறிபுனல்சூழ்நாட்டுமைசந்திர கிரியாங், கெல்கடியவன்றன்புதல்வன்வாகழற்காலிறைஞ்சிடா மன்னர்வாழ்ககரம், புகையழல்கொளுத்தும் கடுங்கண்மாலியா னைப்பாணுசித்தெனும்புகழ்வேந்தன். உ உ

நெறித்தபூந்தொடையன்மற்றவன்புதல்வனிழன்றவான்க றபகக்கோட்டிற், கறிக்கொடிபடருங் குருமணிப்பொருப்பன் கவின்சுலுத்தாயுவாங்கவன்சேய், செறித்தநீட்டோகை நடஞ்செ யப்பகியதேனுமிழ்காந்தள்கைமகிழ்ந்து, மறித்திடும்பொழில்சூ ழ்மருநாடாளும்வரதனென்றுனைத்தனனன்றே. உங

திரிதன்வாவங்கிசமுனாத்த வத்தியாய
முற்றிற்று.

ஆக திருவிருத்தம். க00க.

அறுபத்தைந்தாவது
சந்திரவங்கிசமுனாத்த
வத்தியாயம்.

உனைத்தனகதிரோன்மரபினில்வந்த வேந்தர்யாவரையுமுல குண்ட, விருட்குறும்பெறிந்துகிலாக்கதிர்பரப்பியாவருந்தொழு திடக்குணபாற், றிரைக்கடன்முகட்டிலெழுதருதிங்கள்மரபினி ல்வேந்தரையெமக்கு, விரித்துரையென்னமுனிவரர்கூதன்விரித் தனனுரைக்கலுற்றனனால். க

வேறு.

அருங்கதிர்செய்மதிக்கடவுளளித்தபுதல்வன்புதனவன்சேய் மலையூருவவேல்விடுத்தமுருகவேளேல்வாங்குதித்த

சிலைவாய்ப்பகழியொன்னலர்தந்தேந்தாரகலவனைபோக்கி
சிலவுங்கவிகைசிலமுழுதுஞ்சிழற்றபுரூரவாவென்பார். ௨

பிணைமானேக்கையழகழித்துப்பெய்தேன்குவளைமலர்வாட்டுங்
கணைபோலுண்கணுருப்பசியைக்கலந்துபுரூரவாவளித்த
வினையில்புதல்வராயுவொடுமொயுவியம்புமமர்வாயுத்
திணிதோட்சதாயுச்சுதாயுசுறுந்தேனர்தொடையில்விசுவாயு. ௩

என்னுமவருளாயுவென்போன்புதல்வன்வேந்தரினிதீன்ற
கன்னற்குதலைமடமாதர்காமுற்றளித்தபசுந்தொடையுந்
துன்னுங்கதிர்கான்மணிமுத்தவடமுந்துயல்வந்துயர்குடுமிப்
பொன்னங்கிரியைப்பாடழித்தபொலிதோணகுடனென்பரால்

நகுடனளித்தபுதல்வனாவருளராங்கவருணஞ்சசூழ்
புகைவேற்றடக்கையாதியென்பான்பொருவில்வெள்ளியினிதீன்
வகல்காழல்குலியற்றையவயாணிதனையும்விடபனுவா [ற
மகிழவீன்றசனமிட்டையென்பாடனையுமணந்தனனால். ௫

மைநூற்றனையமலர்க்கூந்தற்றெய்வயானிமகிழ்புதல்வர்
செய்வாயுளாத்தசெட்டிலைவேலெதுவுசிகரிற்றுருவசுவும்
பையேற்றகன்றபசட்டல்குற் படர்வெம்முலைச்சனமிட்டையீரு
ஃபொய்தீர்புதல்வர்துருகுயனுப்பூருவென்னப்புகன்றனரால்.

அளியமலர்ச்சிறடித்தெய்வயானிமுலைமேலன்புற்றுக், கிளிபோ
ன்மிழற்றுஞ்சனமிட்டை கிளர்வெம்முலைதோய்ந்திருந்ததனால்,
வெளிமீதுறையுங்கதிர்வெள்ளிவிளாத்தாரியாதிதனைநோக்கிக்,க
ளிவந்தரும்பாக்கிழவுருவையடைநீயென்னக்கனன்றுரைத்தான்

உரைத்தலோடுங்கிழவுருவையெய்திப்புதல்வரொடுமிந்த
வருத்துமுருவைவாங்கினுமதிளமைதருவீரெனவழங்க

விருப்பற்றொருநால்வரும்வெறுப்ப விளையவிறல்வேற்பூருவென்
பா,னருத்தியாலக்கிழவுருவைவாங்கியிளமையளித்தனனால். ௮

அளித்துவிளமையடைந்துமிகமடவார்கனிவாயமுதருந்திக்
களித்துவருடமாயிரஞ்சென்றதற்பினிளமைகடிதளித்து
விளக்குந்துன்பமூப்பினைத்தான்வாங்கியுலகெலாம்விளைத்தேன்
றுளிக்குந்தொடையற்பூருவைக்காவென்னமவுலிசூட்டினான். ௯

போற்றுந்தென்கீழ்பாற்றென்னாகப்போர்வேற்றுருவசுவை
மாற்றில்பசும்பொன்மணிமவுலிபுனைந்துவடமேல்பாற்றிசையிற்
கூற்றுமுட்குங்கொலைபுரியுங் குருதிவடிவேற்றுருகுவைத்தேன்
றூற்றுபணிநாண்மலர்மாலைச்சுடர்செய்மவுலிசூட்டினான். ௰

வடகீழ்பாலிற்பகைவணர்வாகைவேலுக்குணவுகொடுத்
தொடுவின்றலர்தார்புனையனுவை யுறைவாயென்னவுவந்துதவி
யடைவேறென்மேல்பாலெல்லாமரத்தின்வழியின்றகலாது
கடமால்யானையெதுவென்பான்றனைக்காத்தியெனவளித்தான்

இவ்வாறீன்றபுதல்வனாவர்தமக்காங்குதவியெழின்மலரா
ளொவ்வாவனப்பின்மனைவியரோடுயர்வெங்கானந்தனில்மேவி
யையவாயரவையனையபொறிதயக்கோற்றியாதியளிமுரலு
மையவார்கடந்துவமைபங்கன்மலற்றாணீழலடைந்தனனால். ௧௨

உரைத்தகாதையினைப்பரிவிற்கேட்டோர்மகிழ்ந்தோரோதினோர்
விருப்பார்மகப்பெற்றிருஞாலந்தன்னிநெடுநாண்மிகவாழ்ந்து
வரிப்பூணுதலார்பங்கனுறையுலகில்வதிவாரென்றுதவத்
திருக்காலுயர்ந்தசூதமுனிவேந்தன்மரபுசாற்றினனால். ௧௩

சந்திரவங்கிசமுரைத்த வத்தியாய
முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௦௨௨.

அறுபத்தாறுவது
எதுவங்கிசமுனாத்த வத்தியாயம்.

தென்மேல்பாலிலுறையுமெதுவளித்தபுதல்வர்தீய்த்துமுக,சொன்னூர்வெள்வேற்சகத்திரசித்தெழில்சேர்குரோட்டுநீலன்முது, பன்னூறெரிந்தசிகன்கோடிபருதிவடிவாள்மன்னர்தொழு, மின்னூர்கழற்காலிரகுவெனும்வினைத்தார்வேந்தனெனவிரிப்பார். க

பகர்ந்தவவருட்சகத்திரசித்தென்பான்புதல்வன்பசுநவார்
நகைந்ததுணர்த்தார்ச்சதசித்தாங் கவன்றன்புதல்வர்மூவரிற்சீர்
திகழ்ந்தம்படருமேகயன்றன்புதல்வன்றெய்வத்தாமரையை
நகும்பொற்கழற்காற்றருமநேத்திரனென்றெவருநவில்வரால். உ

வேறு.

விடங்கொள்வேற்றருமநேத்திரன்புதல்வன்வினைதினைப்பாற்கடலுடைக்குர், தடங்கொள்பொற்குமி மந்தரவனையிற்றுட்டுணைபணிந்திடாவெள்வே, லடங்கலர்சேனைக்கடலினையுடைத்தவன்கெழுவாகையந்தடந்தோள், மடங்கலேறனையகிருதவீரியனும்வசையறுபுகழுடைமன்னன். ஙு

கிருதவீரியனுங்களித்திடுபுதல்வன் இளாவிசும்படமரனையெல்லாம், பொருகளந்தன்னிற்புறக்கொ[illegible]டைந்தவாளிராவணன்வெற்றித்,திரடடம்புயங்களிருப[illegible]க்கவார்த்திருஞ்சிறைப்படுத்தி, யொருதனியானையு[illegible]லுத்துங்கார்த்தவீரியனெனுமுரவோன். சு

வேறு

பருதிவடிவாளவன்மைந்தனாஞ்ஞு[illegible]
முருவவல்குன்மடநல்லாருடியுதைத[illegible]

மருவுமாதர்முலைச்சுவடுமாறாச்சந்தவரைமார்பிற்
றெரியருமுஞ்சயத்துவசன்புதல்வன்றாலசெங்கணும் ௫

திண்டோளவன்றன்புதல்வர்நூற்றுவரிற்சுரும்பர்செழும்பொற்
றுண்டாட்டயர்ந்துமுகைகீறியோடுநறவம்வாய்மடுக்கு [ரு
தண்டாரலங்கல்விருடனெழிற்றயங்கும்வீதிகோத்திரனும்
விண்டோய்சீர்த்திவிறல்வேந்தர்விரிநீருலகமளித்தனரால். ௬

விருடன்புதல்வனசன்கயவாய்வாளைகமுகின்மிடறொடிப்ப
வரிசேர்புள்ளிச்சினைவரால்வளர்பூங்கழையின்மிசைதொடுத்த
வுருவப்பசுந்தேன்றுடைகீறுமொலிநீர்ப்பழனநாட்டுமதுப் [ல்.
பொருவிலவன்றன்புதலவன்விருடணனென்றெவரும்புகல்வரா

மற்லறவீதிகோத்திரனுங்களித்தபுதல்வன்மணிவண்டு, முற்றி
ப்பசுந்தேன்றுளிமாந்தமுகைவிண்டலர்தாரணியனந்தன்,பொற்
றகழற்காலவன்புதல்வன்பொருந்தார்பசியகொழுங்குருதி, வெ
ற்றிவடிவாட்குணவளித்தவிறற்றுச்சயனென்றுரைப்பரால். அ

முன்னருணத்தகுரோட்டுவென்பா னளித்தபுதல்வன்முனைமதி
ய, மன்னவெயிற்றுப்பூதமும்பேய்க் கணமுந்துணங்கையாட்ட
யர, மின்னுங்கதிர்வாளுறைகழித்தபிரசனுவானவன்விழைவு,ம
ன்னும்புதல்வன்புகழ்சித்தி ரரதனென்றுரைக்கும்வயவேந்தன்.

வேறு.

வெண்டலைப்புணரிஞாலம்விருப்புறுமவன்றன்மைந்தன்
வண்டிருப்பனையபல்காழ்மணியல்குன்மடந்தைமார்தந்
தண்டையந்தாடைவந்துதகைபெறச்சிவந்துவீறு
கொண்டசைசசிவிந்தென்னுங்குளிர்மதிக்கவிலகவேந்தன். ௧0

வேறு.

அங்கவன்புதல்வர்நூற்றுவருள்மற் றவர்தமிலந்தகனெ
னானும், தேங்கமழ்தாரோனளித்திடுபுதல்வன் சிறுநுதற்கருங

கயந்கண்ணூர், வாங்குநுண்மருங்குலேங்கமேலெழுந்தும்ணிவ
டஞ்சமந்திறமாந்து, வீங்குவெம்முலேகள்பசப்புறவீங்கும்வெ
ற்புறழ்திணிபுயச்சயச்சன். கக

வேறு.

இரவலர்க்கடையாவாயிலெழிறிகழிஞ்சிசூழ்ந்த
திருநகர்தன்னின்மேவுந்திண்டிறற்சயச்சன்மைந்த
னிருதியாங்கவன்றன்மைந்தனெழில்பெறுமுசஞவன்ஞேன்
பொருவறுபுதல்வன்செய்யபூந்தொடைத்திரிதனுமால். கஉ

அன்னவன்சிறுவன்பாலாராவியந்துகில்சூழ்தந்த
பன்மணிக்கலாபமின்னும்பாம்படுபணிந்தேந்தல்குற்
கன்னலங்குதலேமாதர்கண்மணிவண்டுமார்க்கு
மின்னிசைவண்டும்வீழுமீர்ந்தொடைச்சுதேடுவென்பான். கங

உரைத்திடுமன்ஞேன்மைந்தனுறுதிவழங்கவெய்தி
யிரப்பவரிலாமையாலுமெரியுமிழ்திலங்கிக்காய்ந்து
செருக்குவாட்டெவ்வர்வந்துசெருவெதிர்கொடாமையாலும்[ன்
பொருப்புறழ்திணிதோள்வாடும் புகைந்தவேல்மருங்குவென்பா

விலேப்புறங்கொடுத்தவாரந்தாங்கவன்விழைந்தமைந்தன்
கலேப்புறங்கொடுத்தவல்குற்கணேப்புறங்கொடுத்தகண்ணூர்
மலேப்புறங்கொடுத்தகொம்மைமவனமுலேக்கிறவிள்ளு
மிலேப்புறங்கொடுத்தபூந்தார்வெறுழ்வலிமருத்துவென்பான்கரு

தேனவிழ்பசியதொங்கலவனருள்சிறுவன்வெய்ய
கானகமடைந்ததெவ்வர்மனேவியர்குழலுங்காய்பொற்
ருனேயமுலேமேற்ருருங்கண்டகம்பற்றிவாங்கக்
கூனவில்வாங்குகொற்றவுருக்குமகவசனென்பான். கசா

பொற்புறுமன்றேன்மைந்தன்போகுயர்வானின்மேவிக்
கற்பகம்வாடயாவுங்கலங்கிடக்காய்பொனேத்துச்
சொற்புலவோர்க்குநல்கும்பார்விருத்தன்றேன்றேவில்
மற்பகவீங்குதிண்டோள்வாகைவேலைவர்ப்பெற்றான். கஎ

கழல்புனையவர்கடம்முட்சியாயகனென்னுங்காளை
வழிமதுத்தொடையல்மாலைச்சிவிச்சக்கிரவர்த்தியீன்ற
வொழுகுநுண்மருங்குற்பேதையோங்குவெம்முலையிற்றோய்ந்து
விழைவுடனளித்தமைந்தன்வெற்றிவேல்விதர்ப்பனுமால். கஅ

விதற்பர்கோனளித்தமைந்தர்விண்ணுறுநிவந்தகீர்த்திப்
படைப்பரும்பருமயானைக்காதனும்பாண்வண்டார்க்கும்
புதுக்கடிகமழுமாலைபுனைகவுசிகன்வாள்பூத்த
மதிக்குலவிளக்காம்வெய்யவாகைவேலுரோமபாதன். கக

வாகைவேலுரோமபாதன்மகிழ்வுடனளித்தமைந்த
னாகிளவண்டார்தொங்கற்பப்புருவன்றன்மைந்தன்
கோகிலமிழற்றுதண்பூங்குளிர்பொழிலுடுத்தபொன்னம்
போதுயரிஞ்சிசூழும்புனைகர்ப்பூதியென்பான் உ௦

காதனுங்கருணுமைந்தன்கனாபொருதிரங்குமுந்நீர்
விரிதிரைக்கடலும்வானவெண்மதிவடம்புதட்ட
வுருவியசிமையவெற்புமுழுதியென்றுடன்றோர்பற்றக்
குருதிவாள்பற்றுஞ்செங்கைக்குந்தியென்றுரைக்கும்வேந்தன் உக

குந்திபோய்களித்தமைந்தன்குலவளாபணையமார்பிற்
சந்தைதவெம்முலைமேலாகத்தடமுலையணிந்தகன்னன
மைந்துடைமார்பிற்காகமதனமர்விளைக்குஞ்செய்ய
வுந்துதேன்றுளிக்குமலைபந்தாருணாவிருட்டிணியென்பாரால் உஉ

மானடைந்திருந்தவெள்ளை மதிக்குலத்தவன் றன்மைந்த
னூனடைந்திருந்தவெள்வேல்வலக்கையதாகிலொன்னார்
கானடைந்தவர்கள்போகக்களத்திடையெதிர்ந்துவந்தோர்
வானடைந்திடக்காண்வெற்றிரண திருட்டனென்னுமன்னன். உங

இட்டிடைகலுழவீங்கியெழுந்தவெம்முலைப்பொன்னார்ந்த
பட்டுடைச்சூழுமல்குற்பனிமொழிமகளிர்நெஞ்சி
னுட்டிகழ்ந்தொளிருமன்னோன்மகனிதிதிதியோங்கன்னோன்
மட்டவிழ்தொடையன்மைந்தன்றசாருகனென்பான்மாதோ.

பொறிப்புறவலவன்றுளால்கழ்குழிதோறும்பொற்பார்
செறித்தபூங்கமலமுத்தசிறைந்திடுங்கழனிநாட்டு [ன
விறற்படையன்னோன்மைந்தன்வியோமன்மற்றவன்றன்மைந்த
புறக்கொடைபகைவர்க்கண்டபொருவில்சீமூதனென்பான். உடு

அளிதவழ்ந்தேறுபைந்தாரவன்மகனகன்றவான
வெளியிடைச்செல்வோர்செல்லுஞ் செலவழுங்குறமேல்வீங்கிக்
கிளர்முலைமடவார்போற்றக்கேழ்கிளர்கழைத்தோள்வாட
வளர்தருமலங்கற்றிண்டோள்விகிரிதியென்னுமைந்தன். உசு

வணங்கலார்மார்பம்புக்குத்தசைசுவைத்தொளிறும்வாகை
யணங்குவேலவன்சேய்வீமரதனவனளித்தமைந்தன்
மணங்சொடார்மணிசேய்மோலிசிவாதனனவன்சேய்வண்டு
பிணங்கிவீழ்பசியதொங்கற்றிரிரதனென்னும்பேரோன். உள

வயங்குபொற்றேருமாவும்வேழமுமன்னியார்க்கு
மியங்கலர்நகரில்வைகுந்திரிரதனீன்றமைந்தன்
றயங்குவாட்சகுனனன்னோன்றருமகனிரம்பன்றும
முயங்குமார்பன்னோன்மைந்தன்மூசிவேற்றேவராதன். உஅ

வேறு.

பாவடிப்பணைக்கைப்பகடுபோழ்ந்திடுவாளன்னவன்பயந்திடுமைந்தன், தேவனக்கேத்திரநந்தனனன்றேனளித்திடுசீருடைமைந்தன், பூவையஞ்சிறையகிள்ளைபோடிருந்துபுதுமொழிபயிலவின்றோங்கு, காவுசூழ்நகர்வாழ்புருடன்மற்றவன்சேய்கவின்புருடோத்தமனென்பார். உக

உலம்பொருதிணிதோண்மலையெனவீங்கியுயர்புருடோத்தமன்கதிர்கான், றிலங்கொளிமவுலிதாங்கியவிக்குவாகுவென்பானினிதளித்த, பொலங்குழைமடந்தைதோட்டுணைதழுவிப்பொற்புறவளித்திடும்புதல்வன், விலங்குவில்லுமிழுமணிதிகழ்மார்பன்விறன்மிகுசாந்தொதனென்பார். ஙூ0

எதுவங்கிசமுறைத்தவத்தியாய
முற்றிற்று.

ஆக திருவிருத்தம். கூருஉ.

அறுபத்தேழாவது
சாந்தொதன்வங்கிசமுறைத்தவத்தியாயம்.

என்னவாணையமாலையேயோடெறிந்தறிவுற்று
மன்னுமாதவமுனிவார்மதிமரபுதித்த
பொன்னவார்கழற்சாந்தொதன்மரபினைப்பொருந்த
முன்னிக்கூறெனக்குதனுமறிவுறமொழிந்தான். க

அன்னசாந்தொதனளித்திடுபுதல்வனற்குமாரன்
பொன்னுலாங்கழலந்தகன்றிவ்வியன்புகழ்சேர்
மன்னிருட்டிணிபோசனந்தேவமாவிருதன்
றன்னையொப்பிலாத்தகைபெறுசீர்ப்பசமானன் உ

கச்சந்தின்றபொற்கழற்பசமானனற்புதல்வ
ரச்சணங்குவேற்சகச்சிரன்புகழுயுதாயுச்
செச்சைதாழ்புயத்தாசகன்றிருந்தலர்ச்செகுக்கும்
பச்சிரத்தவாள்விறற்பலவானெனப்பகர்வார். ௩

முன்னங்கூறியதேவமாவிருத்தனுமொய்ம்பு
மன்னுமார்பினன்மகிழ்வுடனளித்திடுமைந்த
னன்னமென்னடைப்பேதையர்பேதுறவலங்கற்
கன்னவின்றதோட்கவின்செயும்பப்புருவென்பார். ௪

மற்றையந்தகனளித்திடுபுதல்வர்வெண்மதிநேர்
கொற்றவெண்குடையச்சுவவீடணன்குமரன்
றுத்திவண்டுதேனருந்திடுதொடையணிசமீகன்
வெற்றிவாட்பசமானெனவிளம்புவரன்றே. ௫

வேலைசூழ்புவியெத்துணையத்துணைவிரிந்த
மாலைதாழ்குடைக்குராணனன்களித்திடுமைந்த
னலமென்னவந்தடர்ந்திடுமடையலாரவி
காலன்வாய்க்கிரையாக்குவேற்கவின்றிருட்டுணுவே. ௬

வேறு.

கழல்புனைந்திலங்குநோன்றாட்டிருட்டுணுவளித்தகாளை
வழிமதுமலரோன்றேனும்வார்குழல்சுட்டிவிட்டோர்
பழியுறுமருங்குல்மாதர்பணைமுலைபசப்பச்சூழ்ந்து
விழைதரவலங்கன்மார்பம்விரிந்திடுமனலனென்பார். ௭

படுபொறிப்பகுவாய்வெய்யபாம்பெனவேதிர்ந்தவேந்தர்
குடர்புறஞ்சூழ்ந்தகோட்டுக்குஞ்சரவனலமைந்த
னிடையெவனுய்வதென்றேயேங்கிடவீங்குமுத்த
வடமணிமுலையினூர்க்குமதனனுமயிசித்தென்பார். ௮

வேறு.

ஆடல்வேலபிசித்தடலாகுகன்றனேயும்
பாடல்வண்டிமிர்தொடைப்புணர்வசுவையும்பாண்செய்
கோடயாழ்மருள்குதலேயாகுதியெனுங்கொங்கா
ரோடவிழ்ந்தபூமலர்க்குழறன்னேயுமீன்றாள். க

புதல்வரின்றிநற்புணர்வசுப்புரவிநன்மேதம்
விதியிற்செய்தவிசொரிந்திடுமழலிடைவிளங்க
மதியின்மிக்கபேரயுகனுமைந்தன்மாற்றரசர்
பதைபதைத்திடப்பாணியாதுதித்தனனன்றே. கூ0

மொழிந்தவாகுகன்மைந்தர்வான்முகின்முகங்கறுப்ப
வழங்குவண்கொடைத்தேவகன்மறிதிரைபுரட்டித்
தழங்குகார்க்கடலுலகெலாந்தனதடிப்படுத்தி
யுழந்தவெஞ்சமங்கடந்தவேலுக்கிரசென்ன. கூக

உரைத்தமற்றவர்தம்மிலொண்கதிருமிழ்மவுலி
தரித்தவுக்கிரசென்னெனப்பான்றழனுகம்
பரித்தமாநிலமுழுவதும்பையுளுற்றிரங்க
மருத்தலைழத்ததார்மணிமுடிக்கஞ்சனேப்பயந்தான். கூஉ

மற்றைத்தேவகன்மைந்தரோர்நால்வரோடசைந்து
பற்றிலாவிடைபாடுறப்பணைத்திருமாந்து
கொற்றங்கொண்டெழுகுவிமுலேத்தேவகிமுதலாங்
கற்றைவார்குழற்கன்னியரெழுவரைப்பயந்தான். கூஙூ

பயந்தகன்னியரெழுவர்தம்மையும்பனிவிசும்பி
னியங்குவானவர்செவிடுபட்டிடமுரசெறிந்து
வியன்கொள்சீர்மலிதேவகன்விழைவுடனளிப்ப
வயங்குதார்வசுதேவனன்குறமணந்தனனால். கூச

ஆவிவாட்டியவாட்ல்வாளுடைவசுதேவ
னுவிவாட்டியநறுமலர்க்கருங்குழல்நளினத்
தேவிவாட்டியசிறுநுதலுரோகிணியென்னுங்
காவிவாட்டியகன்னிதன்னையுமணந்தனனால். ௧௫

கஞ்சனயகாலத்தினிற்றேவகியெட்டா
மைஞ்சனின்னுயிர்மாய்த்திடுமென்பதுகேட்டு
விஞ்சுசீருடைவிறல்வசுதேவனேட்ளிய
பஞ்சின்மெல்லடித்தேவகிதனைச்சிறைப்படுத்தான். ௧௬

சிறையிடைப்படுதேவகியீன்றருள்பால
ரறுவர்தம்மையுமறத்துறைவழியுலகளிக்குங்
கறைகொள்வாட்கஞ்சன்கையினுற்காலினைப்பற்றி
மறியநீணிலத்தடித்துயிர்மாய்த்தனனன்றே. ௧௭

கொடியகஞ்சனம்மக்களையுயிர்குறைத்ததற்பி
னெடிவிலாவறிவாலுயர்சேடனேர்கூற
மிடல்மிகுந்ததோள்விற்பலபத்திரன்றன்னைக்
கடிமலர்க்குழற்றேவகிகருவினுட்கொண்டாள். ௧௮

கொண்டவக்கருவதனைமால்மாய்கையைக்கொண்டு
வண்டுலாங்குழலுரோகிணிவயிற்றினுள்வைப்பக்
கெண்டையந்தடங்கண்ணவள்கிளர்வெள்ளைமேனித்
திண்டிறற்பலபத்திரன்றனைச்சிறந்தளித்தாள். ௧௯

பின்னர்நல்லெழிற்றேவகிபிள்ளைவண்டிசைக்குங்
கன்னியந்துளவணிந்திடுகண்ணனைவிரியுந்
துன்னுகார்க்கடலுலகெலாந்துயரறுத்துய்ந்து
மன்னிவாழ்தரமகிழ்வொடுவயிறுவாய்த்தனளால். ௨0

வேறு.

திகிரியஞ்சங்கும்வாளுந்தண்டமுந்திகழும்வில்லுந்
துகைபெறத்தாங்கித்தோன்றுஞ்சிறுவனைத்தந்தைநோக்கி
மகிழ்வுடன்வணங்கவோடுமவையெலாமறையாவன்றேன்
முகமெதிர்நோக்கியின்னமொழிசிலபுகன்முனன்றே. உக

என்னையாங்காயர்பாடியுய்த்துமற்றசோதையீன்ற
கன்னியாமாயைநன்னைக்கடிதினிற்கொணர்தியென்ன
வன்னவன்சிறுவன்றன்னையாங்கணுற்றசோதையீன்ற
வின்னிளங்குழவிதன்னையெடுத்தனன்கொணர்ந்தானன்றே.

கொணர்ந்தவக்குழவிவாய்விட்டழுதிடுகுரலைக்கேட்டுப்
பணம்புனையல்குற்றங்கைகயிற்றினிற்பற்றிக்கஞ்ச
னணங்குறப்பாறைமீதிலடித்திடவெடுக்குமெல்லை
மணங்கமழ்வன்பொற்குளிலுதைத்துவானகன்றதன்றே. உங

அகன்றவம்மாயைகஞ்சனலர்முகநோக்கியாரு
மிகழ்ந்திடுநின்னைக்கொல்வானெய்தியாரொருவனென்று
நிகழ்ந்தவாறென்றுகூறியேகலுஞ்சிந்தைவாடி
முகம்புலர்ந்தயராவன்றேன்மொய்கதிர்மாடம்புக்கான். உச

ஆயர்தம்பாடிதன்னில்வளர்ந்தவக்கண்ணனெய்தி
தீயவாநெறியிற்செல்லுந்தீயடிறற்கஞ்சனுவி
மாய்வுறவெறிந்துமோதுமறிகொயுலகமெல்லாஞ்
சேயவாந்தருமந்தன்னைத்திகழ்தரப்பரப்பினானே. உரு

வேறு.

அல்லவேகடிந்தமுகினிறக்கண்ணனலர்முலைமனைவியர்த
ம்மைச், சொல்லிடிற்பதினறுயிரத்தொருநூற்றுவருளரவர்தமிற்
குற்கொள், செல்லெனச்செறிந்தகருங்குழன்மடவாரொண்மரா

திக்கனித்துவர்வாய், முல்லைவாண்முறுவற்கமல்வீட்டுறையும் ணங்குபோன்முதன்மைபெற்றுளரால். உசு

மற்றவர்தம்மிலணிதிகழுருக்குமணியெனும்வரிநுதன்மடந்தை, பெற்றிடுபிரத்தும்மினன்முதலாகும்பெருந்தகையவர்களை நோக்கிக், கற்றையங்கூந்தற்கதிர்முலைச்சாம்பவதியெழிற்கண்ண னேடெனக்குச், செற்றமில்புதல்வர்வேண்டுமென்றன்னேன் றேமலரடிதொழுதுரைத்தாள். உஎ

ஆங்கவருரைப்பக்கேட்டுளம்வருந்தியயர்வுறேலணிவடஞ் சுமந்த, கோங்கரும்பனையமுலையுமைபங்கன்குரைகழற்றுண்மு தல்வணங்கித், தீங்கரும்புதல்வர்த்தருவலென்றுரைத்துத்திகழு பமன்னியுவிருக்கு, மோங்குறுசாலையதனிடைக்கண்ணனுய்திற னுடியெய்தினனுல். உஅ

எய்திமாமுனிவன்றுளிணைவணங்கமுனிவனுமெழில்பெ றுகண்ணை, னுய்திறனுடிநோக்கினுலவன்றன்கருவினையொன்ற றக்கழுவிச், செய்யவாய்மறைசொல்லஞ்செழுத்தோதித்திகழ்ந் தவக்கண்ணனைக்கரிய, மைதிகழ்மிடற்றேனடியிணைபரவுமடிய ர்தம்பண்ணையுள்வைத்தான். உகூ

அஞ்செழுத்துணராவான்சுவைத்தீம்பாலளித்திடுவெண்ணை யெய்பூசிக், கஞ்சமொத்திலங்குதாணுதியூன்றிக்கையினைமேனு றப்போக்கிப், பஞ்செனச்சிவக்குஞ்சீறடியுமையாள்பங்கனைம னத்திடைநினைந்து, மஞ்சனைவேண்டிவருவளியருந்திமாசறுதவ மியற்றினனுல். ௩0

மாசறுதவத்தால்வருந்துதற்கிரங்கிமலையெனவளர்ந்துவார் முனிந்து, தேசுகண்படைக்கும்வருமுலையுமையாளொடுஞ்சினவி டையின்மேல்கொண்டு, மூசிவண்டுழக்கமுகைவெடித்திளந்தே

றெழுகியமொய்மலர்க்கொன்றை, யோசனைகமழவென்னையா
ளுடையான்கண்ணனுண்மகிழ்தரவெதிர்ந்தான்.   ருக

வேறு.

எதிர்ந்திடுமிறைவன்றன்னையிறைவியோடினிதுநோக்கித்
ததைந்தபூங்கமலப்பொற்றாடாழ்ந்துவெம்பிறவியென்னும்
அதிர்ந்திடுகடலினாழ்வேன்முன்னரங்கயிலைமேவி
வதிந்ததொன்முதலேகாணவந்ததேனெளிதினென்றான்.   ருஉ

என்றலுமிறைவனுள்ளம்விழைந்தவாறியம்பென்றோத
மன்றநின்றாண்மேலன்பும்புதல்வரும்வழங்குகென்னக்
கொன்றைதாழ்மவுலியானுங்கூறினகொடுத்துவானஞ்
சென்றுயர்கயிலைதன்னிலுமையொடுஞ்சேர்ந்தானன்றே.   ருரு

அன்னவேலகியபின்கண்ணாநணிகிளர்துவாரைநண்ணப்
பெண்ணலங்கனிந்தசாம்பவதியவள்பெருந்தோள்புல்லிப்
பண்ணவனருளாற்சாம்பன்முதலியபதின்மர்தம்மைத்
தன்னைநுந்துளவோனுள்ளமகிழ்ந்திடத்தகவினீன்றான்.   ருச

மற்றயமனைவிமாருமகிழ்விறைொருவர்வாகைப்
பொற்றடந்திணிதோன்மைந்தர்ப்பின்மனைப்புகழவீன்று
ருற்றநற்புதல்வர்கண்டாங்குமிழ்நறைத்துளவிறைனு
மற்றமினுவகைகூரவகமலர்ந்திருந்தானன்றே.   ருரு

மணிமிடற்றிறைவனேவவாணனுயிரங்கைதம்மி
லணிகெழ்நடக்கையோர்நான்கொழியமற்றவைகளெல்லாந்
துணிதரத்திகிரிதன்றாற்றுணித்தலர்துளவோன்பின்னு
மிணையிலாவரக்கர்வெய்யவின்னுயிர்மாய்த்திட்டானே.   ருசு

தருமனைமுதலவாயவைவராற்றரணிகாவற்
றிருமலிவேந்தர்மற்றையனேகரைசிதைவித்தன்பா

உரிமையாந்தனதுசுற்றம்யாவையுமுணர்ந்தவேதப்
பொருவருமறையோர்சாபத்தாலுயிர்பொன்றுவித்தான். ௩௭

பின்னரோர்வேட்டனேவாலேறுண்டுபிறங்குதிண்டோள்
மன்னுவேட்டனுக்குமாருக்கதியினைவழங்கித்தானு
முன்னுபுதேவரொல்லாம்போற்றிட்முகைவாய்விண்ட
கன்னியந்துளவநாறவைகுந்தங்கடிதிற்சேர்ந்தான். ௩௮

இனமலர்க்குழலுருக்குமணிமுதலெண்மர்வெய்ய
கனையெரிமூழ்கியாவிகழிந்தனர்சேட்டனைப்
புனைதொடைப்பெலனும்பொன்றிப் போயினனுயிர்மாய்த்திட்
துணைகரிலாதபொற்பாரிரோவதிதழலின்மூழ்கி. [டான்

விசையனுங்கவர்கட்கெல்லாநீர்க்கடன்விதியிற்செய்து
வசையறுதருமற்கெய்தியுரைத்தலுந்தருமன்மாழ்கி
நசையிலையுலகினென்றுநானிலம்வலங்கொண்டேகி
யிசைபெறுதுணைவரோடுமிருங்கதியெய்தினனே. ௪௦

எய்தவிக்காதைதன்னைக்கேட்டுளோரிசைத்தோரிந்த
மாயிருஞாலந்தன்னிற்பன்னெடுங்காலம்வாழ்ந்து
சேயுயர்கயிலைதன்னிற்சென்றுவீற்றிருப்பரென்று
மேயவைம்புலன்கள்யாவும்வென்றமாசூதன்சொன்னான். ௪௧

சாத்தொதன்வங்கிசமுரைத்தவத்தியாய

முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௦௧௩.

அறுபத்தெட்டாவது
தத்துவதோற்றமுறைத்த
வத்தியாயம்.

———*———

சொன்னவைகேட்டுமாயைத்துவக்குருமுனிவர்முன்ன
மன்னியபடைப்பின்றன்மையுரைத்தனைமயங்காவண்ண
மின்னுநீவிரித்துக்கூறவேண்டுமென்றியம்பலோடுந்
தன்னையொப்பில்லாச்சூதமுனிவரன்சாற்றினுனல்.

வேறு.

அழியாமுதலாயொன்ருகியமலமாகியுறைகின்ற
பழுதின்முதலினிச்சையாற்பகரும்பிரதானத்தினின்று
மொழியுமகதத்துவமுண்டாமொழிந்தபிரதானந்தானே
விழைவிற்ருன்றுமகானுகிவருமென்றறிந்தோர்விளம்புவரால்.

வேறு.

உரைசெய்மகதத்துவத்தையொழிந்துநின்றதத்துவங்களவை
க்குமேலாய், விரைவின்வந்துதோன்றலால்மகானென்றுந்தான்
வளர்ந்தும்விரிந்துநின்று, மருவுறுபூதங்கடம்மைவளர்த்தலாற்பி
ரமனென்றும்வரம்பிலியாவும், பரமனதனுலறிதலாலதனைபிரு
தியென்றும்பகருவர்மாதோ. ௬

நிறையுமகதத்துவந்தன்முயற்சியாணிகழ்த்துமகங்காரந்த
ன்னை, முறையினிலுண்டாக்குமந்தவகங்காரம்விகாரமாயைமு
றையேநின்ற,குறைவிலாப்பஞ்சதன்மாத்திரைகட்மைத்தோற்று
விக்குங்கோதின்ருக, வறையுமவைதமினின்றும்பூதங்களைனை
ந்துமடைவிற்ருன்றும். ௭

போற்றும்வைகாரிகமென்னுமகங்காரந்தனினின்றுபொலி
விஞேடு, தோற்றுமொலிமுதலைந்துமுணர்தருஞானேந்தியங்களை

ந்தந்தோமில்,சாற்றுமொழிமுதலாயவைந்துகருமங்களையுந்தகைவிற்செய்யுமாற்றில்கருமேந்திரியங்களைந்துமனத்தோடுவந்துதோன்றுமாதோ. ௫

உரைத்திடுபூதங்களோரொன்று தன்னிலோர்பாதிநான்கதாகி, விரித்திடுபூதங்களொருநான்கினுளுமேவுமதை மெய்ம்மைவேதத், தெரித்திடுமாமுனிவர்பஞ்சிகிருதமெனவிரித்தறிவார்செப்புவாரால், முருக்கிதழ்வாயுமைபங்கன் ஞென்னூலுமிவ்வகையேமொழியுமன்றே. ௬

இவ்வகையேகலந்துறையுமைம்பூதத்தொடுங்கரணமுதலாயெங்குஞ், செவ்விதாயுறைகின்றவிசேடத்தையீருந்தத்துவங்கள்சேரிற், பௌவநீர்மொக்குளெனவண்டமுதித்திடுமதனிற்பவளம்வாட்டு, கொவ்வைவாயுமைபங்கனருளினாற்குலமறையோன்றோன்றுமாதோ. ௭

தோன்றியவேதியன்படைப்பானெண்ணிருசிதனைமனத்தினுவந்துதுய்தா, மான்றமறையறிகின்றவங்கிராவத்தலையினிடையுமங்கே, கான்றொளிசேர்கண்ணினிடைமரிசியையுமத்திரியைக்கரத்தினுள்ளூந், தான்றனியேயுறைகின்றபிராணனிடைத்தக்கனையுந்தோற்றுவித்தான். ௮

இதையத்திற்பிருகுவையும்வியானவாயுவிற்புலகன்றனையுமேதில், மதியுற்றபுலத்தியனையுதானவாயுவினிடையுமாசின்றுகிக், கதிபெற்றவசிட்டனைச்சொல்சமானவாயுவினிடையுங்கற்றோர்தம்மாற், றுதிபெற்றகிருதுவினையபானவாயுவினிடையுந்தோற்றுவித்தான். ௯

அல்விமலர்க்கமலத்தோனச்சனத்திலசுரர்தமைப்படையாவந்த, வெல்லையினிலவ்வுடம்பைத்தணந்தனனவ்வுடம்பல்லாயி

ற்றுப்பின்னோர், மல்லனுருவெடுத்துயர்ந்தவானோரைப்படைத்தந்தவயங்குமெய்யை, யொல்லையில்விட்டனனந்தவுடம்புபோயெல்லாகியுறைந்ததன்றே. ௧௦

மன்னுமோருருவெடுத்துத்தென்புலத்தோர்தமைப்படைத்துவயங்கும்மெய்யைப், பின்னும்விடவதுசந்தியாயிற்றுற்பிறங்குமொளிக்கற்றைகாலும், பொன்னிதட்டாமரையுறைவோன்மீட்டுமொருமெய்யெடுத்துப்பொருவிலாது,முன்னுபுமக்களைப்படைத்தம்மெய்யைவிடவதுநிலவாய்முளைத்ததன்றே. ௧௧

மறைவிரித்தநான்முகத்தோன்பின்னுமோருருவெடுத்துமறிநீர்தன்னை, முறையின்வகுத்திடவதனையருந்திடுவானசுரரவர்முனிவுகூர்ந்து, நிறைதருமெய்மயிரெல்லாம்பாம்பாகவவற்றினையுநெருப்பிற்சீறித், தெறுதலுமம்மலரவன்றன்மெய்யெலாம்பொன்னிறமாய்த்திகழ்ந்ததன்றே. ௧௨

இருந்திடாப்பூதமொடுபேய்களைப்பின்படைத்துத்தன்றிகழும்வாக்கை, யருந்திடலுங்கந்திருவருதித்தனர்தன்காலத்தாலகன்வான்செல்லும், பருந்துமுதற்பலபறவைகளைப்படைப்பமுகத்தினுமார்பகத்தினின்றும், பொருந்துமறைவேள்விக்காய்த்தகர்கள்பலபொருக்கெனவந்துதித்ததன்றே. ௧௩

புரியவிழ்ந்துகறவுயிர்க்கும்பொன்னிதட்டாமரையுறையும்பொருவில்புத்தே, ளிருவிலாப்புடையினிலும்வயிற்றினுமாவினந்தோன்றித்தெழில்சேர்தாளி, லரிமுதலபலவிலங்குதோன்றினவாலாங்கவன்றனுரோமந்தன்னில், விரைகமழுங்கொழும்பழங்கள்விளையுமருங்கிழங்குகள்தோன்றினவால்மாதோ. ௧௪

மறைதகவொருநான்கையுமம்மறைவடித்தவேள்வியையுமயங்காவண்ணம், முறையினிற்றன்னான்குமுகத்தினும்வகுத்தானிக்

கதையை மொழிந்தோர்கேட்டோர், நரையிதட்டாமரையுறை யுநான்முகத்தோனுலகினிடைநண்ணிநாளு, முறைதருவொன்று ரைசெய்தானுண்மைதெரிசூதமாமுனிவன்மாதோ. கடு

தத்துவதோற்றமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ககOஅ.

அறுபத்தொன்பதாவது திரிபுரத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

ஆங்கதுகேட்டின்பமொடுதுன்பமெனுங்கண்டசக்காடனை த்துஞ்செய்ய, தீங்கறுநற்றவமென்னுமதியிஞற்சுட்டுயர்ந்தமு னிவர்தேன்கால், மாங்குயின்மென்மொழிபங்கன்முப்புரத்தைச் செந்தழலின்மடுத்தவாறு, மோங்குறுநற்பசுபதியாந்தன்மையுந ன்குணர்த்தியெனவுரைத்தான்சூதன். க

தாரகாசூரனென்போன்றனைக்கொல்வான்றேவரெல்லாந் தாழ்ந்துவேண்டச், சூர்தடிந்தோன்கொன்றதற்பினவனின்றதி றல்வித்துமாலியுஞ்சூர்க், காரணையமெய்த்தாரகாக்கனுஞ்சொல் கமலாக்கன்றானுந்தேனர்,வேரிமலர்ப்பொருட்டுறைவோன்றனை நோக்கியரிய தவம்விருப்பிற்செய்தார். உ

மற்றவர்மாதவநோக்கிமலரவனுங்கெய்தியவாவதனநோக் கிப், பெற்றிடுவான்யாதுளத்தில்விரும்பினீரெனக்கேட்பபெரி துந்தாழா, வற்றமிலாவாழ்நாட்டந்திடுதியெனவதுநல்கலடாதா னெஞ்சி, னுற்றவரம்வேறுளதேற்கேண்மினெனவாங்கவருமு ரைக்கலுற்றார். ங

அந்தரத்தினியங்குமெயிலொருமூன்றுவேண்டுமந்தவெயில் கண்மூன்றும், வந்துதம்மிலெக்காலங்கூடுமந்தக்காலத்தில்வடவைகாலு, முந்துகணையொன்றெவருமுவமையிலாவொருவன்விடிலொருங்குமாய்ந்து, சிந்திடலல்லாலெவர்க்குமழியாமலுறையும்வகைசெய்தியென்றார். ௪

ஆங்கவர்கள்கேட்டவரமருளிமலர்பொகுட்டுறைவோனகன்றபின்னர், தூங்கெயில்களொருமூன்றுபொன்வெள்ளியிரும்பிவற்றாற்றுலங்கிற்றோன்றி, யோங்குறுவானிடைவெளிமண்ணிவற்றிடையேயுறைந்தோங்கியியங்குவாறும், வீங்கறிவாலயனியற்றவாங்கவரும்விழைவினொடுமேவினாரோ. ௫

அவ்வெயில்களெவ்வுலகுஞ்செலவியற்றியாருயிர்மற்றெவையுமாய, விவ்வகையேதிரியுமிவர்க்கண்டேங்கிக்குலிசமுதற்றேவர்யாரு, மைவிழியுந்திருமேனிமாயன்றானமெய்தியுற்றவண்ணங்கூறி, யெவ்வமகற்றிடுதியெனவணங்கிடவுமுய்யும்வகையியம்பினானே. ௬

கொலைகளவுகள்ளுண்டன்முதலியனகொடும்பாவமியற்றினோரு, மலகிலாதொன்றாகியமலமாயருமறையுமறியவொண்ணா, மலைமகளையொருபாகம்வைத்துறைவோனடிவணங்கின்மாசின்றாகி, நிலவுகின்றதனிவீட்டினீங்காமலென்றுநிலவுவாரால். ௭

யானுமருமறைக்கிழவன்றானுமெரியுமிழ்ந்திலங்குகுலிசிதானும், பானிலவுகொப்பளிக்கும்பனிமதியம்படர்பவளச்சடையிற்சூடு, மானுயர்த்தோனடிமலரினறியமலர்பலவேந்தியரிச்சித்தன்றோ, வானுலகினிற்பதவியடைந்துமகிழ்ந்தென்றும்வாழ்கின்றேமால். ௮

ஆங்கவருமிலிங்கத்திலரிச்சனைசெய்துறைகின்றாரவரையாரோ, தீங்கிழைக்கும்வலியுடையார்நீவண்ணனடிசிந்தைசெய்யா

வண்ணம், வீங்கியுறைமாயைபலவியற்றியேவெள்ளிமலை தன்னி ன்மேவும், பூங்குழலாள்பங்கனேயவர்க்கொல்லுமாறினியாம்புரி யல்வேண்டும். கசு

என்றுமறைநெறியகன்ற நூலினைநன்கியம்பியொருபுருட ன்றன்னை, யன்றினிதிற்படைத்தவனுக்கறிவித்துமுப்புரத்தின மர்ந்தோர்தம்மாற், சென்றுரைத்துக்கறைமிடற்றோனடிபரவா வண்ணஞ்செய்தியென்ன, நன்றெனவாங்கவனும்போய்மற்றவ ர்க்குரைறபதியினண்ணினனே. க0

நண்ணியவனிறைமலர்த்தாளிணைவுருவகைசெய்யநாம்பிற் கோடி, பண்ணிசைக்குநாரதனுமபசுந்துளவோனேவலினுற்பட ர்ந்தாங்கன்னோர், வண்ணமலர்க்கருங்கூந்தன்மனைவியர்தங்கற் பகன்றுமனங்காவாம, லெண்ணிறந்தவாடவரோடின்புற்றுக் கரந்தொழுகவியற்றினனே. கக

அல்லவையாங்கவர்புரிதலுக்கிமறைக்கிழவனுடுமெளிக ள்பாடு, மல்லலந்தார்வாசவனைமுதலாயதேவரொல்லாமருங்கிற் சூழச், செல்லலையமணிமேனிச்செங்கண்மால்சிவலோகந்தன் னிலெய்திக், கல்லனையதிணிதடந்தோட்காமாரிகதிர்செய்மணி க்கழலிற்றாழ்ந்தான். க௨

தாழ்ந்துமறையொருநான்குங்காணுததனிமுதலேயருணீ செய்ய, வாழ்ந்தனம்யாமிதுநாளேவல்லசுரர்கொடுமையினைழந் திடலால்மாழ்கி, வீழ்ந்தனர்கடுயர்க்கடலுள்வெவ்வசுரர்தமை வினைவினெய்திமாய்த்திங், காழ்ந்தவிடாகெடுத்தியெனமாயன் முதற்றேவரொல்லாமறைந்தாரன்றே. கங

உரைத்திடலுமாங்கவர்தமுள்ளத்தையறநெறியினுெழுகா வண்ணந், திரித்ததுவுமவர்மனைவிமாருளத்தைக்கற்பினீற்றீர்வி த்தவாறும், பொருக்கெனவாங்கறிந்தனரேஞ்சற்கவெனவிறை

வன்புகலுமேல்லைச், செருக்குவிழிமலைமடந்தையீசனுடுமிது மகிழ்ந்துசெப்பினளால். ௧௪

தண்டையொடுபொற்சதங்கைத்தாமரைச்சிறடியினைத்ததும்பச்சோதிக், குண்டலங்கடோளினையிற்புரளமகிழ்ந்தாடுகின்றகுமரன்றன்னைக், கண்டிடுதியெனவுமையாள்கையுறையுங்கமலத்தாலுரைத்தலோடு, மண்டர்தொழவுறையுமிறையவனையெடுத்துச்சிமோந்தன்புற்றுனல். ௧௫

ஆங்கவனைநோக்கியின்னுமாடுகெனவுரைத்தவன்றனுடல்நோக்கிக், கோங்கரும்பையழகழித்தகுவிமுலையாளொடுமகிழ்ந்துகொடிகளாடத், தீங்கதிர்செய்மணிகோடிவிளிம்படுத்துவெயில்மட்கத்திகழ்ந்துதோன்றி, யோங்கியபொற்கோயிலுட்போயொளிர்மதியமுடித்தபிரானுறைந்தானன்றே. ௧௬

உறைந்திடலுங்குறையுரைப்பான்செவ்வியினியெக்காலமுறுங்கொலென்று, கறங்குபோலுளஞ்சுழன்றுமுறையிடலும்வாயிலுறைகடுங்கட்பூதந், திறங்கொடன்கைத்தண்டத்தாற்றேந்துளவோன்முதற்றேவர்மௌலிசிந்த, வறைந்தறைந்துதெழித்திடலுமந்தோவென்செய்வதெனவகன்றுபோனர். ௧௭

அகன்றுபோயஞ்செழுத்தைமனந்துணருந்தேவர்செய்கையனைத்துமோர்ந்து, திகழ்ந்திடுநந்தியைநோக்கித்தேர்வில்லோடோரம்புசெய்வீரென்று, புகன்றிடுவாயெனவீசன்புகன்றிடலும்பத்தேளிர்மருங்கினேகி, மகிழ்ந்திடுவான்மற்றவ்வாறுரைத்திடலுமவரியற்றுமாறுசெய்தார். ௧௮

திரிபுரத்தோற்றமுரைத்தவத்தியாய
முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௧௨௬.

எழுபதாவது
திரிபுரமெரித்த வத்தியாயம்.

———※———

இரவிவலப்பா லுருளாவிலங்குகதிர்மதியிடப்பாலுருளியாகப்
பருவமோராறுமவைக்கோரமாவுயர்ந்தோங்கும்பரந்தவாணம்
பொருவருமேற்றலையாகப்போகுயருமுதையவரைமுன்னதாகக்
குருமணிக்கோட்டத்தவரைபின்னுகக்கலைகோக்குமாணியாக. க

காட்டையொடுகணநுகமாலவமீடாதண்டமாக்கற்றோர்நா
ளும், வேட்டிடுநற்றருமமொடுவெறுக்கையெழிற்றண்டமாவே
ழ்வியாவு, நாட்டியவத்தண்டத்துக்காதாரமாகவொருநான்குபா
லு, மீட்டியபேர்வலியுடையவைம்பூதமெப்பாலுமேந்திநிற்க. உ

நிறைந்துறையிந்தியங்களெல்லாமாணியாசிகழ்த்துபுராண
ங்கள்மற்றைத், திறம்பவிலாப்பன்னூல்கள்படமாகத்திரையுகளு
ம்பானவையெல்லாஞ், சிறந்தடுத்தமேல்விரியாவளியேழுஞ்சோபா
ணமாகச்செவ்வே,யுறைந்திடுலோகாலோகவோங்கலொருகாலுதி
க்கும்படியதாக. ௩

குலவரைகளனைத்துமணிவிதானமாக்கொடுஞ்சியண்டமுக
டதாக, நிலவுமிடைவெளியிருக்குந்தட்டாகத்தேக்கனைநீள்சந்தி
யாக, மலைவின்றுமத்தியொளியாகமிகச்செலுஞ்சிலவுவருடமாக,
விலங்கியவாலுளைப்புரவிமறையாக வொருபெருந்தேரியற்றினு
ரே. ௪

வீசுவளிதூவலாமதியளகர்வாய்விளங்குகனலதாக, மூசிய
ளிதுனைதந்தாடமுகைவெடித்ததுளவணிமால்கணையதாக, யோ
சனைக்குமப்பாலுமொலிக்குமணிவாணியாவுடன்றுசிறும், வாசுகி
நாணுகவொளிர்மணிக்கோட்டுவடவரைவில்லாகச்செய்தார். ௫

கொவ்வையிதழ்வரிநெடுங்கணிசைவாணியுவளகமாக்குலவு
ஞ்செந்நாத், தெய்வநாண்மலர்க்கிழவன்றிகழ்குடிலைமுட்கோ
லாச்செங்கைபற்றி, நவ்விவிழியாள்பங்கன்முன்னேகித்தேரும்
வில்லுநஞ்சாரம்புந், செவ்விதிற்செய்தேமென்னத்தேவரொடு
மடிபணிந்துசெப்பினரால். ௬

சொன்னவைகேட்டுளமகிழ்ந்துநடந்தேரில்மணிசுழிக்குங்
கங்கையாதி, மன்னிடுமாநதிமகளிர்மணிக்கவரியெடுத்தெறியவ
ண்டுகோடி, துன்னுகுழலரம்பையர்கணடித்திடமாகதர்யாருந்து
திப்பவாசக், கன்னிமலர்க்கொன்றையந்தாரிறையவனேறலும்பு
ரவிகவிழ்ந்தவன்றே. ௭

ஆங்கதுகண்டைங்கரனைப்பூசைசெய்யாதொழிந்தனமற்ற
தறிந்து, திங்கடைந்துதனைவெண்ணணித்தேமலர்தூய்நறுங்
கனிகள்சிறப்பினல்கி, யோங்குறுவிண்ணவர்களெல்லாமுவந்து
மலர்ப்பதம்வணங்கவுமையாள்பங்கன், வாங்குபுகையாற்றழுவி
யுச்சிமோந்திடவவனுமகிழ்ந்தானன்றே. ௮

அடல்விடையினந்தியும்வான்முகிலிலமராருக்கிறையுமழல்
வாய்க்கக்கு, மிடல்கெழுவேலவன்களிற்றின்மீதுமந்தவேழமுக
னுமீதுங், கடுவழியுழவிலேவேல்வீரனுநூற்கணங்களொடுங்க
ளிகோர்செவ்வா, யிடுகுமிடையுமையானைக்குமங்கிருந்திடத்தேரினு
றையிறையவர்சூழ்ந்தார். ௯

உரைத்தவர்களன்றிமிகுதேவர்களுங்கணங்களுமற்றொன்
றின்மேலும், விருப்பிலாமுனிவர்களும்புடைசூழவிணாக்கமலப்
பொகுட்டின்மீதி, லருத்தியானுறையுமயன்சாரதியாய்த்தேர்க
டவுங்காலையம்பொற், பொருப்புவில்லோனயன்முதலாந்தேவர்
களைநோக்கியின்னபுகன்றானன்றே. ௧௦

உலகமெலாம்பசுவாகுழுணர்வுறினுமொருவனேபதியிவ்வா
ற்றாற், கொலைகெழுவாளவுணருயிற்கோறுநாமெனவிறைவன்
கூறலோடும், பலர்புகழுமிமையவர் தாம்பசுவென்னுந்திறநாடிப்
பதைப்பநீவி, ரலைவொழிமின்பசுத்தன்மையகலுமுயர்பாசுபத
மாற்றினென்றான். கக

என்றருளியெயில்மூன்றினிகலவுணர்யாவரையுமெளிதின்
மாய்த்து,வென்றிகொளும்போராற்றலுடையபிரானிவ்வண்ணம்
விளைத்துப்போர்மே, னின்றதொருலீலையெனநெடுவிசும்பினு
றைதேவர்சிகழ்த்தசிற்க, வின்றளிர்ப்பூங்கடுக்கையொடுமிளமதி
யும்புனைந்தவிறையேகினனே. கஉ

எய்தியதாணுவைநோக்கிமலரவனுயிரம்பருவத்தீற்றில்வந்
து, மைதவழுமசுரர்புரங்கூடினவானீங்குழுனமலர்க்கைவாளி,
யையபுட்பயோகத்தின் விடுத்தியெனவண்ணல்நகைமுகிழ்த்து
நோக்க, வெய்யவழல்வாய்மடுத்துப்புரமூன்றுசாம்பராய்வீழ்ந்த
வன்றே. கங

ஆங்கதுகண்டமரரொலாமாடினர்பாடினரரியமறைகளோ
தி, யோங்குறுமாமுனிவரொலாம்பணிந்தனர்யாழூர்திவிரல்கவர்
ந்துகீதம், பாங்குறுவிஞ்சையர்பாடப்பட்டமுலைகள்பரித்தபனை
ப்புநோக்கி, யேங்குமிடைதளர்ந்தொழியவரம்பையர்களெம்மரு
ங்குமாடினரோ. கச

இவைகண்டுகணையாகுழுகுந்தனும்வாயுவுமதியுமனலுமெ
ம்மை, நவைகொண்டார்புரத்தேவுகெனவீர்ந்துசொலவீசன்வி
டுப்பநண்ணி, யவையுண்டவழலைமிகவெழமூட்டிமீண்டுமலரடி
யிற்றாழத், தவர்வென்றசெங்கனிவாய்பங்கனுநல்லருள்கூர்ந்த
துலங்கினின்றான். கரு

னின்றவிறைவனைநோக்கி நெறித்தமலர்த்துளவணியு நேமி
யோனுந், துன்றுமலர்வட்டவணைப்பொகுட்டுறையுந்தூயமறை
க்கிழவன்றானும், வென்றிதிகழ்குலிசமுதற்றேவர்களுமுனிவர்
களும்விருப்பினோடு, மன்றல்கமழ்துணைமலர்த்தாண்வீழ்ந்துவீ
ழ்ந்திறைஞ்சிமிகவழுத்தினரே. கசு

வேறு.

ஒன்றாய்ப்பலவாய்ச்சின்மயமாயுணர் தற்கரியபரம்பொருளாய்
மன்றமறையின்முடிமீதிலிருந்துமந்தமறையினு
லென்றுமறியாத்தனிமுதலாயடியார்க்கெளியனாகியுறை
துன்றுகதிர்கான்மதிபுனைந்தோன்றனின்னைத்தொழுதேமே.

எரிபொற்குடுமியிமையவரையீன்றவுமையாளொருபாகம்
விளைவிற்றிகழுந்தனிமுதலேவிமலாவிரிவெண்டிரைவீசிக்
கரைகொன்றிரங்குகடன்முகட்டிலெழுந்தகரியவிடமருந்தி
பரிவின்றுகவெமைப்புரந்தபரமாநின்னைத்தொழுதேமே. கஅ

பருதியதனுள்விரிவெயிலாய்மதியினிலவாய்ப்பனிவிசும்பு
ளொருவாவொளியாய்வளியதனுளூறாய்க்கனலுளுருவமாய்த் [ய்
திரைசேர்புனலுளுறுசுவையாய்த் திண்மாநிலத்தினுறைமணமா
மருவியுறையுமணிமிடற்றுவரதாநின்னைத்தொழுதேமே. க௯

அடியாருள்ளத்தலர்கின்றவந்தண்கமலநறும்பொகுட்டி
னடுவேநலவாலளவாகியுறைந்துநஞ்சிற்கொடியவா
மிடரோசெய்யுமிருவினைகளிடருற்றகலவருள்புரியு
மடல்வாய்விரிந்தகொன்றையந்தார்வரதாநின்னைத்தொழுதேமே

அறையுமான்மதத்துவத்துக்கப்பாலாகியென்னாளு
முறையும்வித்தியாதத்துவமாயிலிங்கமாகியுமைப்பரிதாங் [ய்
குறைவின்றாயவிலிங்கமாய்க் கோதொன்றில்லாப்பரம்பொருளா
விறல்சேர்மழுவாட்படையேந்தும்விமலாநின்னைத்தொழுதேமே

அகரவுகரமகரவிந்துநாதமாகியமர்ந்துறைந்து
திகழுங்குடிலைவடிவாகிச்செய்யகமலத்தாட்டுணைகள்
புகழுமடியார்க்கருட்கனியாய்ப்பொருதார்புரங்களொருமூன்று
நகையாலெரித்தின்றெமைப்புரந்தசம்பாநின்னைத்தொழுதேமே

காலின்றாகிநடந்துமுறுகையின்றாகிக்கவர்ந்துமலர்
போலும்விழியின்றாகியரும்பொருள்களனைத்துங்கண்டுமிக
வேலுஞ்செவியின்றாய்க்கேட்டும்வாயின்றாகியியம்பியுஞ்சீர்
சாலவுறையுந்தனிச்சுடரோதலைவாநின்னைத்தொழுதேமே. உ௩

சித்தாயசித்தாய்சின்மயமாய்த்தேடற்கரியபொருளாகி
யத்தாவருளாயெனவழுத்தியலர்ந்தகமலத்தாட்டுணையிற் [யு
ஞெருத்தாய்மலர்தூய்த்தொழில்வினையுந்துரிசற்றொழிய வருள்புரி
முத்தாமுகிழ்ந்தமுலைபாகாமுதல்வாநின்னைத்தொழுதேமே. உச

என்றுதொழுதுவழுத்துவோர்தம்மைநோக்கியிவையிந்தவா
மன்றவுரைப்பிறெனலோடும்வள்ளனினதுதாண்மலரி
லொன்றுமன்பேயெமதுளத்திலொருவாதிருக்கவருளென்னக்
குன்றவரிவிற்குழைத்தவரன்றந்தேமென்னக்கூறினன். உரு

பின்னரயனென்றலையொன்றையறுத்துப்பெரிதாயுளத்தி டையிற், றுன்னுமாயைதவிர்த்தருளுந்தோன்றினதுசுடர்ம ணித்தேர், மன்னுபாகனாகியென்றுமுறையவருள்வாயெனவணங்கப், பொன்னஞ்சடைதாழ்மணிமிடற்றுப் புத்தேளவ்வாறரு ள்செய்தான் உசு

ஆழியேந்துமாயனுமுன்னகனீர்சூழவிருநிலத்தை
யூழியகழ்ந்துகாணுததுணைத்தாளுவப்பாலுறநோக்கி
வேழமுரித்தோயான்விடையாய்த்தாங்கவருள்வாயெனவிளம்ப
மாழைமடமானேக்கிபங்கன்மகிழ்வோடவ்வாறருள்செய்தான்,

இவ்வாறிவர்கட்மக்கருளியெறிநீர்மந்தாகினியொழுகுஞ்
செவ்வானனையபுரிசடையோன்றேமென்குதலையுமையோடும்
வெவ்வாய்மழுவாட்படையேந்துகணங்களோடும்வேறுலக
மொவ்வாச்சிவலோகத்தினிடைமறைந்துபோகியுற்றனனால்.

உரைத்தவிந்தக்காதையினைச்கேட்டுச்சமரிலுடன்றேகில்
விருப்பார்விசயமடைந்திடுவார்விளங்கியுறையுந்தென்புலத்தோ
கருத்தியோடுமூட்டுகின்றகாலையுரைக்கிலவாவிரிந்து [ர்க்
மருக்கால்கமலத்தோனுறையும்பதியிறுளும்வைகுவரால். உகூ

திரிபுரமெரித்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம். கக௫௫.

எழுபத்தொன்றாவது
பிரமாசிவபூசைமகிமையுரைத்த
வத்தியாயம்.

---*---

அன்னமுயர்த்தமறைக்கிழவனுசிறேவர்தமைநோக்கி
மன்னுமிலிங்கபூசையினைமறந்திவ்வசுரர்மாய்ந்தொழிந்தார்
பொன்னஞ்சடைதாழண்ணலடிபூசைபுரியுமவரன்றோ
வின்னல்கடிவாரொன்றவருக்கிவ்வாறறியவியம்பிறேன். க

பிரமாவிராணுயாமத்தைதலைபத்துமுறைசெய்ததன்பின்ன
ரோர்சார்குடிலேதனையத்துமுறைநன்கோதியெப்பொழுது
மசரரின்றபூதங்கட்மமைத்தூய்மைசெய்ததன்பி
னேறாவயானபிராணன்கட்மமையடவிற்செறிப்பித்தே. உ

பின்னருறையிந்தியங்களொடுபிறங்கும்புத்திதத்துவத்தை,
மன்னுமின்றவகங்காரமெனுந்தத்துவத்தைமனத்தோடு, கொன்

னேயியலுமுக்குணத்தைக்குலவாவுறைபுற்கலன்றன்னே, மூன்
னித்துய்மைசெய்துதனைமூவாவீசனெனநினைந்தே. ௩

பால்வெண்ணீறுமெய்முழுதும்பூசியீசன்பதத்துணையிற்
சாலப்பூசைசெய்வதுவேசாற்றுபாசுபதவிரத
மாலோடியானுமிவ்வாறுமலர்தூய்வணங்கியிலிங்கத்தி
னீலமிடற்றுக்கண்ணுதலைநெஞ்சங்குளிர்ப்பக்கண்டேமால். ௪

இறையோன்றன்னைபூசைசெய்யாதவரோகுருடர்செவிடொன்று
குறையுஞ்சிலையிலோரிலிங்கமமைத்துத்தானன்குறவணங்கி [ங்
நறையாரிதழித்தார்புனைந்தநம்பன்றன்னையிலிங்கத்திற் [ன்
குறைவின்றாகவிவ்வர்றே கோங்கார்மலர்தூய்த்தொழுகென்று

அதுகேட்டளிகள்மூசநறும்மென்முகைவிண்டலராத
தறைநாண்மலர்த்தார்வாசவனைமுதலாந்தேவர்தகைசான்ற
விதிதேர்தெய்வத்தச்சனைக்கூயெமக்குவிளங்குசிவலிங்க [ன்
மதியால்வகுத்துக்கொணர்தியென வவனும்வகுக்கத்துடங்கினு

பிரமாசிவபூசைமகிமையுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௧௬௧.

எழுபத்திரண்டாவது
விசுவகன்மாசிவலிங்கமியற்றின வத்தியாயம்.

வாசவன்றனக்குப்பரமராகத்தும்வடதிசையுறைகுபேரனுக்
குத், தேசுகண்படுக்கும்பொன்னிலும்வெள்ளியால் விசுவதேவ
ர்க்குந்திகழு, மாசறுகஞ்சந்தனில்வசுக்களுக்குமாரகூடத்தில்வா
யுவுக்கு, மேசலில்வருணன்றனக்கொளிததும்புமீர்ங்கதிருமிழ்ப
டிகத்தும். ௧

செம்பினிற்கதிரோர்பன்னிருவருக்குந்திகழொளிமுத்தினு ற்றிரைசெ, யம்புராசியினூடெழுந்தவெண்மதிக்கு மசுரர்கடமக் கிரும்பினினும், வெம்புறுநாகங்களுக்கெலாம்பவளந்தன்னினும் விரிதருமண்ணி. லும்பர்வாழ்தெய்வவயித்தியர்தமக்குமுனைத்திடு நிருதிச்சுமரத்தும். ௨

அரக்கருக்கொளிருமூன்றுலோகத்துமறைந்திடுயகர்க்கெ ல்லா, முரைத்திடுபஞ்சலோகத்துமற்றைக்கன்னியரொழுவர்க்கு மொலித்துத், திரைத்தெரிந்திடநுண்மணலினுங்கூற்றுக்கீர்ங்கதி ர்திகழ்மரகதத்து, மருக்கமழ்தழியுருத்திரர்தமக்குமாசிலாவயங் குவெண்ணீற்றும். ௩

ஐயசெங்கமலத்தவட்குநெய்யினிலுமுனிவருக்கமர்சிலையி னிலும், மையுறுகூந்தல்வாணிக்குமிளிருமாணிக்கமணியினும் போற்று, மையுநுண்மருங்குற்றுர்க்கையாமணங்குதனக்கொளிர் பொன்னினுநவையில், செய்யவாமறைக்குஞ்சைவமந்திரங்கட்ம க்குநற்சிலையினுந்திகழ. ௪

இழைத்துமான்மறிசேர்செங்கையாலுறையுமிலிங்கங்களி யாவையுமேந்திப், பழுத்தநல்லறிவாலுயர்ந்திடுதெய்வத்தச்சனை ன்களித்தலும்பரிவாங், கொழித்துநல்லுவகையோங்கமந்திரத்தா லொண்மலர்மாலைதேன்றுளிக்கும், விழுக்கதிர்மவுலியிந்திரன்மு தலயாவரும்விழைவொடுகொண்டார். ௫

ஒளிகிளரிரத்தினவிலிங்கத்தினுளுமொண்மலர்தூவிமேன்கே த்தி, லளிமுரல்கமலத்தணங்குநீங்காளாலமைந்திடுலோகலிங்கத் தைத்,தெளிவுறவணங்கிற்றருமம்வந்தெய்துஞ்செய்யவாந்தரவி ங்கத்தில், விளைதருபசுந்தேன்மலர்பலதூவில்விளிந்திடாச்செல் வம்வந்துறுமால். ௬

மண்ணினிற்செய்தவிலிங்கத்தைவணங்கில்வேண்டினயா வையும்வருமால், நண்ணுறுசிலையிற்செய்தலிங்கத்தினவையறு பூசைநன்கியற்றி, லெண்ணுதற்கரியசித்திகளியாவுமெய்திடுமெ ன்றுரைப்பதுதான், கண்ணுதற்சாமிகழன்மலர்தூவிற்கைப்பட்டா தகல்வதுமுளதோ. எ

மலரவனிலிங்கமூலத்தினுறைவன்மாயவனடுவினிலமர்வ, னலைகடலெழுந்தவாலகாலத்தையமுதெனவருந்தியவண்ண, ற லையினிலுறைவன் சாற்றிலிங்கத்தைத் தாங்கியபீடத்தை யறிந் தோர், நிலவிடும்வேதரூபமாமுமையாள்வடிவெனநிகழ்த்துவா ன்றே. அ

இவ்வகையுறையுமிலிங்கத்தையேற்றலன்றியுமிறைவனது ருவஞ், செவ்விதாயியற்றிவணங்கலுமொன்றென்றுரைத்தலுஞ் சிறந்தநற்றவத்தோ, ருவ்வகையென்னவறிகலாதமலமாகியவி றைவனுக்குருவ், மெவ்வகையெய்திற்றென்னலுஞ்சூதமுனிவர னெடுத்தியம்பினரால். கூ

விசுவகன்மா சிவலிங்கமியற்றினவத்தியாய

முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௧எ௦.

எழுபத்துமூன்றாவது
சிவன்வடிவுரைத்தவத்தியாயம்

குடிலையினுருவமென்றுங்கோதில்ஞானத்தின்செய்ய
வடிவென்றுமுரைப்பரோரிற்சிவானந்தமயமதாகிக்
கடவுளன்குறையுமந்தக்கடவுளுக்குருவம்வந்து
மிடைதருகருமத்தாலுமிச்சையினாலுமேவும். க

அடைந்திடுமுருவமெவ்வாறெனிற்றலைசுவர்க்கமாகுஞ்
சுடர்ந்தவாகாயங்கொப்பூழாகும்வெஞ்சுடர்கண்மூன்றுந்
தடங்கொள்கண்ணாகுஞ்சாற்றுதிக்கெலாஞ்செவியதாகு
மிடைந்தபூங்கமலப்பொற்றாள்விரிந்தபாதாளமாகும். ௨

உடுக்கள்கொத்தணிந்தமுத்தமாலையாமுயர்ந்தவானத்
திடந்துறைதேவர்வீங்குடயங்களாகுவராலேற்றி
முடக்குவெண்டிரைகளோடையாமொளிர்விக்குஞானங்
கிடைத்திடுகாட்சியாகுங்கிளரொளிஞானமாகும். ௩

கருமுகிலேலழுங்குஞ்சியாகுமாற்கறங்குகாற்றே
விரைதருமூச்சாயிந்தவிளங்குருவுடையோன்றேவி
யுரைபிரகிருதியாகுமவனொளிர்முகத்தினின்று
மலாமலர்க்கடவுளோடுமறையவர்தோன்றினரால். ௪

திணிதடந்தோளிலிந்திரனுபேந்திரனோடுஞ்செம்பொ
னணிமுடியணிந்தகொற்றவரசர்வந்துதித்தார்பின்னர்
வணிகருருவினில்வந்துபிறந்தனர்மணிகள்சூழ்ந்த
துணிகதிர்க்கழற்காறன்னிற்பின்னவர்தோன்றினரால். ௫

இவ்வகையுருவவன்றனிச்சையாலெடுத்ததல்லா
லெவ்வஞ்செய்யுருவமன்றேன்றனக்கிலதாகுமேற்றச்
செவ்விதாயிறைவன்றாங்குஞ்சிலவுருவறியும்வண்ண
மிவ்வகையுரைப்பனென்னச்சூதமாமுனியுரைத்தான். ௬

சிவன்வடிவுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௧௭௬.

எழுபத்துநாலாவது
மூர்த்திபேதமுரைத்த
வத்தியாயம்.

---*---

விரிவுற்றதருமந்தன்னில்மேலதாந்தவமற்றுங்கு
மருவுற்றதவத்தின்மேலாமாசின்மந்திரஞ்செபித்த
லுரைபெற்றசெபத்தின்மேலாந்தியானமற்றதனுளொன்றாய்த்
திரிவற்றபொருளையென்றுஞ்சிந்தையுட்காணலாமால். க

சிந்தையிலுயர்ந்தோர்தம்மாற்கண்டிட்டுதிகழ்ந்துதோன்று
நந்தலிலொளியதாகுமந்தரவிலங்கநன்காய்க்
கொந்துலாமலர்கவேிக்குழகனேயருளாயென்று
வந்தனைசெயுமிலிங்கம்வாயிகலிலிங்கமென்பார். உ

வேறு.

கண்ணுதலைத்தேவியொடெங்கந்தனொடெங்கற்றை
வெண்ணிலவுதோயவுயர்கோயிலின்விளங்க
நண்ணுதல்புரிந்தவர்கள்கற்பகநன்னாட்டில்
விண்ணவர்க்குவேந்தனெனமேவியுறைவாரே. ங

வெய்யதிரிசூலம்விழைவோடினிதினேந்துங்
கைகளொருநான்குமலர்கண்களொருமூன்றுஞ்
செய்யமலர்வென்றவொருதாளுமுறுதேவை
யொய்யெனவமைத்தவர்கள்முத்தியுறுவாரே. ச

திங்கிளுயர்கொம்புதிகழ்சென்னிகளிரண்டும்
வீங்குபுயமேழுமெழில்மேவுபதமூன்று
மாங்குடையவெச்சமுதற்றேவியையமைத்தோர்
வாங்குதிரைமண்புரந்துவானுலகில்வாழ்வார். ரு

வெள்ளிவிடைமீதிலுமையோடுமெதிருடும்
வள்ளலைவகுத்துவழிபாடுபுரிவோர்க
ளுள்ளுபரிமாமகமொராயிரமுஞற்றிப்
பொள்ளெனவுறுங்கதிபொருந்துவர்களன்றே. ௬

நந்தியுடனெக்கணமுநன்குறவணங்க
வந்திநிறவண்ணனையமைத்தவர்கள்யாரும்
பந்தமில்கணங்கள்பதியாகியொளிபம்பிச்
சிந்துயர்விமானமிசைதீதறவிருப்பார். ௭

தூயதுடிதியிருகைதோன்றநனிதூக்குஞ்
சேயமலர்த்தாண்மிசையோரங்கைசெலவிட்டே
யேயவொருகையபையமீந்திடநடிக்கு
நாயகனைநாட்டுபலன்யாவர்நவில்கிற்பார். ௮

கண்ணகன்விசும்புதிகழ்காவலன்வியக்கு
மெண்ணில்மகந்தானமிவைசெய்துநிறைபோற்றும்
புண்ணியநதித்துறைபடிந்தனர்பொருந்த
நண்ணுபலன்றன்னிலொருகோடிபலனண்ணு. ௯

அன்னமுயர்த்தோனுறையுங்காலமழியாது
மன்னுசிவலோகமிசைமன்னிமனுவாகிப்
பின்னருலகத்தினிடைவந்துபிறைசூடு
முன்னவனடிக்கமலமுத்தியுறுவாரே ௧௦

புண்டரிகநாணவெழில்பூத்தகரநான்கின்
வெண்டலையோர்கையின்மிசையேந்திவிடங்காலு
மண்டசிலவாளபவசைத்தவனைமண்மேற்
கண்டுதொழவைத்தவர்கள்கைப்படுவர்முத்தி ௧௧

காருருவுபெற்றகலைத்தோல்கவினவீக்கிப்
போர்கெழுமடங்கலுரிபொற்புயமணிந்தே
யேர்திகழுமக்குவடமீரமதிசூடிச்
சோரிபொழிதண்டுமுடைதொக்கதலையேந்தி. கஉ

பூதமொடுகெண்ணழல்புகைந்திடநடிக்குங்
கோதிலிறைதன்னையுயர்கோயிலிடைவைத்தோர்
மீதுயரும்வெள்ளிவரைமேவியுறுஞான
மேதமிலதாகவுணர்ந்தெய்துவர்கண்முத்தி. கங

சாலுமபையத்திறனொடுசொற்றுவரதந்தீச்
சூலமலர்தாமரைதொடிக்கைதிகழ்வுற்ற
கோலவலைபாகனையொர்கோயிலிடைவைத்தோ
ராலவிடமுண்டவிறையம்பொனடிசேர்வார். கச

நெற்றியினிற்செவ்வணிடுநீசர்தலைசூடி
மற்றையயனுசமொடுமாயனுடல்கையிற்
பற்றியிடுகொடுபடர்நீறணிசெய்வோனை
யுற்றுறையவைத்தவர்களொண்கயிலைசேர்வார். கரு

ஆலவிடமாமெனவயிர்த்தமரரோடச்
சாலவமர்கோலியசலந்தரனைத்திவாய்
கால்பருதியாலுயிர்கடிந்தவிறைதன்னை
யேலுறவமைத்தவரிருங்கயிலைசேர்வார். கசு

ஏர்தரங்கும்பன்வெரின்மீதுமெரிசூலக்
கூர்நுனையின்மேலுமுறநின்றுதொழுகூற்றை
யார்வமுறநோக்கிநெடுவான்முகடளக்குஞ்
சார்வரையயந்தவிளங்கன்னியையனைத்தே. கஎ

தோன்றுமுதறன்னைமணிசூழ்சுடரொறிக்கத்
தான்றனிவிளங்குமொருகோயிலுடன்சார
வான்றமறைபோற்றிடவமைத்தவர்களெங்குஞ்
சான்றெனவமர்ந்தவிறைதாணிழலிற்சார்வார். ௧௮

மூவெயிலுமாரழலின்மூழ்கவுல்கின்ற
தேவன்விடுதேரின்மிசைநின்றவொருதேவை
மேவவறவமைத்தவர்களொண்ணுதலோர்பாகன்
றூவிலுருவெய்தியபின்முத்திநெறிசார்வார். ௧௯

மின்னிலகுவேலவுறுமேழமுகன்வெய்யோன்
கன்னியர்களோடெழுவர்காளியிவர்தம்மை
யின்னெறில்கனிந்திடுமிடச்சுறங்கில்வைத்தோன்
மன்னிடவமைத்தவர்கள்மாசினெறிசார்வார். உ௦

அன்னமொடுகேழலுருவாகியலரோனு
மன்னுதிறல்மாயவனும்வானுலகுமண்ணுந்
துன்னுமுடியோடடிகாணகிலர்துளங்கி
யென்னையருள்செய்கெனவிறைஞ்சினர்கணிறப். உ௧

தோன்றுமிறைதன்னையொரிலிங்கமதிற்றோயி
லான்றமறைசொன்னபடியன்பினினமைத்தே
தேன்றழைபசும்பொனிணர்சிந்திவழிபட்டோர்
கான்றதழற்சூலியடிக்கஞ்சமலர்சேர்வார். உ௨

வைநுனையசூலவடிகெக்கடவுடன்னைச்
செந்திறமணிச்சினகரத்தினிடைமேவக்
கொய்நனையமென்மலர்கள்கொண்டுதொழுகிற்போர்
மைதிறமிடற்றிறைவன்வாழுலகுசேர்வார். உ௩

ஆசின்மறையுட்பொருளையன்பினர்தமக்கு
மாசறவுணர்த்துமுதல்வானவனைத்திங்கள்
கூசுமொளிமுத்திலகுகோயிலினுள்வைத்தோர்
ரேசறுநன்முத்திநெறியெய்துவர்களன்றே. உ௪

வேறு.

என்னலுமிலிங்கபேதமுமூர்த்திபேதமுமறிவினாலெமக்குச், சொன்னகேட்டுள்ளங்குளிர்ந்தனங்கீற்றுச் சுடர்மதியணிந்திடுந் தொல்லோன், மன்னிடக்கோயில்வகுத்தவரெய்துபேற்றினைவழங்கெனமறையோ, ரன்னமூர்தியைப்போற்சிவனடியுள்ளத்தமைத்தமர்குதனுமுரைத்தான். உ௫

மூர்த்திபேதமுரைத்தவத்தியாய
முற்றிற்று.
ஆக திருவிருத்தம். கஉ0க.

எழுபத்தைந்தாவது

சிவாலயமியற்றினோர்பேறுரைத்த வத்தியாயம்.

---*---

மந்தரமலைபோன்மேருமால்வரைபோன்மணிதிகழிமையவெற்பினைப்போற், சந்தனச்சாரன்மலயவெற்பினைப்போற்றகைபெறவுயர்மயேந்திரம்போற், சிந்துரக்களிறூர்கிடந்தமால்வரைபோற்சேணுயர்நீலவெற்பினைப்போ, லந்திநேர்வண்ணனமர்ந்திடக்கோயிலமைத்தவாருங்கதியடைவார். க

இவ்வகையியற்றப்பொருளிலாரொன்னிலீர்ந்திடுசெங்கலால்மண்ணாற்,செவ்விதினியற்றினோருநன்கியற்றமுயற்சிசெய்பவ

ர்களுஞ்சேரா, வெவ்வமுற்றிடுசோற்றினுக்கும்வந்தியற்றுப்வர்களுமிளந்தளிர்வென்ற, கொவ்வையங்கனிவாய்மலைமகள்பங்கன் கோடியர்கைலைசென்றடைவார். உ

காயமுற்றிகிரிக்கண்ணனன்கிறைஞ்சுங்கண்ணுதற்கட்வுளுற்றுறையுஞ், சேயுயிர்கோயிலலகிடுவோருந்தென்வரைச்சந்தனத்தேய்வை, யெய்வுறவினிதின்மெழுக்கெறிந்திடுவோர்தாமுநான்மறையெடுத்திசைத்த, வாயிரஞ்சாந்திராயணம்புரிந்தபலத்தினையடைந்திடுவாரால். ௩

கொன்றைவேணியன்றன்சயம்புவாமிலிங்கம் வாணலிங்கங்குலவிடுதற், கொன்றனாயாருங்கூப்பிடுதூரத்தொருவனன்கியற்றியலிங்க,நன்றுறைதற்கோர்கூப்பிடுதூரத்திடையினன்குயிர்தணந்திடுவோர், சென்றடைந்திடுதற்கரியதாமுத்திவீட்டினிற்சேர்குவரன்றே. ௪

போற்றுதற்கருஞ்சீர்ப்பருவதந்தனிலும்பொருவில்கேதாரத்துமொன்று, மாற்றரும்பிரயாகைதன்னிலுமொன்றும்வயங்குசாலங்கக்ஷேத்திரத்தும்,கூற்றுவன்வணங்குசெச்சரந்தனிலுங்கொடிமதிற்கோகன்னந்தனிலு, நீற்றொளிபழுத்தநெற்றியோன்றுன்றிநிலவிசுசெச்சரந்தனிலும். ௫

ஆட்கேச்சுரத்துமிரணியகருப்பத்திடையினுமடியவரொல்லா, நாடொறும்போற்றவமருநந்தீசந்தன்னிலுமவிமுத்தந்தனிலுந், தோட்டணிகுழையோனுறைதருவாரணசியினுமுயிரினைத்துறந்தோர், கூட்டருமுத்திவீட்டினிலென்றுங்குலவிடவமர்ந்தினிதிருப்பார். ௬

கண்ணுதன்மூர்த்தியுறைதருநகரிற்கனலிலக்கண்ணுதலோனைத், தண்ணமலர்தூவிதம்முடம்பினையத்தழலிடையிட்டுயிர்தனை

ந்தோ, ருண்ணுதறவிர்ந்தாங்குயிரினைத்தணந்தோ ரோங்கிரும
றையெடுத்துரைக்கு, மெண்ணுதற்கரியபேரின்பமுத்திவீட்டினி
லெய்துவரன்றே. எ

இறைவனாலயத்தைக்காண்டலினெய்திவிருமட்டங்குயர்ப
லனெய்து, முறைதருமிலிங்கந்தனைத்தொழினதனின்மும்மடங்
காம்பலனுறுமாற், குறைவறப்பூசைசெய்திடலதனினான்மடங்
காம்பலன்கூடு, முறையினிலவிர்த்ததோடுயிர்தணப்பின் முத்தி
வீடெய்துவரன்றே. அ

ஆங்குளநதியில்வாவியிற்குளத்திற்கிணற்றினில்மூழ்கினோ
ரிதாந், தீங்குசெய்பிரமகத்தியுந்தீர்ந்துசிவகதியடைகுவரீச, னோ
ங்குறுவிலிங்கங்காலை சொலுச்சிமாலையங்குவப்புடன்வணங்கில்,
வீங்கியபாவமகறருமெச்சப்பலனுறும்விழைகதிதருமால். கூ

புகன்றிடுபஞ்சபருவத்தில்வணங்கிற்பொருந்துமூவைந்துநா
ட்செய்த, வகன்றிடாப்பாவமகன்றிடுந்திங்கட்பிறப்பினிலார்பு
னன்மூழ்கி, மகிழ்ந்துறத்தொழிலோர்திங்களிற்செய்தவல்வினை
யாவையுமாயுந், திகழ்ந்திடுமயனங்களிற்றொழுதோர்கள்சிவகதி
சேர்வதுதிண்ணம். ௰

சித்திரைத்திங்களைப்பசித்திங்களிரண்டினிற்றிரைப்புனல்
மூழ்கி, மைத்திருள்செறிந்தமலரணிகூந்தன் மலைமகளிடமருங்
கொளிக்கும், பைத்தபாம்பணிந்தவிறைவனதிலிங்கந்தனைத்தொ
ழிற்பாவகோடிகண்மற், றெத்துணையேனுமகன்றிடவீசனெய்
திவாழுலகினிலிருப்பார். கக

மட்கொடிபாகனாலயந்தன்னைவலமிட்டாகவேவருவோ,
ரடிக்கொருபுரவிமேதநன்கியற்று பேற்றினையடைகுவரறிவாற்,
றொடுத்திடுபனுவற்றொடையினாலேத்து கவினுருந்தொடுகடலெ

மூழ்ந்த, விடத்தினையருந்துமணிமிடற்றிறைவன்மேவியவுலகின்
வீற்றிருப்பார். ௬௨

ஆறிதழைம்பதிகழ்நணிவாய்த்தகமலத்தையருநவமணிகள்,
கூறுசெய்திடித்தபொடியினாலன்றி மாவினாற்குலவிடவெழுதி,
நீறணிந்தோனையுமையொடுமவற்றி னடுவினினிதாயிதழ்வீழ்ந்
து, நாறுநாண்மலர்தூய்த்தலையினால்வணங்கி நவையறவேத்து
தல்புரிவோர். ௬௩

ஈனமில்பிரமசரியநன்காற்றியில்லிடைவதிந்ததன்பின்னர்,
பான்மையால்வானப்பிரத்தனுயமர்ந்து பற்றறத்துறந்தெதியாகி,
மோனமாயுறைந்துமுடிவிலாதொன்று முதல்வனைக்கண்டுளமகி
ழ்ந்தோன், ருறாறுபலத்தையடைகுவனென்னச் சைவநூல்யா
வையுஞ்சாற்றும். ௬௪

சிவாலயமியற்றினோர்பேறுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௩௨௧௫.

எழுபத்தாறாவது
ஆசாரவிதியுரைத்தவத்தியாயம்.

---*---

வடித்துநீர்தன்னிற்சந்தனந்தேய்வைமணங்கமழ்ந்திட்டனி
ச்குழைத்துக், கடுத்திகழ்மிடற்றோனாலயந்தன்னைக்கையினான்
மெழுகிடவெண்டும், குடத்தினில்வடியாதெடுக்கிலுண்புழுக்கள்
கொலையுறுமாதலாற்பசிய, மடக்கொடிபாகன்கருமத்துக்கெடுக்
குதிரினைவடித்திடவேண்டும். ௧

இல்லுறைவோருக்கலகிடும்போதுமெழுக்கெறி காலையுமி
னிய, நல்லவாங்கனிகளரிந்திடும்போதுநல்லுணவட்டிடும்போது,

மொல்லெனவினையுநீர்கவர்போதுமுறுகொலை யெய்திடுமதனாற், சொல்லியவிவற்றிற்கொலைத்தொழிற்பாவந் துன்னிடாதியற்றிடவேண்டும். ௨

ஒருயிர்தன்னைக்கோறல்செய்தோர்களுயிரினையவ்வுயிரொய்திச், சோர்வுறக்கொல்லுமாதலாற்கோறலாதல்மற்றொழிந்திடவேண்டுந், தேரிடிற்சிவனாலயத்தினோர்புழுவாயினுமுயிர்செகுத்தவர்திரைசெய், வார்கடலுலகமுழுவதுஞ்செகுத்தபாவத்தையடைகுவரன்றே. ௩

நெறிசெலாநெறிசெல்பவர்களைவேந்தன்கோறலுமென்றுநீங்காத, மறையின்வாசகத்தால்வேள்வியிற்பசுவைக் கோறலுங்கோறன்மற்றதன்று, னிறைதருபிரமமுணர்ந்தவர்நெஞ்சினிகழ்ந்தவையாவையுஞ்செய்வர், குறைவிலையதனாலவர்க்கவர்தம்மையிகழ்ந்தவர்கொடுநரகடைவார். ௪

மகளிரைக்கோறலடாதுதொன்மறையின் வழியினினடந்திடாதொருவி, யிகழ்தருபாசண்டத்துறைவோர்கட்மையிருகண்ணினோக்கிற், பகலவன்றன்னைநோக்கிடவேண்டும்பகர்ந்தபாசண்டரையேனு, மகலராப்போக்கலன்றிவெங்கொலைசெய் திடுதனன்றன்றெனவறைவார். ௫

ஆசாரவிதியுரைத்தவத்தியாய முற்றிற்று,

ஆக திருவிருத்தம், ௧௨௨௦,

எழுபத்தேழாவது

பூசைபண்ணினவர் பேறுபெற்ற

வத்தியாயம்.

———*———

ர்னாலுமுனிவர்கறைமிடற்றிறைவனிணையடிபூசைசெ
ர, மன்னுறுபலத்தையுரைத்திடுகென்னமறையொருநா
வகுத்துச், சொன்னமாமுனிவன்சொன்னவாறெடுத்
முனிவனுமினிய, கன்னனேர்மொழியாள்பங்கனற்
ங்கழலிணைதொழுதுரைந்தனனால். க

னமிச்சிலோடுபூசித்தோர்பசாசுருவெய்துவரெரிநேர்
கோபத்தொடுபூசித்தோர்கீனிறத்தரக்கராகுவரா
ழுவநறலுண்பதற்குரியவல்லனவுண்டுபூசித்தோர்
யக்கராகிவானுலகின்மன்னியேயவைகுவரன்றே உ

தல்செய்வோர்பணிவரைப்பிறந்தபாசிழைபாகனைவழி
டுநல்புரிந்தோரண்ணல்வானுலகிலமர்செய்கந்திருவரா
வீடுறுசீர்த்திவிரும்பியேத்தினர்கணெறிமலர்கற்பகநாட்
டுறுமமரர்வணங்கிடவமர்ந்துவாசவனெனிவைகுவரால். ௩

ளிரைவேண்டிப்பூசைசெய்தோர்கள் மகியுடல்புகுந்து
த்தித், திகழ்தருமகளிருலகினிலென்றுஞ்சிந்தனைமகிழ
ப்பார், துகளறுகாயத்திரியினாற்பூசைபுரிந்தவர்தோடு
நு, நகுமலர்ப்பொகுட்டிறையுநான்முகத்தோனுலகி
எனிவாழ்குவரால். ௪

டிலையினாலுங்கோதறுபஞ்சப்பிரமத்தினாலுமுக்கண்ணனை
பூசைசெய்தவர்மாயனமர்தருமுலகின்வீற்றிருப்பா, சொ

டிவறவுள்ளந்தனைமிகத்திருத்தியோரிருநாழிகையேனு,முடியினு
ல்வணங்கிப்பூசைசெய்தோர்கள்முன்னருஞ்சிவனுலகடைவார்.

மணிமிடற்றிறையைத்தூயநீராட்டிவயங்குபொற்பீடத்தின்
மீதிற், பணிமொழியுமையாடன்னொடும்வைத்துப்பசிளந்தேன்
மலர்தூவி, யிணையிலாத்தூபதீபமுநல்கியிணையடித்தாமரைதொ
ழுதோர், புணையிலாப்பிறவிப்பெருங்கடனீந்திப்போகுயர்கயிலை
சென்றடைவார். சா

சிவபூசைபண்ணினவர்பேறுபெற்றவத்தியாய
முற்றிற்று.

ஆக திருவிருத்தம். கஉஉசா.

எழுபத்தெட்டாவது
தேவர்களுக்குப்பசுபாசநீங்கின
வத்தியாயம்.

என்னலுந்தேவரழிவிலாப்பாசுபதவிரதத்தினையியற்றி, ம
ன்னிப்பசுவின்றன்மையைநீக்கிமகிழ்ந்தவாறுரைத்தியென்றிய
ம்ப,வின்னல்போம்வண்ணஞ்சூதமாமுனிவனிருந்தமாமுனிவர
ர்க்கெல்லாம், பன்னகர்பரணனுரைத்திடுபாசுபதவிரதத்தினைப்ப
கர்ந்தான். க

நகுகதிர்முத்தும்வயிரமுமெறிக்குநவையறுமாணிக்கமணியு
ந், துகிரும்வெள்ளருவிகையரிக்கொண்டுசுழித்துவார்ந்தொழுகி
டுமொருபாள்,முகில்படிசாந்தின்முழுமுதல்பிடுங்கிமுத்துடைவெ
ண்மருப்புந்தி, யகின்முருடுருட்டியழிபசுந்தேறலாறலைத்தொழு
கிடுமொருபால். உ

பூவைகளிறைவனாகமம்புகலப்பொருந்தியமயிலினங்கேட்ப, வோவறமழலைக்கிள்ளைமற்றவத்தினுட்பொருளுணர்த்திடுமொருபாற், பாவடிச்சிறுகட்பனைச்கைவெங்கோட்டுப்படுமதஞ்செருக்குவெங்கரியுந், தாவில்வெஞ்சீற்றந்தரியுமாறின்றித்தகவுடன்றிரிதருமொருபால். ௩

இன்னபல்வளந்த கயிலைமால்வரையி லிடுகுநுண்ணிடைமலைவல்லி,மன்னியவிடப்பால்மணிமிடற்றிறைதன்மலர்ப்பதம்வணங்கிடவேண்டிப், பொன்னிதழ்க்கமலநான்முகனோடும்பொருவிலாவானவரோடுங், கன்னியந்துளவந்துயல்வருந்தடந்தோட்கதிர்மணிவண்ணனெய்தினனால். ௪

சென்றுபொற்குடுமிக்கோபுரங்கண்டுசெய்யதாமரைக்கரங்குவிப்பி,மன்றலங்குழலார்பாடலோடாடலறுதொளிவயிரம்வேய்ந்திமைக்கு,மின்றிகழ்வாயில்பத்தகன்றேகிவேத்திரக்கரநந்திதன்பாற், றுன்றியெம்வரவுசுடர்மதிக்கண்ணியிறையினுக்குரையெனச்சொன்னார். ௫

ஆங்கதுகேளாவரும்பறவெடுத்தவாயிதட்கொன்றையந்துடைய, ஓங்கியசடிலத்திறையவற்றொழுதங்கவர்வரவுரைத்தொளிர்தளிர்க்கை, மாங்குயில்பங்கனருளினால்வாயிற்புறத்துறைமாயவன்முதல, வோங்கியமௌலித்தேவரையெல்லாமுவந்திட்டிறைமுனம்விடுத்தான். ௬

எய்திமாகநாரோடின்னரம்புளர்ந்துநாரதனேழிசைபாட,வைத்தெழின்மேனியரம்பையராட வருமறையெடுத்தெடுத் திசைத்துக், கைதலைகூப்பிமுனிவர்கள்வணங்கக்கனகவாரியனைப்பொலிந்த, மைதவழ்நெடுங்கண்ணுமையவள்பங்கின்வள்ளலைக்கண்டனர்தொழுதார். ௭

தொழுதுநின்னடியேமுறுபசுபாசமகன்றிடச்சுடர்மதிக்க ண்ணி,மழுவனையருள்வாயென்றலுமாயன்முதலியதேவரைநோ க்கிக், குழைமுகந்தடவுமரிமதர்நெடுங்கட்கோற்றொடியுமையவ ள்பங்க, னுழுவலன்போடுமியற்றிடப்பாசுபதவிரதத்தினையுரைத் தான் அ

உரைத்தலும்பாசுபதவிரதத்தையுஞற்றிமான்முதலியதேவர் வருத்திடும்பசுபாசத்தினைநீங்கிமகிழ்ந்துறைந்திருந்தனரென்ன வருத்தியாற்றேவரியற்றியபாசுபதவிரதத்தினையடைவே விரித்தெமக்கறியச்சூதமாமுனிவ விளம்பெனக்கூறினர்முனிவர்

தேவர்களுக்குப்பசுபாசநீங்கின வத்தியாய
முற்றிற்று.
ஆக திருவிருத்தம். கஉ௩ரு.

எழுபத்தொன்பதாவது
பாசுபதவிரதமுரைத்த
வத்தியாயம்.

கூறலுமுன்னஞ்சனற்குமாரனுக்குக்கூறினனந்தியவ்வாறே, யாறறிமுனிவீர்காணுமக்கெல்லாமறைகுவன்கேண்மினென்றல ர்ந்த,நாறிதழ்க்கொன்றையணிந்தருணம்பனளிர்மலர்த்தாளிணை வணங்கி, மாறிலாக்கேள்விச்சூதமாமுனிவனறிவினுல்லுருத்து ளாவழங்கும். க

இவுளிநன்மேதமாயிரமியற்றும் பலத்தினையீந்திடு மொன் று,முவமையில்பாசுபதவிரதந்தானென்னிலிவ்வுலகினிற்றொன் ற,வெவைகொலோவதனுக்கிணையெனநோக்கியியம்பிடப்படுவ

ன்றொல்லை, நவையறுவேதமுழுவதுமுணர்ந்தநற்றவப்பெரியவ ராலும். உ

சித்திரைத்திங்கட்டன்னின்மிக்கொளிருந் திகழ்தருபடிகலிங் கத்தி, லத்தனையாவாகித்துநீராட்டியாயிதழ்ப்பொற்கமலத்தின், வைத்துநாண்மலர்தூயடிசினன்களித்து மணங்கமழ்தூப்தீபங்க ளன், முத்தனேயருளாயென்றெடுத்தேத்தி முடிமிசைக்கைமலர் கூப்பி. ௩

தென்றிசையதனினகிலையுமேல்பாற்றிகழ்மனசிலையையும் வட்பான், மன்றல்கான்மலையச்சந்தனத்தினையும்வழங்கரிதாரந் தைதக்கிழக்கு, நன்றதாய்பீடப்புறத்தினிலணைத்துநவையறவை த்தயர்பசும்பொற், குன்றவார்சிலைக்கையண்ணலையேத்திக்கோ துறவணங்கிடவேண்டும். ௪

வயங்குவைகாசித்திங்களில்விளங்கு வயிரலிங்கத்தினுமற் றை, யியங்கிடுமாணித்திங்களிலெழில்சேர்மரகதவிலிங்கத்தின்மு த்தின், வியன்கொளவிழைத்தவிலிங்கத்திலாடி யெனவிளம்பிடு திங்கடனினு, முயங்குமாவணியாந்திங்களிற்கதிர்கள் முளைத்திடு நீலவிலிங்கத்தும். ரு

ஈர்ங்கதிர்ப்பதுமாகலிங்கத்தி னியல்புரட்டாதிதன்னிலு மேர்,சேர்ந்தவைப்பசியாந்திங்களிற்கோமேதகவிலிங்கத்திலுந்தி கழு, வோர்ந்திடுபவளவிலிங்கத்திலுைச்சுங்கார்த்திகைத்திங்கட் ன்னிலுஞ்சீ, ரார்ந்திடுவயிரேரியவிலிங்கத்திறையுமார்கழித்திங்க டனிலும். ௬

சிறந்திடுபுட்பராகலிங்கத்திற் சேர்ந்திடுதைத்திங்கடனிலு, முறைந்திடுமிரவிகாந்தலிங்கத்தின்மாசியென்றுரைசெய்திங்களி னு, நிறைந்ததண்கதிர்காண்மதிச்சிலைதன்னினிலவிடைவிழைந்

நலிங்கத்தி, லறைந்திடவெதிர்பங்குனியெனவுரைக்குமர்சறுதிங்
கடன்னிலுமே. ௭

முனைவனைமுன்னம்பூசையின்முறையேமொழிந்தவைதிற
ம்பிடாவண்ண, நனைவழிந்தொழுகுநாண்மலர்தூவி நன்குறப்பூ
சைசெய்தறுசாற், கனைவரிவண்டார்க்கடுக்கையந்தொடையற்க
ண்ணுதலருள்புரிவாயென், றினமலர்த்துணைத்தாளிருநிலமிசை
யில்வீழ்ந்துவீழ்ந்திறைஞ்சிடவேண்டும். ௮

எழிறிகழிரத்தினவிலிங்கநன்காகவெய்திடா தென்னிறுகி
ளந்தேன், வழிமலர்ச்சாந்தமுதலியதரும்பொன் வெள்ளிகற்செ
ம்புமற்றிவற்றால், விழைவுடனிழைத்தலிலிங்கத்தின்முருகுவிம்
மியநறுமலர்தூவிக், குழைவுடன்வழுத்திவணங்கலுமாமென்று
ரைத்திடுங்கோதறுநன்னூல். ௯

பன்னிருமதியுங்கழிந்தபினவைத்தானநன்குதவிநம்பரனை,
முன்னாவேதியர்களனேகருக்கடிசி லூட்டியபின்முகைவிண்ட,
மென்மலர்தூவிவணங்கிலிங்கங்களியாவையும் விளங்கிழைபாக
ன், மன்னுபொற்கோயில்வைக்கமற்றன்றேன்மறையவர்க்குத
விடவேண்டும். ௧௦

இவ்வகைவிரதஞ்செய்தபினவியபோசனத்தினாலிறையவ
ன்றன்னைச், செவ்விதிற்றுதித்தோர்கயிலைசென்றடைவாரொன்ற
லுந்திங்கறுதவத்தால், வெவ்வினையகற்றுமுனிவரர்வியபோகன
த்துதிவிளம்பெனமிளிரு, நவ்விவாள்விழியாள்பங்கனைத்தொழு
துருதனுநவையறவுரைத்தான். ௧௧

பாசுபதவிரதமுரைத்தவத்தியாய
முற்றிற்று.
ஆக திருவிருத்தம். ௧௨௪௬.

எண்பதாவது

வியபோகனத்தோத்திரமுரைத்த

வத்தியாயம்.

நிறைந்துறைசிவனைச்சுத்தனைப்பவனை நிருமலனையெங் குமேவிச், குறைந்திடாப்பரனையமலனையென்றுங்கோதறுசருவ னையொளிருஞ், சிறந்துறைபடிகவுருவனையாருஞ்சேவடிதொழவு ணாதேவே, யுறைந்திடுமெனதுபாவங்களெவையுமோட்டவேயின் னருள்புரிவாய். ௧

அனந்தனைப்பஞ்சமூர்த்தியாய்ச்சருவ வித்ததாபார்த்தெ ழுகணங்க, ளினம்புகழ்ந்தேத்துஞ்செச்சனைநீலகண்டனைச்சி கண்டியாயிறையாய்ச், சினந்தலைமழுங்காச்சூலியாய்முதலாய்த் திகழ்ந்திடுபகவனையுறையுங், கனங்குழைபங்சாவென்பவமுழு துங்கட்டறவருள்புரிந்திடுவாய். ௨

சாற்றிடுதக்கன்புதல்வியாயிமவான்றனையையர்மாதேவி தானைப், போற்றிடுமுமையாய்க்கௌரியாய்வரதை யாயொளி பொருந்துபாடலையாய், வெற்றிணையில்லாநந்தியாதரவாய்மா யையாய்விளங்கிடுமுறையுங், கீற்றுவெண்பிறைநேர்நுதலினையெ ன்றன்பவமெலாங்கெடவருள்புரிவாய். ௩

சத்திகளெல்லாந்தொழுதிடற்குரிய சத்தியாய்மனோன்ம னிதானைத், தத்துவமெவையுந்தழுவிநிற்பவளாய்த்தகைபெறு வானவர்முதல, வெத்தனைகோடியுயிருளவெல்லாமீன்றதாயாகி நன்குறையு, மத்தனோர்பங்கிலமர்ந்திடுவல்லியென்பவமகன்றி டவருள்வாய். ௪

கணங்களுக்கெல்லாமீசனாயிறைவன் கழலிணைபூசைசெய்
பவனாய்ப்,பணங்கிளர்பேழ்வாய்ப்பாப்பணைமேவிப்பணிக்கடன்
முகட்டிணிற்றுயிலு, மணங்கமழ்துளபமாயவன்முதலவானவர்
வழுத்திடவுறையுங், குணங்களின்மிக்கநந்தியென்வெய்யகொடு ரு
வினையாவையுந்தவிர்ப்பாய்.

பொன்வரைமுதலவரையெலாமிடிக்கும்புனைமருப்புடைய
னைப்போற்றி, யுன்னிமெய்யடியார்யோகமாக்கயிற்றாலுளக்கமலத்
தறியதனின், மன்னிடப்பிணிக்கப்படுபவனாகிமதத்தொடுமுறை
யமைக்கரத்தோ, யென்னுடைப்பவங்களியாவையுநடுங்கியிரிந்தி சு
டவின்னருள்புரிவாய்.

அசுரரையெல்லாஞ்சோறல்செய்பவனாயடர்ந்திடுகளிற்றுவா
கனனாய், மிசையுறுதேவசேனைகட்கெல்லாமுதல்வனாய்விண்
ணவர்கோமா, னசையொடுமேத்தவருள்புரிபவனாய்க் கந்தனாய்
நன்கமர்ந்துறையுந், தசையறுவெள்வேற்குமரவேள்வினைகளியா எ
வையுந்தடிந்தருள்புரிவாய்.

குறைவிலாச்சருவன்முதலினோர்தாமுங்கோதிலாவுருத்திர
ர்தாமுஞ், செறிசதிரிரவிபன்னிருவருஞ்சொல்வசுக்களுந்திசைக
ள்காவலரு, முறைசெய்சாரணர்களியாவரும்பொருவில்சித்தரு
முறையியக்கர்களு, மறைதருவிடனாகங்களுமென்றனருவினைய அ
கற்றுவாராக.

கின்னரர்யாரும்வித்தியாதரரு மசுரருங்கலுழருங்கேழல்,
பன்னுசீர்வசிட்டன்முதலியமுனிவர் தாமுநற்பிதிர்க்களும்பரம,
முன்னினரேத்துஞ்சத்திகளியாரும் வான்முகட்டுறையரம்பைய
ரும், மன்னிடுங்கோட்களொன்பதுமென்றன்வல்வினையாவையு கூ
மாய்க்க.

திரிதருகின்றவிராசியுமுடிக்களியாவையுஞ்சிற்றமோட்டெதிர்ந்து, வெருவரத்தோன்றும்பூதனுயகருமிறைவனேறிட்டமும்வி ண்வாழ், பொருவிலாக்காமதேனுவும்வீரபத்திரனும்புகழ்ந்தசாத் தாவும், வருமூலைக்கனிவாய்ந்துற்கையுமென்றன் வல்வினையா வையுமாய்க்க. க0

அண்டமாமெலையுங்காற்றிடுகொற்றவுருத்திராரியவென்வி னைகள், விண்டுபோம்வண்ணமருளுகவென்றுபுகல்வியபோகன த்துதியை, மண்டுவெவ்வினைகளிரிந்திடவுணாத்தோர்மாசிலாத்த வமொடுஞானங், கொண்டவருறையுமுருத்திரலோகங்குறுகுவ ரெனவுணாத்தனனால். கக

வியபோகனத்தோத்திரமூணாத்தவத்தியாய
முற்றிற்று.
ஆக திருவிருத்தம். கஉ௫எ.

எண்பத்தோராவது
மாதவிரதமூணாத்தவத்தியாயம்.

—※—

கூறினகேட்டமாதவமுனிவர் கோதிலாச்சூதனைநோக்கி யாதிருமதியிற்செய்யுநல்விரதமியாவையுமடைவினிலெடுத்துத் தேறிடவிரித்துக்கூறுவாயென்றுசெப்பலுந்தீயுமிழ்ந்திலங்கிப் பாறுதாழ்சூலிகழலிணைவணங்கியாங்கவன்பகாலுற்றனனால். க

வேறு.

பொற்றுறைத்திங்களிற்பொருவிலாதெதி
[illegible]பிரிவற்றினுறெழிந்
தாற்றசால்சோறும்டையடிசின்மற்றைய
சாற்றுநாட்களிராத்தகவினுண்டபின்.

ஈருவர்வினுமழுவேந்துமண்ணலை
வேரிநாண்மலர்பலதூவிவேதியர்க்
கோதறுகபிலையாவிடபமீய்ந்தவர்க்
காதரவடிசினன்களித்தல்வேண்டுமால். ௩

மையறீர்ந்திட்வெதிர்மாசித்திங்களி
லொய்யெனவொருபதினுன்குமுண்டிவிட்
டெய்துநாளவையுமெள்ளியைந்தசோற்றினை
யுய்திறநினைந்திரவுண்ணல்சாலுமால். ௪

பொருந்துபூரணைதனிற்புனிதனுக்கியல்
திருந்தியகிருதகம்பளத்தைச்சேர்த்திமை
தருந்திறகாளையாதகவினீய்ந்துசோ
றருந்திடவேதியர்க்களித்தனன்றரோ. ௫

பின்னுறுபங்குனிப்பிறக்குந்திங்களில்
மன்னுமட்டமிசதுர்த்தசியில்மாசற
வுன்னிடாதுண்டிநீத்தொழிந்தநாளெலாம்
துன்னிராச்சாமைநன்கருந்தல்தூய்மையாம் ௬

அய்யனைப்பூரணையதனிற்பூசைசெய்
தொய்யெனச்சென்னிறக்காளையாவுடன்
மையறீர்ந்திடும்வகைவழங்கிமாமறைச்
செய்யபூசுரர்க்குணவளித்தல்செம்மைத்தே. ௭

சித்திரைத்திங்களிற்சேர்ந்தநாளெலா
மத்தம்வந்தடையிற்பாலடிசிலுண்டுநம்
மத்தனைப்பூரணையதனிலாயிதழ்த்
தொத்தமாமலர்கடூய்த்தொழுதல்வேண்டுமால். ௮

பூசனைமுடிந்தபின்பொருவில்வெள்ளையா
வேசலில்காளையோடுதவியின்சுவை
மாசிலாவடிசிலைமகிழ்ந்துவேதியர்க்
காசறுகருணையோடளித்தல்சீரிதே. கூ

புகழும்வைகாசியிற்பொருவிறுளெலா
மகமகிழ்ந்தாவிரவடிசிலுண்டுபின்
றிகழ்தருபூரணையதனிற்றேவனை
வகைபலமலர்கடேய்வணங்கல்வாய்த்ததே. க0

வணங்கியார்புகைநிறம்வாய்த்தகாளையா
குணங்களினுயர்ந்தவர்க்குதவிக்கோமறை
பிணங்கியநாவுடைப்பெரியவந்தணர்க்
கணங்கறவடிசில்நன்களித்தல்செவ்விதே. கக

ஏர்தருமாணியென்றிசைக்குந்திங்களிற்
பூரணைதனில்மதிபுனைந்துவண்ணலை
வேரிநாண்மலர்பலவிதியினேந்திநல்
லார்வமோடருச்சனையாற்றலானதே. கஉ

மற்றைநாளடிசிலைமறையவர்க்கெலாங்
குற்றமின்றுகநன்கூட்டிக்கோடுடைப்
பெற்றமோடாவினைநல்கிப்பின்னரோ
யுற்றநற்சோரிரவுண்ணல்சாலுமால். கங

ஆடியாந்திங்களுளவையுமாசற
நாடியல்லிடையினிலுண்டுநன்கதாய்க்
கூடியபூரணையதனிற்கூன்பிறை
சூடியவிறைவனைத்தொழுதுபூசித்தே. கச

எய்தியமற்றைநாளிளையில்வெள்ளையா
வொய்யெனக்காளைநன்குதவிவேதியர்க்
கையனதருணினைந்தடிசிலன்புடன்
மையல்கெட்டோடிட்டவழங்கல்வேண்டுமால். கரு

ஆவணித்திங்களுண்முழுதுமன்புட
ளேவறவிரவுவந்தெய்தினுண்டுபின்
மேவியபூரணையதனில்வெம்மழுத்
தேவனைப்பூசனைசெய்தல்சிறிதே. கசு

ஆலமார்மிடற்றரனடியைப்போற்றிசெய்
தேல்வுறுவேதியர்க்கன்னமீந்துறக்
காலினுள்வெள்ளையையுடையசாளையா
மாலறக்கேட்டிடவழங்கல்வேண்டுமால். கஎ

மொழிபுரட்டாதிநாண்முழுதுஞ்செஞ்சிகை
யழலிடைச்சொரிந்தநல்லவியின்சேடத்தை
விழைவினிலருந்திவிண்போயநற்றரு
நிழலிடைநிலவிடவுறைதனீரதே. கஅ

உறைந்துபூரணைதனிலுமையொர்பாகனைத்
திறம்பிடாப்பூசனைசெய்தங்கன்னதை
யறங்கனாநாவினர்க்குதவியாவினை
மறங்கிளரோருடும்வழங்கன்மாட்சித்தே. கக

திதிலைப்பசியெனுந்திங்களுளெலா
மாதுயர்கேடவிர்வுண்டுவந்தறு
மேதமில்பூரணையதனிலின்னதைப்
போதுதூயீசனைப்போற்றல்பண்பரோ. உ0

போற்றிநற்கபிலையாப்பொருந்துகோடியர்
மாற்றிடாவிடபமும்வழங்கிமாமறை
சாற்றிடுவேதியர்தமக்குவெண்டயி
ராற்றல்சாலன்னநன்களித்தனன்றோ. உ௧

இயலுறுகார்த்திகைத்திங்கணுளெலா
மயலறவிரவுவந்தெய்திலுண்டுபின்
னயமலர்க்கொண்டுபூரணையில்நம்பனைச்
செயிரறுபூசனைசெய்தல்வேண்டுமால். உ௨

கடுநடைக்காளையைக்காசிலாதவர்
வுடனுறநல்கிநன்மறைகளோதிய
மடமிலாக்கேள்விவேதியர்க்குமாசிலா
வடிசுவையன்னநன்களித்தலாகுமே. உ௩

மார்கழித்திங்களுண்முழுதுமாசற
வோதறவிரவுவந்தெய்திலுண்டுறு
பூரணைதனிலிறைபொருவிருளினில்
வேரிநாண்மலர்பலதூவல்வேண்டுமால். உ௪

வெண்ணிறக்காளையாவிருப்பினீந்துபின்
பண்ணெனக்கனிந்ததேன்பாலொடன்னத்தை
யண்ணல்நான்மறைபுகலந்தணாளருக்
குண்ணிடவைப்பொடுமுதவல்வேண்டுமால். உ௫

இன்னவாறெடுத்துநானிசைத்தநோன்பினை
மன்னுறவியற்றினோர்வயங்குவானுறுதற்
கன்னல்நேர்மொழியுமைகவினும்பங்கினன்
பொன்னடித்தாமரைபொருந்துவார்களால். உ௬

மாதவிரதமுறைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௨௮௩.

எண்பத்திரண்டாவது
உமாமயேசுரவிரதமுரைத்த வத்தியாயம்.

—*—

ஈருவாவட்டமியெடுத்தியம்பிடு
மோரிருசதுர்த்தசியிவற்றிலுண்டிவிட்
டேர்தரப்பருவமோரொன்றினேண்பினைச்
சீர்பெறமகிழ்வொடுஞ்செய்தபின்னரோ. க

பொன்னினால்வெள்ளியாற்பொருவிலாவெழின்
மன்னுலிங்கத்தினையுமையைவண்டிமிர்
பன்மலர்பற்பலபழுதின்றாகத்து
யென்வினைதவிர்த்தருள்வாயென்றேத்தியே. உ

பரவிலிங்கத்தினைக்கொண்டுபன்மணி
முரசெழுந்தார்ப்பவெண்மதிமுடித்தவன்
மருவியகோயிலினடைந்துமாமறை
யொருவனுக்கருளொடுமுதவல்வேண்டுமால். ங

ஆட்கப்பசும்பொனாலமைத்தலிங்கத்தின்
மாடுறச்சூலமும்வைத்துவாத்தொறு
நாடியோர்பருவநன்கேத்தல்செய்தவ
ரேட்விழ்கொன்றையோனுலகிலெய்துவார். ச

கார்த்திகைத்திங்களிற்கவினவோர்பொழு
தேத்துறுபூரணைதன்னிலுண்டியல்
வாய்த்தவீரட்டமிவருசதுர்த்தசி
நீத்திடாவுண்டியைநீத்துறைந்தபின். ரு

நெய்யொடுசெருக்கணைநிகழ்த்துமெள்ளிவை
வொய்யெனவேதியர்க்குதவுமங்கையர்
பையரவசைத்தவன்பங்கின்மேவிய
செய்யவாயுமையவள்பாதஞ்சேர்வரால். ௬

சாற்றுமார்கழிதனிற்சடிலநம்பனைப்
போற்றிநாண்மலர்கொடுபூசைசெய்தட்
டேற்றையவ்வ[illegible]னுக்குதவுமேழையர்
கோற்றொடியுமைபதங்கூடுவார்களால். ௭

மருவுதைத்திங்களில்வணங்கிலிங்கமு
னெரிபொனீர்சூலம்வைத்திறைஞ்சிச்சூலத்தை
யருமறையவர்களுக்களித்தமங்கையர்
வருமுலைமலைமகள்பாதமன்னுவார். ௮

மாசியாந்திங்களின்மணியிடற்றனைப்
பூசனைசெய்தெழில்பொலிந்ததேரினைத்
தேசிகற்களித்திடுதேமென்கோதையர்
பாசி[illegible]ழுமையவள்பாதஞ்சேர்வரால். ௯

பங்குனித்திங்களிற்பரவிலிங்கத்தைச்
செங்கையாலருச்சனைசெய்துதேசிகர்க்
கங்கலிங்கத்தினையளித்தமங்கையர்
திங்கள்போனுதலுமைபாதஞ்சேர்வரால். ௧௦

சித்திரைத்திங்களில்வெள்ளியாற்றிக
ழுத்தனைச்சிவலிங்கமுன்னுறைகுபேரனை
வைத்துவணங்கிமாமறைசொல்வேதியர்க்
குய்த்தவர்சிவகதியுற்றுவாழ்வரால். ௧௧

இவ்வகைதிறம்பிடாதியல்வைகாசியிற்
செவ்விதினியற்றினோர்தேம்புநுன்னிடை
மௌவலங்குழலுமைபங்கன்வைகிய
கௌவைநீரருவிபாய்கயிலைசேர்வரால். கஉ

அலக்கணற்றிடவருமானித்திங்களி
னலத்தகுப்சும்பொனல்லிலிங்கத்தின்னெழில்
வலப்புறத்தேனமுமற்றையோர்புற
நிலைப்படவன்னமுநிலவவைத்தரோ. கஙு

தேனவிழ்மலர்கடேய்ப்பூசைசெய்துட
லேனமோடன்னமுமெழிலிலிங்கமு
நான்மறையந்தணர்தமக்குநல்கினோர்
கானமர்கொன்றையோன்கயிலைசேர்வரால். கச

ஆடியிலிறைவனையேத்தியாசற
நாடியோர்வேதியன்றனக்கொர்நன்மனை
தேடியபொருளொடுமீய்ந்தசேயிழை
தோடலர்குழலுமைபாதந்துன்னுவார். கரு

உரைக்குமாவணியினிலிறையைப்போற்றியோர்
சருக்கரைவரையினிற்றானஞ்செய்திடு
முருக்கிதழ்மடந்தையர்முதல்வன்பாங்கில்வாழ்
புரிக்குழலுமைப்தம்பொருந்துவார்களால். கசு

புகழ்புரட்டாதியிற்புகன்றவாற்றினின்
மகிழ்வொடுவிரதநன்காற்றுமங்கையர்
துகிரிதழ்மலைமகள்சுடரும்பொன்னிழ்
வகைமலர்த்துணையடிமன்னுவார்களால். கஎ

நண்ணுமைப்பசியினினம்பன்செய்யதாட்
ட்ண்மலர்பரவிநெல்வனையைத்தானஞ்செய்
துண்மகிழ்ந்திடுபவருமையொர்பங்கினன்
வண்ணநாண்மலரடிமன்னுவார்களால். க௮

மன்னுகார்த்திகையெனுமாசிறிங்களிற்
றுன்னுபுதேவர்கள்சூழச்சூழ்சுடற்
பொன்னிறுலியற்றியபொருவிலீசனை
சன்னனேர்மொழியுமையோடுங்காண்டக. க௯

மாசில்பொற்பீடத்தின்வைத்தங்கேத்திநற்
பூசுரர்பெறுகெனப்புசன்றுநல்கினோர்
காசறுதவத்தினரோனுங்கண்ணுறுந்
தேசொடுமுறைசிவலோகஞ்சேர்வரால். உ0

உரைத்திடுமுமாமகேச்சுரநன்னோன்பினை
யருத்தியாலாற்றியமைந்தரண்ணறன்
மருக்கமழ்மலர்ப்பதமடைவர்மாதரும்
விருப்புடன்செயிலுமைபாதமேவுவார். உக

உமாமயேசுரவிரதமுரைத்த வத்தியாய
முற்றிற்று.

ஆக திருவிருத்தம். க௲௦ச.

எண்பத்துமூன்றாவது
பஞ்சாக்கரவிதியுரைத்த
வத்தியாயம்.

---*---

அறைந்தவிவ்விரதநன்காற்றியீற்றினிற்
சிறந்தவைந்தெழுத்தினைசெபிக்கவேண்டுமென்
றுறைந்திடுதனன்குரைப்பமாதவர்
நிறைந்தவைந்தெழுத்தின்வீறுரைத்திநீயென்றார். ௧

வேறு.

உரைத்தல்கேட்டுமுன்னுமையவளிறைவனைநோக்கி
யருத்தியோடுமைந்தெழுத்தின்வீறறைகெனவீசன்
விரித்தவாறியான்விரிப்பனீர்கேண்மினென்றிறைநாள்
தரித்தசென்னிமாருதனுஞ்சாற்றினனன்றே. ௨

உலகமியாவையுமுன்னிடத்தொடுங்குநீதானு
நிலவவென்னுமையமர்ந்திடுகாலையினின்ற
மலைவில்வேதமுமாகிநூல்களுமெனதருளா
லலகில்வீறுசேரைந்தெழுத்தினிலமர்ந்தனவால். ௩

அன்னகாலையான்பரமவான்மாவுமாயிழைநீ
மன்னுசீர்ப்பிரகிருதியுமாகிமாசகலத்
தன்னையொப்பிலாத்தவத்துறையொழுகுமாதவத்தோ
ருன்னிடப்பிரிந்துறைந்தனமுவந்துலீலையினால். ௪

அயகாலையிலலையெறிபுனலிடைத்துளவ
மாயன்கண்படைபொருந்தலுமவனுந்திமடுவிற்
சாய்பொனுயிதழ்க்கமலமென்பொகுட்டிடைக்கவின்
மேயவாண்முகமைந்தொடுமுதித்தனன்விரிஞ்சன். ௫

உதித்தமற்றவன்படைத்திடவலியுறவேண்டி
மதித்தங்கென்னடிவணங்கலுமறையொருநான்குந்
துதிக்குமைந்தெழுத்திணையைந்துமுகத்துநான்சொல்ல
விதிர்ப்பமெய்யுளங்களிகொளமிக்குணர்ந்தனனால் ௬

உணர்ந்துதானுறப்படைத்தநற்றசப்பிரமருக்கங்
கணங்குநோய்கெடவைந்தெழுத்தினையுணர்த்திடலும்
வணங்கிமுஞ்சவான்மலையினிலெய்திமாசகலக்
குணங்கண்மிக்கவர்சோதிலாத்தவமியற்றினரால் ௭

அரியமாதவமாற்றுனர்மருங்குசென்றடைந்து
பரிவில்யோகமுமைந்தெழுத்தியல்புநான்பகரத்
தெரியமற்றவருணர்ந்துதெண்டிரையுலகெல்லாம்
விரியும்வண்ணநல்லறிவினால்விளங்குறப்படைத்தார் ௮

விரியும்வேதத்தின்சாரமாய்விரித்தெடுத்துரைத்தற்
கரியவுட்பொருளுடையவாயழிவிலாமுத்தி
பரிவின்றுகநன்களிக்குமைந்தெழுத்தினைப்பகர்தற்
குரியநாவினர்முத்திவீடுறாதொழிகுவரோ. ௯

பரமன்றன்னைநன்குணர்ந்துமெய்ப்பரமனல்லுருவாங்
குரவன்றன்னுழைச்சென்றவன்கோதிலாவருளைப்
புரியும்வண்ணமேதொழும்புசெய்துளங்கொளப்போற்றி
வருடமொன்றுறவணங்கிநன்கொழுகுதன்மரபே ௧௦

ஒழுகுநாளினிலாங்கவனுளங்கனிகுழைந்து
குழகனாலயந்தன்னில்வார்குலாகடற்கரையிற்
கழுமநீணதிக்கரையினிற்கலசநீராட்டி
மருவலன்பெறவுணர்த்தான்குணர்த்திடலுரித்தே ௧௧

உணர்ந்தவைந்தெழுத்தினையோரோவெழுத்தினுக்கிலக்க
கணக்குநோய்கெடப்பகலருந்தாதுநன்கமர்ந்து
பணக்கோள்பாம்பணையசைத்தருள்பரமனைமுன்னி
யுணக்கிவல்வினைமாசறச்செபித்திடல்வேண்டும். கஉ

மனையகத்தினுமருவுமான்கோட்டத்துமன்னி
முனைவர்போற்றுபுசெபித்தனன்கென்பர்மூதறிந்தோர்
நினையின்மற்றத்தினிழன்மணிமிளிர்நதிக்கரையிற்
கனைதிரைக்கடற்கரையினிற்செபித்தனன்காமால் கங

அவையினுந்தடவரையினிற்செபித்தனன்றதனிற்
சவனவேறுயர்கண்ணுதற்கடவுள்கோயிலின்க
ணவகடர்தரச்செபிக்கினுமனமெடுத்துரைத்த
வெவையினுஞ்சிறந்ததிகமாமிருவினைதொலையும். கச

விரல்சட்டமினிற்செபித்தலில்விரல்வரையதனிற்
பரிவினிற்செபித்திடுதனன்கதனினும்பகரும்
பொருவிலாதொளிர்புத்திரதீவநற்பலத்தி
னொருவிடாவகைசெபித்திடனன்கெனவுரைப்பார். கரு

பவளமாலையிற்செபித்திடிற்பலமிகுமதனிற்
றவளநீடொளிதவழ்படிகத்தினிற்செபித்த
லவையின்மற்றதினன்கதாநளிகடன்முத்திற்
சிவனைமுன்னுபுசெபித்தலன்னதிற்சிறந்திடுமால். கசா

திகழுமுத்தினிற்செபித்தலினன்கதாஞ்சிறந்த
துகளில்பத்திராக்கந்தனிற்றூய்மையாற்செபித்தல்
டகலுமாடகமணியினிற்பொற்புறச்செபித்த
னிகரின்மற்றதினன்கெனநிகழ்த்துவான்றே கஎ

மிக்கநல்லொளியாட்கமணியினும்வீறு
ரக்கமாலையிற்றருப்பையைமுடிந்ததுதன்னிற்
றக்கமெய்ம்மையைந்தெழுத்தினைச்சங்கவெண்குழைதாழ்
நக்கன்சேவடிமுன்னுபுசெபித்தனன்காமால். ௧௮

இருபத்தைந்துநன்மணியினிற்செபிக்கிலீறில்லா
மருவுதற்கரும்பேரின்பமுத்திமன்னுறுமாற்
பரிவினோரிருபானெட்டெனப்பகர்மணியி
லொருவிடாதுதான்செபித்திடிலுடைமிகப்பருகும். ௧௯

தூயவாகியமுப்பதுமணியினுந்தூலங்கி
யேயுமைந்துநன்மணியினுமிடியெனமுழங்கிப்
பாயுமால்விடைப்பாகனைந்தெழுத்தினைச்செபிக்கின்
மேயபொன்வரைவெள்குறவிழுநிதிமேவும். ௨௦

பத்தொடைந்துநன்மணியினிற்பழுதறச்செபிக்கிற்
றத்துநீருலகுட்படுபகையெலாஞ்சாயு
மத்தனைத்தொழுதாறுநன்மணியினிற்செபிக்கி
னித்தஞ்சாந்திவந்தெய்திடுநிகழ்த்திடின்மாதோ. ௨௧

அங்குட்டந்தனிற்செபித்திடின்முத்திவந்தடையு
மிங்குத்தற்சனியாற்செபித்திடிற்பகையிரியுந்
துங்கமத்திமையாற்செபித்திடிற்பொருடொகுமாற்
றங்கணாமிகையாற்செபித்திடில்வருஞ்சாந்தி. ௨௨

ஒருவர்கேட்டிடச்செபித்தலிற்கேட்டிடாதுருகிப்
பருவினோடுறச்செபித்தனன்காகுமாற்பரமன்
மருவுலாங்கழலிணைந்துதன்மனத்தினுற்செபித்த
லுரியதாங்கதியென்றுமெய்யுணர்ந்தவருரைப்பார். ௨௩

உரைத்தவிவ்வகையுள்ளுறவுணர்ந்துதான்செபிப்போர்
கருத்தினுயினும்பிறர்மனைக்கருதிடாதுளத்தைத்
திருத்திப்பொய்யுரையாதுவெந்தீநரகளித்து
வருத்தஞ்செய்திடுகொலையினைமறந்திடல்வேண்டும். உ௪

ஒருவரன்னமுண்ணலாகாதுபாயலின்மேற்
பரிவிறேடுதான்கிடந்துநீள்பார்மிசைநின்று
மரிதிற்பெற்றசிரன்புருபுதல்வர்தம்மோடு
மிருகாத்தினுமருந்தலாகாதெனவிசைப்பார். உ௫

ஓரிலைப்புறந்தன்னிலுமொருவர்கையகற்றுந்
தேரில்வீதிகட்டம்மிலுமருந்துதரீதாற்
சார்திடற்றிறைகளைகழற்சேவடிகருதி
யாரவுண்டிடார்சிறிதருந்திடலறனுமால். உ௬

விரித்ததண்சினைத்தான்றிநீள்கள்ளிமேவெருக்கென்
றுரைத்தவற்றுறுநிழலுமொருவன்மெய்நிழலும்
பரப்புசெஞ்சுடர்விளக்கதுநிழலுமெய்ப்படாம
லிருத்தல்வேண்டுமாலியல்புளிவழாதுளத்தெண்ணி. உ௭

கழுதையொட்டகமாடுஙாயிவைகளின்காணின்
றெழுதரூக்துகளொருவர்தம்முயிர்ப்பிருஞ்சுளகாற்
கெழுமுசாத்திவைகிட்டிடாதகன்றிடவேண்டும்
பழுதிலாதவைந்தெழுத்தினைப்பாங்குறச்செபிப்போர். உ௮

விலையின்றாகியகஞ்சுகமெய்யினிலணிந்துந்
தலையில்வெண்டுகில்சுற்றியுமொழிகள்சாற்றியுஞ்சீர்
நிலவுவங்கையிற்பவுத்திரமின்றியுநிகழ்த்து
மலகில்சோதியைந்தெழுத்தினைச்செபித்திடலாகா. உ௯

வெருளியோடுறுசோம்பினைவிட்டுமெய்ப்பொருளாந்
திகழுமைந்தெழுத்தியல்பொடுஞ்செபித்திடுகாலை
யிகழுநீசரைக்கண்டிடிலெறிதிரையெழுந்த
பகலவன்றனைப்பாற்படக்கண்டிடல்பண்பே, ௬௦

பரிவினோடுறக்கிடந்துநீள்பார்மிசைநின்றுந்
தெருவகத்தினுஞ்செபித்திடறீதெனலாமா
லுரைசெய்பட்டினிற்பலகையிற்கலையினீருரியின்
மருவிவைகுபுசெபித்தனன்கெனவழங்குவரால். ௬௧

குரவனேயிறையிறைவனேகுரவனன்னவனோ
பரிவின்மந்திரமாதலாற்பகர்ந்திடுகுருவை
மருவுபூசனையாற்றிடவேண்டுமான்மறைக்கு
மரியகண்ணுதலாதியைந்தெழுத்தினைச்செபிப்போர். ௬௨

மலையிற்காட்டினில்வளர்தருமரசினன்னிழலி
னிலவுகின்றவைந்தெழுத்தினைநிகழ்த்துமீரிலக்க
மலைவிலாவுளத்தொடுஞ்செவித்தழலிடையறுகைக்
குலவவிட்டவர்பன்னெடுநாட்குலவுவரால். ௬௩

உருவஞாயிறுகண்ணின்றுநோக்கியோரிலக்கம்
பரவியோதிநீள்பலாசினைப்பான்மையால்வளர்த்த
விரியும்வெவ்வழலிட்டவர்மெய்நனிவாட்டு
மரியநோய்கண்மற்றெவற்றையுமகற்றுவரன்றே. ௬௪

அடைவினாலுருச்செபித்தொருதிங்கணீரருந்தி
னுடலின்மேவிடுநோயெலாமுடைந்திரிந்தோடு
மிடையறுவகைபதினொருமுறைநணியிசைத்து
விடமருந்தினுமமுதமாய்விளங்கிடுமன்றே. ௬௫

அரவமோரிருசுடர் கனாவிழுங்குமக்காலைப்
பிரமிச்சாற்றிலாயிரமுருப்பெட்புறவோதி
விளாவின்மாந்திடில்விளாகமழ்வெள்ளிவெண்கோட்டு
மளாமலர்ப்பொருட்டுறைபவள்வாக்குரீங்காளால். ௧௬

காலைமாலையிற்கடன்கழியாதபாதகமு
மேலுநாய்பன்றிகோழியீனர்கடொடுமன்னருஞ்
சாலவுண்டவெம்பாவமுந்தகைமையைந்தெழுத்தை
யாவிதாசநூற்றெட்டுருச்செபித்திடின்மாயும். ௧௭

மறைசொலந்தணர்தமைக்கொலைபுரிந்தமாபாவ
நெறியிலோரிலக்கஞ்செபித்திடப்பெறினீங்கு
முறையிலோர்பதினாயிரமுற்றுறச்செபிக்கி
லறைசெய்பாதகம்யாவையுமகன்றிடுமன்றே. ௧௮

இலக்கமோதிலிந்தியசயமெய்திடுமுளத்தைக்
கலக்குதீவினைக்காட்டினிற்புகுந்துமைம்புலனு
நிலைப்படாதவீனைந்துவாயுவுநிலைப்படுமா
லலக்கணற்றிடவைந்திலக்கஞ்செபித்திடிலே. ௧௯

ஓங்கன்மேவியமுழையினிலுறைந்துளமொன்றாய்ப்
பாங்கிற்பத்துநூறாயிரஞ்செபித்திடிற்பழைய
வீங்குவல்வினையாவையும்விட்டிடவிறைவன்
பூங்கழற்பதம்பொன்னெனப்பொருந்துவரன்றே. ௨௰

இறைவனைந்தெழுந்தோதியகாதையின்புற்
றறைகுவோரதுகேட்டுளோரியாவருமடைக்குஞ்
செறியும்வல்வினைதிசைமுகம்படாதாமடமான்
மறியுலாங்கரத்தண்ணறன்மலர்ப்பதமடைவார். ௨௧

பஞ்சாக்கரவிதியுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௱௨௫.

எண்பத்துநான்காவது

தியானவிதியுரைத்தவத்தியாயம்.

என்னனுங்காவிருவினைக்குறும்பையெறிந்தமாமுனிவர
ரெல்லாம், பன்னிடுஞ்சிவவெச்சத்தினதியல்பைப்பகர்ந்தனைப்ப
ழுதறவெமக்கு,முன்னிடுதியானவெச்சநல்லியல்பைமொழிகுவா
யென்னனுமறிவு, மன்னியசூதன்மற்றதனியல்பைவகுத்தனன்
மொழியலுற்றனனால். க

வருமுலையுமையாடனொடுமிருக்குமணிமிடற்றிறையவ
ன்முன்ன,ரிருவினைக்கடிந்தசனகனைமுதலமுனிவரரியாவருமெ
ய்திக்,கருவிடமருந்தியுலகெலாங்காத்தகடவுளேயருளெனத்தொ
ழுதும், புரிசடையிறையோனவர்முகநோக்கிமுறுவல்பூத்தின்ன
னபுகலும். உ

கருவிடக்கொடுமையேற்றினையுளவில்வாட்கையாங்கடுவி
டக்கொடுமைக், கரிதினிற்பெற்றமக்கண்மேல்மண்மேலாகிய
பொருளின்மேன்மற்றைப், புரியவிழ்கூந்தன்மாதர்மேல்வைத்த
நசையினாற்போக்கறகின்ற, விருவினைத்துவக்குண்டாகுமிவ்வா
ழ்க்கையெறிந்தவன்மெய்யுணர்ஞானி. ங

அறைதருசிவனல்வினைப்பயத்தாற்றுறக்கத்திலமருமல்லது
னி, னிறைதருபலத்தானரகிடைகுளிக்குநிகழ்த்துமற்றவைசம
மாகிற், செறிகதிர்விரிக்குமணிகொழித்தெறியுந்தெண்டிரையா
டைசூழ்ந்தழகா, லுறைதருவட்டவிரிநிலைஞாலந்தன்னிடையுதி
த்திடுமன்றே. ச

போற்றிடுசிவனூற்பிசமற்றைச்சுவேதசம்புகல்சராயுசந்தா
ன், சாற்றிடுகின்றவண்டசமெனுமின்னால்வகைச்சார்ந்துமண்மீ

றித், றேற்றுமுற்பிசத்தையொழிந்திடுமூன்றுஞ்சொல்லியவறு டலைக்கோச, மேற்றநல்லுடம்போடுறைதரும்விளங்கவெடுத்து நாமியம்பிடின்மாதோ. ௫

அறைந்தசட்கோசமாவனவுதிரந் தோற்றசையமர்ந்திடுமெ ன்பு, நிறைந்திடுமூளைநிணமெனலாமாலிவற்றினுணிரம்பியவுடம் பைச், சிறந்திடவெடுத்தாங்கன்னைதன்வயிற்றிற் செறிந்திடுபோ தினும்வந்து, பிறந்திடுபோதும்வளர்ந்திடுபோதுமூப்பினுந்துன்ப மேபெருகும். ௬

